எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-1 இதழ்- 11 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | ஜூலை 2025

கட்டுரை

பெண்ணின் பெருந்தக்க யாவுள!
- முனைவர் ஜ. ஜான்சி ராணி
முனைவர் பிபா சவுத்ரி
- மேனகா நரேஷ்
பவுத்தமும் பெண்களும்
- எஸ்.சாந்தினி பீ
வாழ்த்தின் மேன்மை அறிந்து வாழ்க!
- முனைவர் இல. ஜெயந்தி

கதை

மணப்பெண்ணின் அக்காவோ!
- பட்டுக்கோட்டை சுப்பிரமணியன்
அம்மாவின் டைரி
- எழுத்தாளர். இரா. சைலஜா சக்தி
டீச்சர் வீடு
- சத்யபிரபா
தைரியலட்சுமி
- வை.மு.கோதைநாயகி
அம்மா, அத்தாவாகிறாள் ஐரீனா
- சம்சுல் ஹுதா பானு

கவிதை

உனக்கான ஓர் அழகிய கவிதை(மொ.பெ.)
- முனைவர் திருமதி ராஜேஸ்வரி
பெண் கல்வி
- முத்தமிழ் விரும்பி
தெளிவு
- அதிரன்
நதி மீனின் கடல்
- அ.ஈடித் ரேனா

தொடர்கதை

1.Aranyeni
by Vijeni
2.தைரியலட்சுமி
- வை.மு.கோதைநாயகி

மேலும் பல...

உயரமான பெண் புத்தர்
(Lady Buddha) சிலை, வியட்நாம்.

எங்கெங்கு காணினும் சக்தியடா!
சக்தி
பெண்ணிதழ்

மலர்-1 இதழ்- 11 ஜூலை 2025

நிறுவனர் &
தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி [USA]

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா
சுப்ரமணியன்[சிட்னி]

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் [NJ]

Shakthi

Printed and Published by :
E.Satish Rajkumar [Advocate]

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில்
இடம்பெற்றுள்ளகருத்துகள்
அனைத்தும் கட்டுரையாளர்களின்
கருத்துகளே ஆகும். அவற்றுக்கும்
இதழாசிரியருக்கும் எந்தத்
தொடர்பும் இல்லை

உள்ளடக்கம்

கவிதைகள்

1. கவிதை — 2
- சக்தி சுரேஷ்
2. பெண் கல்வி — 6
- முத்தமிழ் விரும்பி
3. கவிதை — 14
- சாந்தினிபீ
4. மனைவி அமைவதெல்லாம் — 24
- சத்யபிரபா
5. தெளிவு — 26
- அதிரன்
6. உனக்கான ஓர் அழகிய கவிதை — 37
- முனைவர் திருமதி ராஜேஸ்வரி
7. நதி மீனின் கடல் — 62
- அ.ஈடித் ரேனா
8. கவிதை — 62
- புனிதா, கோவை
9. கவிதை — 68
- ரிஸ்கா முக்தார்

கதைகள்

1. மணப்பெண்ணின் அக்காவோ! — 13
- பட்டுக்கோட்டை சுப்பிரமணியன்
2. அம்மாவின் டைரி — 15
- எழுத்தாளர். இரா. சைலஜா சக்தி
3. மற்றவை நீங்கள் அறிந்ததே... — 27
- அதிரன்
4. டீச்சர் வீடு — 28
- சத்யபிரபா
5. மனமாற்றம் — 39
- அன்னபூரணி தண்டபாணி
6. "பட்டன் போனும் – பட்டினிப் போரும்.." — 52
- முனைவர். வி ஆனந்தி
7. அம்மா, அத்தாவாகிறாள் ஜரீனா — 63
- சம்சுல் ஹுதா பானு

நூலாய்வு

1. வேங்கை நங்கூரத்தின் ஜீன் குறிப்புகள் – தமிழ்மகன் — 79
- முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

கட்டுரைகள்

2. பெண்ணின் பெருந்தக்க யாவுள! — 3
- முனைவர் ஜ. ஜான்சி ராணி
3. முனைவர் பிபா சவுத்ரி — 8
- மேனகா நரேஷ்,
4. முயற்சி — 7
- பேராசிரியர் எஸ் சாந்தினிபீ.
5. ரம்பா நளகூபரன் — 25
- எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி
6. பவுத்தமும் பெண்களும் — 32
- எஸ்.சாந்தினிபீ,
7. வாழ்த்தின் மேன்மை அறிந்து வாழ்க! — 42
- முனைவர் இல. ஜெயந்தி,
8. கல்வெட்டில் பாரசீகப் பெண்கள் — 71
- முனைவர் எஸ். சாந்தினி.பீ
9. இரட்டை மலர் — 75
- அ. திவ்யகுமாரி கண்ணம்மா
10. அரசுப் பள்ளியில் படிப்பு! ஐந்து குழந்தைகளின் தாய்! தொடர் படிப்பு!தலைமையகப் பணி — 78

நேர்காணல்

1. சுபா காரைக்குடி, நியூஜெர்சி (நேர்காணல்) — 58
- மேனகா நரேஷ்

தொடர்கதை

1. தைரியலட்சுமி — 69
- வை.மு.கோதைநாயகி
2. ARANYANI (கதை) — 73
- VIJENI

எத்தனை எத்தனையோ...
எத்தனையோ பாத்துட்டோம்...,
எங்கிருந்தோ வந்து
காதுக்குள் ரீங்காரமிட்டது
ஆம்., எத்தனையைத் தான்
பார்த்து உள்ளோம்?
கண் நிறைந்த அழுகையோடு
பயணித்த காலங்கள் தான் எத்தனை!
பார்க்கும் முன்னே தெறிக்க விட்ட
கண்ணீர் துளிகள் தான் எத்தனை!
நெஞ்சுக் கூட்டுக்குள் குமைந்து
கிடந்த கேள்விகள் தான் எத்தனை!
விடை தெரியாமல் மக்கிப்போன
வினாக்கள் தான் எத்தனை!
வெறுமையோடு நகர்ந்த
வினாடிகள் தான் எத்தனை!
விடியலுக்காக விழித்திருந்த
இரவுகள் தான் எத்தனை!
வினவும்போது பதில் தெரியாது
விழித்திருந்த பொழுதுகள்தான் எத்தனை!
பார்த்திருக்க கலைந்து சென்ற
கனவுகள் தான் எத்தனை!
பதிலே அறியாது பட்ட
பாடுகள் தான் எத்தனை!
இன்னும் எத்தனை எத்தனையோ ...
அத்தனையையும் தாண்டி
எத்தனையை எதிர்பார்த்து
நகர்ந்து கொண்டிருக்கின்றன
நாட்கள்.

– சக்தி சுரேஷ்

பெண்ணின் பெருந்தக்க யாவுள!

முனைவர் ஜ. ஜான்சி ராணி
ஆய்வு வளமையர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

பெண் என்பவள் தனக்கு அமையும் கணவன் திசைமாறிச் செல்கையில் தன் குழந்தைகளையும் கணவனின் தாயையும் காப்பாற்ற வேலைக்குச் சென்று தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்கப் பாடுபடுபவளாகத் திகழ்கிறாள். மதுவாலும் சூதாலும் வேறு தேவையற்ற பழக்கங்களாலும் கணவன் தன் பொறுப்புகளைத் தவற விடும்போது, தன் குடும்பத்திற்காகப் பெண் மேலும் உழைக்கத் தயாராக இருக்கின்றாள். இத்தகைய பெண்களைச் சமூகத்தில் இயல்பாகக் காணமுடிகின்றது. மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளிலும் இத்தகு பெண் பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன.

சாரதா கண்ணனின் 'நல்ல கணவனுக்கு மனைவியானவள்' என்ற சிறுகதையில், கற்பகம் என்ற பெண் தன் கணவன் நன்கு சம்பாதித்த நிலையிலும் அவனுடைய பொறுப்பற்றத்தனத்தால் தன் நான்கு குழந்தைகள், மாமியாருடன் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றாள். தான் என்ன சொல்லியும் கணவன் திருந்தாத நிலையில் தன் குழந்தைகளுக்காகத் தானே வேலைக்குச் செல்லத் தொடங்குகிறாள்.

புடவைக்கடைக்கு வேலைக்குச் செல்லத் தயாரானவளை அவள் கணவன், "அந்தப் புடவைக்காரன் நல்லவன் அல்ல. நான் திருந்தி விட்டேன். இனிமேல் ஒழுங்காக நடந்து கொள்கிறேன்" என்று கூறி நிறுத்துகின்றான். சில காலம் கழிந்தன. மீண்டும் அதே நிலை. மீண்டும் வேலைக்குச் செல்ல முடிவுசெய்து புறப்பட்டு விடுகிறாள். தன் மாமியாரிடம் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, வேலைக்குச் செல்கிறாள்.

தாய்க்குரிய கடமையினை நிறைவேற்ற வேலைக்குச் செல்லும் கற்பகம், நீண்ட சடை பின்னி, மஞ்சள் பூசி பொட்டு வைத்து, தாலிக் கயிறுடன் உடலை மறைத்து நூல் சேலை அணிந்து சென்றாள். இதைக்கண்ட கடைக்காரர், "இப்படியெல்லாம் வேலைக்கு வரக்கூடாது. தாலிக்கயிறு எல்லாம் வெளியில் தெரியக்கூடாது. நகை அணிந்து, நல்லபுடவை உடுத்தி நவீனமாக வரவேண்டும்" என்று அறிவுறுத்துகிறார்.

தன் குடும்பத்திற்காக அனைத்தையும் சகித்துக்கொண்டு தன்னைச் சிறிதுசிறிதாக மாற்றினாள்; பணிக்குச்சென்றாள். கணவனுக்கோஇவள்தன்னைவிட்டுவிலகிச்செல்கிறாள் என்று படபடக்கிறது. "இதற்குக் காரணம் நீங்கள்தானே" என்று மனைவி சுட்டிக்காட்ட நொந்துபோகிறான். அவனுடைய நடவடிக்கைகளிலும் மாறுதல் ஏற்படுகின்றது.

தன் உழைப்பால் ஓரளவு குடும்பச்சூழலைச் சமாளித்த கற்பகம், தற்போது கணவனின் பொறுப்புணர்வும்கூட தான் சேமித்த பணத்தில் வீட்டிலிருந்தே புடவை விற்கலாம். புடவைக் கடைக்காரர் சொல்லும் கட்டுப்பாடுகள் அதற்கு இல்லை. தான் கற்றுக்கொண்ட வியாபார உத்திகளைப் பயன்படுத்திச் சொந்தமாகத் தொழில் தொடங்க எத்தணிக்கின்றாள்.

கற்பகத்தைக் காண அவளது கணவன் கடைக்கு வருகின்றான். இங்கெல்லாம் வரக்கூடாது என்று கடைக்காரர் வெளியில் தன் கணவனை அனுப்பும்போது, ''பொட்டு, புடவை, மஞ்சள், தாலி, தலைமுடி இவ்வளவிலும் கை வச்ச நீ இப்போ புருஷனையே மறைக்கச் சொல்லறியே...'' கற்பகத்தைக் கண்டு கடைக்காரர் திகைத்தார். தன் கையில் இருந்த புடவையை உதறிப் போட்டுவிட்டு கணவனின் கரத்தைப் பிடித்துக் கொண்டு வெளியே நடந்தாள் கற்பகம்'' என்று அந்தச் சிறுகதை முடிகிறது. ஒரு பெண்ணால் தன் குடும்பப் பொறுப்புகளை ஏற்றுத் தன் கடமையிலிருந்து தவறாது தன் கணவனையும் நல்வழிப்படுத்தி மரியாதையான வாழ்வினை வாழமுடியும் என்பதை இந்தச் சிறுகதையின் 'கற்பகம்' என்கிற கதாபாத்திரம் எடுத்துரைக்கின்றது.

'சரணாலயம்' என்ற ந.மகேசுவரியின் சிறுகதையில், கட்டமைக்கப்பட்டுள்ள இந்திரா என்ற கதாபாத்திரம், யாரையும் சார்ந்து இல்லாமல் சுயதொழில் முனையும் பெண்ணாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. கணினி மையம் வைத்து நடத்தும் இந்திரா திருமணமாகாத நிலையில் தன் உடன்பிறந்தவர்களும் தன்னை விட்டுச் செல்ல தனித்து வாழ்கிறாள். அவரவர் வாழ்க்கை, வசதி, மகிழ்ச்சி, வருங்காலம்... இவைதான் முக்கியம் என்று உடன்பிறந்தவர்கள் அவரவர் வாழ்வைத் தேடிக்கொள்ள இந்திரா தனித்து விடப்படுகிறாள்.

இந்திரா, பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய் பாரதிதாசன் சொன்ன தமிழச்சியாய் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்கின்றாள். அவளுடைய தோழி சாரதா, இந்திராவின் நிலையை எண்ணி வருந்துகிறாள்.

'யாரும் இல்லையென்றாலும் நான் நிம்மதியாகத் தான் இருக்கிறேன்' என்ற இந்திராவை நீ வித்தியாசமானவள் என்கிறாள். ''நான் திருமணம் செய்ய மறுத்து தனிமையை ஏற்கவில்லை. அது என் வாழ்வில் நடக்கவில்லை. ஆனால், இப்போது நான் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன்'' என்று கூறுகிறாள்.

''ஏன் என்னை எல்லாருமே இப்படித் தனிமைப்படுத்திப் பார்க்கிறீங்க? அவசியமில்லாத வீண் ஆடம்பரம், வறட்டுக் கௌரவம்னு இல்லாம எளிமையும் தனிமையும் கொண்ட வாழ்க்கை வித்தியாசமானதா?'' என்று இந்திரா தன்தோழியிடம் கேள்வி எழுப்புகிறாள். ஆறுமாதம் கழித்து மீண்டும் இந்திராவைச் சந்திக்க சாரதா வருகையில் அவள் தனிமையில் இல்லை. அவளை விட்டுச்சென்ற தங்கச்சி இப்போது வந்துவிட்டாள்.

''காதலித்துக் கைப்பிடித்தவன். இப்போ இன்னொருத்தியைக் காதலிக்கிறானாம். அடி உதைன்னு சித்திரவதைப்பட்டுச் சாகக் கிடந்தவளை மருத்துவமனையிலேருந்து நேத்துத்தான் கூட்டிக்கிட்டு வந்தேன். காதல் திருமணம் தந்த பரிசு...''

திகைத்துப் போயிருந்த சாரதாவை அங்கிருந்து நகர்த்திக் கொண்டு போனாள் இந்திரா. "நான் இங்கே தனியா இல்லே! அங்க பாரு... அக்காவும் நாலு பிள்ளைகளும் ஆதரவு இல்லாம இங்கேயே வந்திட்டாங்க, குடிகாரக் கணவன் லாரியிலே அடிபட்டு இறந்திட்டாரு. சிதறிப்போன எங்க குடும்பம் மறுபடியும் சேர்ந்திருக்கு..."

"நான் இப்போ தனியா இல்லே சாரதா..." என்று தன் குடும்பப் பொறுப்பை மீண்டும் சுமக்கத் தயாரானவளாய் இந்தச் சிறுகதையின் 'இந்திரா' கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

எழுத்தாளர் சுந்தராம்பாளின் 'தாயாக வாழ்கிறாள்' என்ற சிறுகதையில் வரும் சீதா கதாபாத்திரமும் இதே போன்று அமைந்துள்ளது. தன் தந்தை குடி, சூதாட்டப் பழக்கங்களால் பொறுப்பில்லாமல் இருந்ததால் தன் தாயின் இறப்பிற்குப் பிறகு, தம்பி, தங்கையைப் பாதுகாத்து வளர்க்கும் பொறுப்பினைப் பன்னிரண்டு வயதில் ஏற்றவள் சீதா. தன் உழைப்பால் உடன்பிறந்தவர்களைப் படிக்க வைத்து, நல்ல பணியில் அமர்த்தியவள் சீதா. தன் கடமைகளுக்காகத் திருமண வயதில் திருமணத்தை மறுத்தவள்.

இன்று வயது முப்பத்தைந்தைத் தொட திருமணம் முடிக்க மாப்பிள்ளை கிடைக்காமல் தன் தம்பி, தங்கையின் வாழ்விற்குக் குறுக்கே நிற்கும் அபலநிலைக்குத் தள்ளப்பட்டவள். இவளின் நிலையை அவள் உடன்பிறந்தோரே புரிந்துகொள்ளாமல் இவளைக் காயப்படுத்துகின்றனர்.

தன்னை விட்டுத் தம்பி, தங்கைகளுக்குத் திருமணம் முடிக்கத் தந்தையும் தயாராக இல்லை. சீதாவின் தந்தை தான் நோய்வாய்ப்பட்ட காரணத்தால் திருந்தி வாழத் தொடங்கினார். தன் மகளுக்குத் திருமணம் முடித்து வைத்துவிட வேண்டும் என்று காலம் தவறி முயற்சி செய்து கொண்டிருந்தார். சீதாவை, பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வந்தனர்.

"நெஞ்சில் ஒரே அதிர்வு! இவரா மாப்பிள்ளை...? திறந்த வாயிலிருந்து ஒழுகும் 'ஜொல்லை' சட்டை செய்யாமல் கோணலான பார்வையை எங்கோ நிலைநிறுத்த முயற்சி செய்து கொண்டிருக்கும் அவரைப் பார்த்ததும் இதயம் காற்றழிந்த பலூனாகச் சுருங்கிக் கொள்கிறது" மாப்பிள்ளை எப்படி இருந்தாலும் தன் அக்கா கல்யாணம் முடிய வேண்டும் என்ற எண்ணத்திலே உடன்பிறந்தவர்கள் தவிக்கின்றனர். தன் தந்தை திருமணத்திற்கு மறுத்தவுடன் ஏமாற்றமடைந்த தம்பியையும் தங்கையையும் ஒரு முறை பார்த்துவிட்டு, சீதா ஒரு முடிவுக்கு வந்தவளாய்,

"அப்பா!" என் குரல் கரகரக்கிறது. அப்பா தலைதிருப்பி என்னைப் பார்க்கிறார். "நான் அந்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்று கூறிவிட்டு பாலுவையும் மல்லிகாவையும் தீர்க்கமாகப் பார்க்கிறேன். அவர்களின் தலைகள் தாமாகவே வளைந்து கொள்கின்றன. ஒரு பெண் ஆணோடு மனைவியாக மட்டும்தான் வாழ முடியுமா?" என்று அந்தச் சிறுகதை முடிகின்றது.

கடமை தவறாது தன் உழைப்பால் உடன்பிறந்தவர்களைக் கரை சேர்த்த சீதா, அவர்களாலேயே உதாசீனப்படுத்தப்படும்போது மாப்பிள்ளை பொருத்தமில்லாதவராக இருந்தாலும் திருமணம் முடிக்க ஒப்புக்கொள்கிறாள். இது அவளின் கடமையுணர்வைக் காட்டுவதாக உள்ளது.

இவை பெண்கள் தங்கள் குடும்பப்பொறுப்புகளையும் கடமையுணர்வையும் உணர்ந்தவர்களாகவே உள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய கதாபாத்திரங்களைப் பார்க்கும்போது 'பெண்ணின் பெருந்தக்க யாவுள!' என்றே சொல்லத் தோன்றுகிறது...

பெண் கல்வி

ஆமாம்

நாட்டு விடுதலை வேண்டும் என்று
நாள் குறிக்கும் முன்பே

பெண் கல்விக்கு
முன்னணி
தந்த
முருகாயி அம்மாள் உடனுறையும்
தாத்தாக் கிழவர்
சோழ வண்டல்
பேருழவர் கருப்பசாமி மகனார் அழகேசனார்

இது ஒரு முற்போக்கு முன்னணிக் கூட்டணி
சாதித்த
கல்வி மழை வளம்

பெண்கல்வி

தஞ்சையின்
மேலக் கடைக்கோடி கண்டுகொண்டு
ஒரு கன்னிப்பெண்ணாள் தலைமையாசிரியர்
பணியாணை பெற்றுச் சிறந்தார்
ஊரார் வியந்தார்

முருகாயி அம்மாள் உடனுறை
கரு.அழகேசன் தம்பதி
வரலாற்றில்
வாழ்க பல்லாண்டு !

– முத்தமிழ் விரும்பி

முயற்சி

பேராசிரியர் எஸ் சாந்தினிபீ.

நாளைக்கு நான் ஊருக்கு கிளம்புகிறேன் கீதா. திருமணம் ஆகி 2 மாதங்கள் நிரம்பிய தன் மகளிடம் சொன்னாள்.

ஏம்மா திடீர்னு வந்தீங்க திடீர்னு போறேன்னு சொல்றீங்களே...! ஒன்னும் இல்லடா உன்ன பாக்கணும் போல இருந்தது வந்தேன் ஆசை தீர்ந்தது கிளம்புறேன். வேலைக்கு கிளம்பி விட்ட மகளின் மனதில் ஆயிரம் ஆயிரம் கேள்விகள் ஏன் அம்மாவுக்கு ஏதேனும் குறை வைத்து விட்டேனோ? தான் பாரம் என்று நினைக்கிறார்களோ? எனது சாப்பாடு பிடிக்கவில்லையோ? தெரியலையே என்று புலம்பியவாறு பணியை பார்க்க தொடங்கினாள்.

ஏன் அத்தை இவ்வளவு சீக்கிரம் ஊருக்கு கிளம்புறீங்க..? என்ற மருமகனுக்கும் சமாதானம் சொன்னாள். வேறு வழி இல்லாமல் மகளும் மருமகனும் ரயில் நிலையத்திற்கு வந்து வழி அனுப்பி வைத்தார்கள். மறுநாள் காலை சென்று வீட்டை அடைந்த மனைவியை கண்டு கணவனும் அதிர்ச்சி அடைந்தான். அவனும் அதே கேள்விகள்... அவளும் அதே பதில்தான்.

இரண்டு நாட்கள் கழித்து சற்று ஓய்வாக தன் மனதை புரிந்து கொள்ளும் தோழியிடம் கைபேசியில் பேசினாள். தோழியும் மற்றவர்களைப் போலவே நிறைய கேள்விகளை கேட்டாள். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். வாசல் மணி அடிப்பதை கேட்டு கதவு திறக்கச் சென்ற இவள் ''என் மருமகன் தன் மனைவிக்கு உடம்பு சரி இல்லைன்னா பொறுப்பா நல்லா கவனிக்கிறார். அக்கறையா. இன்றைய இளைய தலைமுறைக்கு நிறைய புரிதல் இருக்கிறது என்று முத்தாய்ப்பாக பேச்சை நிறுத்தினாள். தோழிக்கு எல்லாம் புரிந்தது.

இந்தியப் பெண் விஞ்ஞானிகள்-5

முனைவர் பிபா சவுத்ரி

மேனகா நரேஷ்,
நியூஜெர்சி

பிபா சவுத்ரி, இந்தியா விடுதலை பெறுவதற்கு முந்தையக் காலத்தில் இயற்பியல் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொண்ட முதல் தலைமுறை பெண் விஞ்ஞானிகளில் ஒருவர் என்ற பெருமைக்குரியவர். பெண்கல்வி எட்டாக்கனியாய் இருந்த காலகட்டத்தில், மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்று பின்னர் இந்தியாவுக்கு திரும்பி, இரண்டு முக்கியமான ஆராய்ச்சி நிறுவனங்களில் பணியாற்றியது மிகப்பெரிய சாதனையாகக் கருதப்படுகிறது.

இருப்பினும், அவருடைய வாழ்க்கை பல துன்பங்களை உள்ளடக்கியதாக இருந்தது. வாழ்க்கை முழுவதும் கல்வித் துறையில் மிகவும் கீழ்நிலைப் பதவியிலேயே இருந்தார். கொல்கத்தாவின் போஸ் இன்ஸ்டிடியூட்டில் பணியாற்றும் போது, புகைப்படத் தாள்களைப் பயன்படுத்தி மெசான் எனும் அணுக்கூறு வகையின் கனத்தை அளந்தார். இவருடைய இந்த முயற்சி, நோபல் பரிசு பெற்ற சி.எப். பவல் செய்த ஆய்வுக்கு முன்னோடியாக அமைந்தது. இவ்வளவு முக்கியமான விஞ்ஞானப் பங்களிப்புகளைச் செய்திருந்தும், இந்தியா முழுக்க அவர் பெரிதும் அறியப்படாதவராகவே இருந்தார்.

பிறப்பு, ஆரம்பகால வாழ்க்கை:

பிபா சவுத்ரி 1913ஆம் ஆண்டு கொல்கத்தாவில் பிறந்தார். அவரது தந்தை ஒரு மருத்துவர். விஞ்ஞானி ஜகதீஷ் சந்திர போஸ் , மருத்துவர் நீலரத்தன் சிர்கார் ஆகியோர் பிபாவின் தாய்வழி உறவினர்கள்.

பிபாவின் பெற்றோர் பிரம்ம சமாஜ் கொள்கைகளை பின்பற்றினர். 1828 ஆம் ஆண்டு, ராஜா ராம்மோகன் ராய் என்பவரால் தொடங்கப்பட்ட பிரம்ம சமாஜ் இயக்கம் சமூகத்தில் நிலவும் சாதிய ஒடுக்குமுறைகள், மத மரபுகள் ஆகியவற்றை மாற்ற முயன்றது. இது பாரம்பரிய மத நம்பிக்கைகள், சடங்குகளை தவிர்த்து, கல்வியை, குறிப்பாக பெண்கள் கல்வியை, அதிக முக்கியத்துடன் எடுத்துரைத்தது. எனவே, பிபா மற்றும் அவரது நான்கு சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர் அனைவருக்கும் சமமான கல்வி வழங்கப்பட்டது.

போஸ் நிறுவனத்தில் பிபா சவுத்ரி:-

1936-ஆம் ஆண்டு, பிபா சவுத்ரி தனது ஆராய்ச்சி வாழ்க்கையை டாக்டர் தேவேந்திர மோஹன் போஸ் *(D. M. Bose)* என்பவரின் வழிகாட்டுதலில் தொடங்கினார். தொடக்கத்தில், அவர் மேற்கொண்டிருந்த ஆராய்ச்சி "பெண்களுக்கு பொருத்தமானதல்ல" எனக் கருதி சௌதுரியை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

ஆனால் பின்னர், போஸ் நிறுவனத்தில் அவரின் கீழ் இணைந்த, அண்டக் கதிர்களை *(cosmic rays)* ஆய்வு செய்யத் தொடங்கினார். இந்த துறையில் அவர்கள் முன்னோடிகளாக இருந்தனர். உயர்ந்த இமயமலையில் உள்ள ஆய்வு மையங்களை அடைவதற்காக அவர்கள் கழுதைகளின் உதவியுடன் கடினமான பயணங்களை மேற்கொண்டனர். பிபா மூன்று உயரமான மலையிடங்களில் பரிசோதனைத் தட்டுகளை *(emulsion plates)* அமைத்து, பின்னர் அவற்றை திரும்ப கொண்டு வந்து நுண்ணோக்கி வழியாக ஆராய்ச்சி செய்தார். இந்த ஆராய்ச்சியின் பயனாக, புதிய துணை அணு, பை-மெசான் *(pi-meson)* கண்டுபிடிக்கபட்டது. அவர்கள் பயன்படுத்திய பலகைகளின் தரத்தினால் இந்தப் புதியத் துகளின் துல்லியமான அளவீடுகளைப் அவர்களால் பெற முடியவில்லை.

மேம்பட்ட உபகரணங்களுக்காக அவர்கள் வலியுறுத்திக்கொண்டிருந்த வேளையில், இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. அதன் விளைவாக, இங்கிலாந்தில் இருந்து பெற வேண்டிய புகைப்படப் பலகைகளின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது.

போர் முடிந்த பிறகு, இங்கிலாந்தைச் சேர்ந்த இயற்பியலாளர் செசில் பவல், அதே வகை ஆய்வுகளை அதிக உணர்திறன் வாய்ந்த பலகைகளை பயன்படுத்தி மேற்கொண்டார். அவர் புதிய துகளைத் துல்லியமாகக் கண்டறிந்து, *1950*-இல் இயற்பியலில் நோபல் பரிசை வென்றார். பிபா சவுத்ரி மற்றும் டாக்டர் போஸின் பங்களிப்பு அவரது புத்தகத்தில் குறிப்பிடப்பட்டது. ஆனால், அவர்களிக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் மற்றும் ஆராய்ச்சி:-

1945 முதல் *1949* வரை மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் தனது முனைவர் பட்ட ஆராய்ச்சியை முடித்தார் பிபா. அங்கு அவர் பாட்ரிக் பிளாக்கெட்டின் அண்டக் கதிர்கள் *(cosmic rays)* ஆய்வுகூடத்தில் ஆராய்ச்சி செய்தார். அவர் மேக அறைகள் *(cloud chambers)* பயன்படுத்தி விரிவான வாயுவழி மழைகளை *(extensive air showers)* ஆய்வு செய்தார்.

1949 ஆம் ஆண்டு, தன் முனைவர் பட்ட ஆய்வுக்குப் பிறகு, பிபா சவுத்ரி இந்தியா திரும்பினார். பாட்ரிக் பிளாக்கெட்டின் பரிந்துரையுடன், மும்பையில் புதியதாக தொடங்கப்பட்ட டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தில் *(Tata Institute of Fundamental*

Research) ஹோமி பாபாவின் *"*கோஸ்மிக் ரே*"*குழுவில் சேர்ந்த முதல் பெண்ணாகத் தேர்வானார்.

டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தில் (TIFR) பிபா:

பிபா சவுத்ரி தனது ஆய்வுகளை "விரிவான வாயுமழை" *(extensive air showers)* குறித்துத் தொடர்ந்தார். இதில், மூயான்கள் *(muons)* தவிர வேறு உட்புகும் அணுக்கள் *29%* வாயுமழையில் காணப்படுவதை அவர் கண்டுபிடித்தார். மூயான்கள் அப்போது முக்கிய உட்புகும்துகள்களாகஅறியப்பட்டிருந்தாலும், இந்தபுதியகண்டுபிடிப்புமுக்கியமானதாக இருந்தது. அவரது குழுவின் ஆய்வுக் கட்டுரை *1952*-ல் இந்திய அறிவியல் அகாடமியின் *Proceedings of the Indian Academy of Sciences* இதழில் வெளியானது. *TIFR*-இல் மூத்த விஞ்ஞானி பதவியில் இருந்தபோதும், பிபா *1953*-ல் அந்த நிறுவனத்தை விட்டு வெளியேறினார்.

ஐரோப்பாவில் ஆராய்ச்சிப் பணிகள்:

பின்னர், பாரிசில் உள்ள *Centre National de la Recherche Scientifique* அமைப்பின் கீழ் வான்கதிர் விஞ்ஞானி எல்.லெப்ரின்ஸ் ரிங்வெட்டின் ஆய்வகத்தில் இணைந்தார். அப்போதைய ஆல்ப்ஸ் மலைப்பகுதிகளில் கிளவுட் சேம்பர் *(cloud chamber)* மூலம் பல புதிய *K* மெசான்களை *(K mesons)* கண்டறிந்தார். இந்த ஆய்வுகள் *1957*-ல் *Nuovo Cimento* என்ற ஐரோப்பிய இதழில் வெளியிடப்பட்டன. அவர் அங்கு அமெரிக்க விஞ்ஞானி வேய்ன் ஹேசனுடன் இணைந்து பணியாற்றினார்; பின்னர் ஹேசன் அவரை தனது கல்லூரியான மிசிகன் பல்கலைக்கழகத்தில் *(University of Michigan)* கற்பிக்க அழைத்தார்.

இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தில் (PRL) மேற்கொண்ட ஆய்வுகள்:

அமெரிக்காவில் ஆராய்ச்சிப் பணிகளை முடித்த பிறகு, பிபா சவுத்ரி அகமதாபாதில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தில் *(PRL)* பணிபுரியத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது, *TIFR*-இன் கோலார் தங்கப்பாதுகாப்பு *(KGF)* மண்டலத்தில் அமைந்த பெரிய ஷவர் வரிசையை *(large shower array)* பயன்படுத்தி, உயர் ஆற்றல் மூயான்களின் ஊடாடல்களைப் பற்றியப் புதிய ஆய்வைத் தொடங்கினார். மூயான் உணரி*(muon detector)*, பிளாஸ்டிக் சின்டிலேட்டர் *(plastic scintillators)* பயன்படுத்தி, பல நிகழ்வுகளைப் பதிவு செய்து வகைப்படுத்தினார். இந்த ஆராய்ச்சிகள் பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்று *1976*-ல் முடிக்கப்பட்டது. அதன்பின் பிபா *PRL*-இல் இருந்து ஓய்வு பெற்றார்.

தொடர் ஆராய்ச்சி:

PRL-இல் இருந்து ஓய்வு பெற்ற பிறகும், பிபா சவுத்ரி தனது உயர் ஆற்றல் கதிரியக்க ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். அவர் கொல்கத்தாவுக்குத் திரும்பி, சகா அணுவியல் ஆராய்ச்சி நிறுவனம் *(Saha Institute of Nuclear Physics)*, இந்திய அறிவியலின் வளர்ச்சிக்கான சங்கம் *(Indian Association for the Cultivation of Science)*, கொல்கத்தா பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களில் இணைந்து பணியாற்றினார். அறிவியல் மாநாடுகளில் கலந்துகொண்டு,

ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். அவரது கடைசி கட்டுரை அவர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு, 1990-ல் வெளிவந்தது.

இயற்பியல் துறையில் பிபா சவுத்ரி சந்தித்த சவால்கள்:

பிபா சவுத்ரி பிளாக்கெட்டின் ஆய்வகத்தில் பணியாற்றிய காலத்தில், "தி மான்செஸ்டர் ஹெரால்டு" எனும் உள்ளூர் செய்தித்தாளில், "இந்தியாவின் புதிய பெண் விஞ்ஞானியைச் சந்தியுங்கள் – வான்கதிர்களைப் பற்றி அவருக்குக் கூறிய பார்வை உண்டு" எனும் தலைப்பில் ஒரு சிறப்புக் கட்டுரை வெளியானது. அந்தக் கட்டுரையில் புகைப்படங்களும், ஒரு நேர்காணலும் இடம்பெற்றிருந்தன. அதே ஆண்டில், அந்தக் கட்டுரை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும் மறுபதிப்பாக வெளிவந்தது. இந்த ஊடகக் கவனம், பிபா சவ்துரி அடிப்படை அறிவியல் துறையில் பெண்களுக்கான முன்னோடியான பங்கு வகித்ததைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

அந்த நேர்காணலில் பிபா இயற்பியல் துறையில் பெண்களின் பங்களிப்பு குறித்து இவ்வாறு கூறியுள்ளார்:"பெண்கள் இயற்பியலைக் கண்டு பயப்படுகிறார்கள் – அதுவே பிரச்சனை. இன்று அறிவியல் உலகில், நாம் மிகக் குறைந்த அளவிலேயே பெண் பௌதிகவியலாளர்களைக் காண்கிறோம் என்பது ஒரு பெரும் துரதிருஷ்டவசமான விஷயம். அணுசக்தியின் யுகமான இந்தக் காலத்தில், பெண்கள் அதைப் பற்றிக் கற்றுக்கொள்ள வேண்டும்; அது எப்படிச் செயல்படுகிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால், எப்படி அதைச் சரியாகப் பயன்படுத்துவது என்பது குறித்த முடிவுகளை எவ்வாறு எடுக்க முடியும்?" என்று குறிப்பிட்டுள்ளார்.

டாடா அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (TIFR), இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தில் (PRL), கோலார் தங்கப்பாதுகாப்பு திட்டத்தில் (KGF), பிபா சவுத்ரி ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். முன்னாள் இஸ்ரோ தலைவர் கிருஷ்ணஸ்வாமி கஸ்தூரிரங்கன், இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தில் அவரது மாணவராக இருந்தார். அவர் கூறியதாவது:"அவருடைய கற்பித்தல் முறை எங்கள் சிந்தனையையும் சிக்கல் தீர்க்கும் திறனையும் பெரிதும் வளர்த்தது. பல பாடப்பிரிவுகளிலிருந்தும் கருத்துகளை இணைத்து பயன்படுத்தும் திறனை அவர் எங்களில் வளர்த்தார். இது எங்களை ஆராய்ச்சியின் நுட்பமான சவால்களுக்கு தயார் செய்தது."

பிபாவின் பணி பெரும்பாலும் அங்கீகரிக்கப்படவில்லை என்பது வருத்தமானது.

ஆண்கள் ஆதிக்கம் செலுத்தியச் சூழலில், பிபாவை மதிக்காததற்கு அவருடைய பாலினமே ஒரு முக்கியக் காரணமாக இருந்தது எனக் கூறலாம்.

பிபா சவுத்ரி திருமணம் செய்யவில்லை. அவர் பிரம்ம சமாஜ் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்ததால், இந்து சமூகத்தால் ஒதுக்கப்பட்டவராகவும் இருந்ததுடன், ஒரு பெண் விஞ்ஞானியாகவும் இருந்ததால் வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்வது மிகவும் கடினமாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது .

பிபா சவுத்ரி இந்தியாவிலும், உலகளாவிய அறிவியல் சமூகத்திலும் மிகச் சிறந்த விஞ்ஞானிகளுடன் பணியாற்றியும், அவரது பங்களிப்புகள் பெரும்பாலும் உதாசீனப்படுத்தப்பட்டன. இந்தியாவின் மூன்று தலைமை அறிவியல் அகாடமிகளிலும் அவர் ஒருபோதும் உறுப்பினராக ஏற்கப்படவில்லை; எந்தவொரு முக்கிய விருதுகளும் அவருக்கு வழங்கப்படவில்லை; கேஜிஎஃப் திட்டத்தின் முக்கியமான வான்கதிர் ஆராய்ச்சியில் கூட, அவர் பெயர் எந்த ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லை. இந்திய அறிவியல் அகாடமி வெளியிட்ட "லிலாவதியின் மகள்கள்" எனும் நூலில் – 100 இந்திய பெண் விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறு கூறப்பட்டபோதும் – பிபா சவுத்ரியின் பெயர் இடம் பெறவில்லை.

1942-இல் "நேச்சர்" இதழில் பிபா தனது பை-மேசான் (π-meson) கண்டுபிடிப்பை வெளியிட்டபோதும், அதற்கான அங்கீகாரம் அவருக்கு வழங்கப்படவில்லை. அவரது ஆய்வு முறைப்படி செயல்பட்ட ஒரு பிரிட்டிஷ் ஆண் விஞ்ஞானிக்குத்தான் பல வருடங்களுக்குப் பிறகு நோபல் பரிசு கிடைத்தது . அதேபோல், அவர் தனது முனைவர் பட்ட ஆய்வுகளில் மேற்கொண்ட வான்கதிர் நிகழ்வுகள் தொடர்பான ஆய்வுகள், மேற்கத்திய விஞ்ஞான உலகால் பரிசீலிக்கப்பட்டும், பெரிதும் மேற்கோளாகப் பயன்படுத்தப்பட்டும், அவருக்கு எந்த விருதுகளும், பட்டங்களும் கிடைக்கவில்லை.

பிபா சவுத்ரிக்குக் கிடைத்த அங்கீகாரம்:

பிபா சவுத்ரி இறந்து சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, 2019-இல், பன்னாட்டு வானியல் ஒன்றியம் (International Astronomical Union), "செக்ஸ்டான்ஸ்" (Sextans) விண்மீன் கூட்டத்தில் உள்ள ஒரு விண்மீனுக்கு "பிபா" எனப் பெயரிட்டது. டாடா அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (TIFR) முதலாவது பெண் ஆய்வாளராக இருந்த பிபாவின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த உன்னதமான கவுரவம் வழங்கப்பட்டது.

முடிவுரை:

பெண் கல்வியை எதிர்த்தக் காலகட்டத்தில் துணிச்சலுடன் படித்து அமெரிக்காவில் முனைவர் பட்டம் பெற்ற பிபா சவுத்ரி பெரும் பாராட்டுக்குரியவர். வாழ்ந்த காலத்தில் அவருக்கு உரிய அங்கீகாரமும், மரியாதையும் கிடைக்கவில்லை என்றாலும் மனம் தளராமல் உழைத்த உன்னதமான விஞ்ஞானி எனன பெருமைக்குரியவர் பிபா சவுத்ரி . ஒரு பெண்ணாகப் பல போராட்டங்களைச் சந்தித்தாலும் மனம் தளராமல் இயற்பியலில் தன் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார். அவரது மன உறுதியும் விடாமுயற்சியும் பல பெண்களுக்கு உத்வேகம் அளிக்கும். பிபாவின் வாழ்க்கையும், பணியும் அறிவியலில் சாதிக்கத் துடிக்கும் பலருக்கும் பெரும் ஊக்கத்தை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை!

மணப்பெண்ணின் அக்காவோ!

பட்டுக்கோட்டை சுப்பிரமணியன்

ஒரு திருமண ஃபங்சனுக்கு போனேன்.

வரவேற்பிலேயே சந்தனம் கொடுப்பவர் எல்லோரையும் வாங்க,வாங்க என சந்தோசத்தொடு அழைத்து வரவேற்றவர் என்னையும் அதேபோல் வரவேற்றாலும் கொஞ்சம் மேலும்,கீழும் யோசனையுடன் பார்த்துகொண்டே வரவேற்றார்.

ஒரு இடத்தில் சேரில் உட்கார்ந்து கொண்டே யாராச்சும் நமக்கு அறிமுகமானவர் இருக்கிறார்களா நோட்டமிட்டாலும் எல்லாமே புதுமுகங்கள்.

என் இருபுறமும் கொஞ்சம் கனமான உடம்புடன் கழுத்து, கை செயினுடன் இருவர் உட்கார்ந்திருந்தனர் திருமண வீட்டாருக்கு ரொம்ப வேண்டியவர்கள் போல வரிசையாக அவர்களை ஆட்கள் வந்து வரவேற்றுகொண்டே இருந்தனர்.

அப்படி அவர்களை கூப்பிடும்போது என்னையும் ஒரு மாதிரி குறுகுறுவென்று ஒரு பார்வை பார்த்து கொண்டே சென்றனர்.

"திருமண மண்டபத்தில் வெள்ளி பாத்திரங்கள் திருடிய டிப்டாப் ஆசாமி"போன்ற செய்திகளையும் அடிக்கடி தினசரியில் படித்தவர்களாக இருக்கலாம் :)

திருவிழாவில் காணாமல் போன குழந்தை மாதிரி உட்கார்ந்திருந்த என்னை பார்த்து ஒரு அழகான பெண் சிரித்து கொண்டே வந்தார்.

மணப்பெண்ணை விட நகையும்,மேக்கப்பும் அதிகமாக இருந்தது அனேகமாக மாப்பிள்ளையின் சகோதரியாக இருக்கலாம்.ஆமாம் அவர் என்னை நோக்கித்தான் வருகிறார் மாப்பிள்ளைதான் சொல்லிக்கியிருக்கனும்,"என் நண்பர் வந்திருக்கிறார் அவரை வரவேறு"என்று.

கலைந்த முடியையும்,சட்டையும் சரி செய்துகொண்டு அந்த பெண்ணுட பேச தயாராகினேன்,அருகிலேயே சிரித்துகொண்டு வந்துவிட்டார்.

அடுத்த நொடி, என் பின்னால் இருந்த உருவம் திடீரென்று எழுந்து,"மனைவியை பங்சனுக்கு அழைத்து வரமுடியலை என்று ஜொள்ளினார்"

அந்த பொண்ணு நமக்கு பின்னால் இருந்த ஆளைத்தான் பார்த்து சிரித்து கொண்டு வந்திருக்கிறது.பின்னால் இருந்தவரை பார்த்து காதில் புகை வர வைக்க விருப்பமில்லை அதற்காக அந்த பெண் பேசும் அழகை ரசித்திருப்பேன் என நீங்கள் கற்பனை செய்துகொள்வதில் தவறில்லை அதுவும் உண்மையாக இருக்கலாம் :) .

ஒரு வழியாக மணமக்களை வாழ்த்திவிட்டு, சாப்பாட்டு ஹாலில் அமைதியாக சாப்பிட்டுக்கொண்டியிருந்தேன.

ஓட்டை விழுந்த பனியனுடன்,இடுப்பில் துண்டை கட்டிகொண்டியிருந்த அண்ணன், என் அருகிலேயே நின்று சாப்பிடும் வரை என்னை நன்றாக கவனித்துகொண்டார்.

'' தம்பி, சோசியர் தானே! என்னைத் தெரியுதா?''

பார்த்த ஞாபகமா இருக்குண்ணா''

''நம்ம தோப்புக்கு தேக்கு மரம் கழிக்க வந்தேனே மறந்துட்டீங்களா. கலாம்மா எப்பவும் வேலை ஆரம்பிக்கும் முன்பே என்னை சாப்பிட வைப்பாங்க. இன்னைக்கு தான் உங்களுக்கு சாப்பாடு வைக்கிற பாக்கியம் எனக்கு கிடைச்சுது'

''ஆமாண்ணே, நல்லா இருக்கீங்களா? பெரிய பொண்ணு டாக்டர் முடிச்சிருச்சா''

''முடிக்கப் போகுது தம்பி, சின்ன பொண்ணுக்கும் டாக்டர் சீட்டு நீங்க சொன்னது மாதிரியே கிடைச்சிருச்சி''

''சந்தோசம்ணே''

நம் மனம் எப்போதுமே மேலானவர்கள், நாகரிகமானவர்களின் அறிமுகத்திற்க்காக ஏங்குகிறது. ஆனால், எளிமையான மனிதர்களின் அறிமுகத்தில் தான் உண்மையான அன்பும், உன்னதமும் இருக்கிறது.அவர்கள் தங்கள் உயரத்தை வெளிக்காட்டிக் கொள்வதில்லை

வீதியில் அமர்ந்து பொருளீட்டும் சங்கப் பெண்ணின் சகோ போலும்.
முறம் கொண்டு புலி துரத்தியவளின் எதிர் வீட்டுக்காரியோ?
கையிற்கும் வாய்க்கும் போராட்டம் நடத்தும்
பேசாமடந்தையோ?
கண்டதும் கவிபாட செய்யும் ரதியோ?
மனிதாபிமானம் எனும் பாலத்தால் எனக்கு உறவாகி போனவள்.
இந்த ஊர் பேர் தெரியாதவள்.

-சாந்தினி பி

அம்மாவின் டைரி

எழுத்தாளர். இரா. சைலஜா சக்தி
கோவில்பட்டி

அஷ்வினி கண் விழித்து மொபைலை எடுத்துப் பார்த்தபோது காலை மணி ஐந்து. தூக்கம் வராததால் மீண்டும் படுக்க மனமில்லாமல் எழுந்து அறையை விட்டு வெளியே வந்தாள். சமையலறையில் லைட் எரிந்து கொண்டிருந்தது.

வசுந்தரா வேகவேகமாக சமைத்துக் கொண்டிருந்தாள். அம்மாவிடம் போய்ப் பேசலாம் என்று நினைத்து சமையலறை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தாள். அப்போது வசுந்தராவின் போன் அடித்தது. வெண்டைக்காயை வதக்கிக் கொண்டே இடது கையால் போனை எடுத்துப் பேசினாள்.

"என்ன சார்... இப்படிச் சொல்றீங்க? என் மகளை பிரசவத்திற்கு அழைச்சிட்டு வந்துருக்கேன். அவ கூட இருக்கணும்னுதான் கஷ்டப்பட்டு லீவு வாங்கியிருக்கேன். இன்னைக்கும், நாளைக்கும் மட்டும்தான் ஆபீஸ் போவேன். அதுக்கு அப்புறம் லீவுதான். இப்பப் போய் இப்படிச் சொல்றீங்களே?"

மறுமுனையில் யார் பேசுகிறார்கள் என்பது அஷ்வினிக்குப் புரியவில்லை.

"சரி வேற வழி இல்லைன்னா வரேன். அப்புறம் என் ஆபீஸ் வேலை எல்லாம் பெண்டிங் ஆயிடும்" என்று சலிப்புடன் கூறிவிட்டு போனை வைத்தாள்.

ஸ்ரீதரன் டிராக்சூட், டிசர்ட் அணிந்து காலை வாக்கிங்கிற்குத் தயாராக வந்தார்.

"அஷ்வினி தூக்கம் வரலையாம்மா?" என்று மகளிடம் வாஞ்சையாகக் கேட்டார்.

"ஆமாப்பா" என்றாள்.

அப்போதுதான் வசுந்தராவிற்கு அஷ்வினி ஹாலில் இருப்பது தெரிந்தது.

"அஷ்வினி உடம்பு நல்லாருக்கா? வயித்துல வலி எதுவும் தெரியுதாம்மா?" என்று பதறியபடியே கேட்டாள்.

"இல்லைம்மா"

"சரி. எதுன்னாலும் எனக்கு உடனே போன் பண்ணிடுங்க" என்று கணவரைப் பார்த்துச் சொன்னாள்.

"ஆபீஸ்லதானே இருப்ப?" என்று கேட்டார் ஸ்ரீதரன்.

"இல்லை. இன்னிக்கு மதுரை ஹைகோர்ட்டுக்குப் போறேன். எங்க கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிற ஒரு கோட்ட அலுவலகத்துல நடந்த பிரச்சனை. இதுல எங்களுக்கு நேரடியா எந்த சம்பந்தமும் இல்லை. இருந்தாலும் அந்த ஆபீஸ் எங்க கட்டுப்பாட்டுல இருக்கிறதால என்னையும் வரச்சொல்லி சம்மன் அனுப்பிருக்காங்க. அதனால கண்டிப்பா வரணும்னு வக்கீல் சொல்லிட்டார்"

"சரி.. எப்ப கிளம்பற?"

"இன்னும் ஒரு மணி நேரத்துல கிளம்பிருவேன். அஷ்வினிக்கு சாப்பாடு, ஜூஸ் எல்லாம் ரெடி பண்ணி வச்சிடறேன். நேரத்துக்குப் பார்த்துக் கொடுத்துடுங்க"

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ கவலைப்படாம போயிட்டு வா"

அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல் அஷ்வினி மறுபடியும் பெட்ரூமிற்குள் சென்று படுத்துவிட்டாள்.

வெளிர் நீலக் காட்டன் புடவையில் காரில் அமர்ந்த வசுந்தரா இளமையாகத் தெரிந்தாள். அவள் ரிடையர்டு ஆகப் போகிறாள் என்று சொன்னால் யாராலும் நம்ப முடியாது. அவளை ஏற்றிக் கொண்ட ஆபீஸ் கார் மதுரையை நோக்கி சீறிப் பாய ஆரம்பித்தது. வசுந்தரா திருநெல்வேலியில் உள்ள குடிநீர் வடிகால் வாரியத்தில் மேற்பார்வைப் பொறியாளராகப் பணியாற்றுகிறாள். இந்த வருடத்தோடு அவளது பணிக்காலம் முடிவடைகிறது. அவள் ஓய்வு பெற இன்னும் எட்டு மாதங்களே இருக்கிறது. அதற்குள் ஏகப்பட்ட பிரச்சனைகள் தலை தூக்குகின்றன. அதில் அவளுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத பிரச்சினைக்காக தற்போது கோர்ட்டுக்குச் செல்கிறாள்.

வசுந்தராவின் மனம் அஷ்வினியைப் பற்றி நினைக்க ஆரம்பித்தது. அஷ்வினி அவர்களது ஒரே செல்ல மகள். ஸ்ரீதரனும், வசுந்தராவும் இரண்டு வருடத்திற்கு முன் அஷ்வினிக்கு நல்ல வரன் பார்த்து ஊர் மெச்சும்படி திருமணம் செய்து வைத்தார்கள். இப்போது தலைப் பிரசவத்திற்காக அஷ்வினி பிறந்த வீட்டிற்கு வந்திருக்கிறாள். மகளின் பிரசவ நேரத்தில் விடுப்பு எடுக்க வேண்டும் என்பதற்காக வசுந்தரா அலுவலக வேலைகள் அனைத்தையும் அவசரகதியில் முடித்துக் கொண்டிருக்கிறாள். இதில் எதிர்பாராத இந்த கோர்ட் அலைச்சல் வேறு. அஷ்வினி காலையில் சாப்பிட்டு முடித்துவிட்டு ஜூஸ் குடிக்க மறந்துவிடக் கூடாது என்று நினைவூட்ட ஸ்ரீதரனுக்குப் போன் செய்தாள். அஷ்வினி குளிக்கப் போயிருக்கிறாள், வந்ததும் சாப்பிடச் சொல்லி ஜூஸ் குடிக்க வைக்கிறேன் என்றார். அதற்குள் கார் மதுரை ஹைகோர்ட்டை அடைந்தது. வசுந்தரா வீட்டை மறந்து மேற்பார்வைப் பொறியாளராக அலுவலகப் பிரச்சனைகளைச் சுமந்து கொண்டு காரில் இருந்து இறங்கினாள்.

குளித்துவிட்டு ரோஸ் கலர் நைட்டியில் கண்ணாடி வளையல்களின் சத்தத்துடன் வந்த அஷ்வினியிடம் "அம்மாடி.. தலையைத் துவட்டின பிறகு சாம்பிராணி போடணுமாம். அம்மா சொல்லிருக்கா. இல்லைன்னா நீர் கோர்த்து ஜலதோஷம் பிடிக்குமாம்" என்று சொல்லிய ஸ்ரீதரன் சாம்பிராணி பொடியை தூபக்காலில் உள்ள நெருப்பில் போட்டு வீட்டையே புகை மண்டலமாக்கிக் கொண்டிருந்தார்.

"அதெல்லாம் வேண்டாம்ப்பா" என்று சொல்லிய அஷ்வினி கவனமாக வயிறு இடிக்காமல் டைனிங் டேபிளில் அமர்ந்தாள். அவளுக்குப் பிடித்த இட்லியும், பீர்க்கங்காய் கிச்சடியும் இருந்தது. தட்டில் எடுத்துப் போட்டு சாப்பிட ஆரம்பித்தாள். மகளின் முகம் சரியில்லை என்பதைக் கவனித்த ஸ்ரீதரன், "என்னம்மா.. என்ன கோபம்?" என்றார்.

"இன்னிக்கும் அம்மா ஆபீஸ் வேலை பார்க்கணுமா? என் கூட இருக்கக் கூடாதா?"

"அவ கோர்ட்டுக்குப் போயிருக்காம்மா"

"தெரியும்ப்பா. ஆபீஸ் விஷயமாத்தானே?"

"வசுந்தரா வேலை அப்படிம்மா"

"என்னை விட வேலை முக்கியமாப்பா?"

"என்னடா அஷ்வினி இப்படி பேசுற. நீ ஸ்கூல் படிக்கும்போதே எனக்கு பைபாஸ் சர்ஜரி நடந்துருச்சு. வி.ஆர்.எஸ். வாங்கிட்டேன். வீட்டு லோன் வேற. வசுந்தரா ஒரு ஆளா குடும்பத்தைத் தாங்குறா. அவ கஷ்டம் உனக்குத் தெரியாதாம்மா?"

"உடனே இதைச் சொல்லிடுங்கப்பா. அம்மாவோட கஷ்டம் எனக்குப் புரியுது. ஆனா என் கஷ்டம் உங்களுக்கும், அம்மாவுக்கும் புரியலை. சின்ன வயசுல இருந்து அம்மாவை ரொம்ப மிஸ் பண்ணிருக்கேன். அம்மாவோட வேலை, வீட்டுச் சூழ்நிலை எல்லாம் புரிஞ்சு நானும் அட்ஜஸ்ட் பண்ணிருக்கேன். நீங்க பார்த்த பையனைத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அவரும் என்னை நல்லா வச்சிருக்காரு. எனக்கு எந்தக் குறையும் இல்லை. இதோ இப்பக்கூட எனக்குப் பிடிச்ச இட்லியும், கிச்சடியும் செஞ்சு வச்சிட்டுத்தான் அம்மா போயிருக்காங்க. நீங்களும் என்னை நல்லாப் பார்த்துக்குறீங்கப்பா. ஆனா எல்லாரையும் மாதிரி எனக்கும் அம்மா கூட நிறைய பேசணும், சிரிக்கணும். என் வருத்தம், சந்தோஷம் எல்லாத்தையும் அம்மாகிட்ட ஷேர் பண்ணணும்னு ஆசை. ஆனா எப்பவுமே அது நடந்ததே இல்லை. அவங்க வீட்டுல இருக்குற நேரமே ரொம்ப கம்மி. அப்பவும் வீட்டு வேலைதான் பார்த்துக்கிட்டேதான் இருப்பாங்க. இப்பக்கூட நான் வந்து ஒரு வாரமாகுது. என்கூட ஒரு அரை மணி நேரம் சேர்ந்தாப்ல உட்கார்ந்து பேச அவங்களுக்கு நேரமில்லை. எனக்கு ரொம்ப கஷ்டமாருக்குப்பா" என்று சொல்லிவிட்டு ஸ்ரீதரன் டேபிளில் வைத்த ஆப்பிள் ஜூஸை எடுத்துக் குடித்துவிட்டு பெட்ரூமிற்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டாள். ஸ்ரீதரன் என்ன சொல்வதென்று தெரியாமல் தவித்தார்.

வசுந்தரா கோர்ட் வேலையை முடித்துவிட்டு நேரே திருநெல்வேலியில் உள்ள அவளின் ஆபீஸுக்கு வந்து சில வேலைகளை முடித்துவிட்டு வீட்டிற்குள் வரும்போது மணி இரவு ஒன்பது. அதற்குள் அஷ்வினி தூங்கிவிட்டாள். ஸ்ரீதரன் மகள் வருத்தப்பட்டதை வசுந்தராவிடம் தெரிவித்தார். வசுந்தரா அஷ்வினியைப் பார்க்க பெட்ரூமிற்குள் வந்தாள். அவள் அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள். எழுப்ப வேண்டாம் என்று நினைத்து அறைக் கதவை மெல்ல சாத்திவிட்டு வந்தாள்.

பகலில் கோர்ட்டில் நடந்த வாதங்கள், ஜட்ஜ் கேட்ட கேள்விகள், அதற்கு அவள் அளித்த விளக்கங்கள் என எல்லாம் நினைவுக்கு வந்தது. தலை பயங்கரமாக வலித்தது. நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கும் மகளைக் கூடக் கவனிக்க முடியாமல்... என்ன வாழ்க்கை இது... பேசாமல் வேலையைத் தூக்கி எறிந்து விடலாம் என்று தோன்றியது. ஆனால் ஓய்வு பெற இன்னும் எட்டு மாதங்கள்தானே, பல்லைக் கடித்துக் கொண்டு சமாளித்தால் போதும். அப்புறம் நாள் முழுவதும் வீட்டில்தானே இருக்கப் போகிறோம். அதன்பின் அஷ்வினியின் இந்த மனக்குறையைப் போக்கிவிடலாம் என்று யோசித்தவளுக்கு காபி குடித்தால் தேவலாம் போலிருந்தது. ஸ்ரீதரன் மாத்திரையைப் போட்டுத் தூங்கிவிட்டார். வசுந்தரா கிச்சனுக்குச் சென்று காபி போட்டுக் குடித்தாள். அப்போது மழை பெய்ய ஆரம்பித்தது. ஏற்கனவே டிவியில் கனமழை பெய்யும் என்று முன்னறிவிப்பு கொடுத்ததால் ஜன்னல் வழியே மழையை வேடிக்கை பார்த்தபடியே டைரி எழுத ஆரம்பித்தாள்.

மழை தொடர்ந்தது. வசுந்தரா களைப்பில் டைரியை மூடி மேஜை டிராயரில் வைத்துவிட்டு லைட்டை அணைத்துவிட்டுத் தூங்க ஆரம்பித்தாள். மழை விடிய விடிய பெய்தது. நிற்காமல் பெய்த மழையால் திருநெல்வேலி தண்ணீரில் மிதக்க ஆரம்பித்தது.

அஷ்வினி காலையில் ஏழு மணிக்கு எழுந்து வரும்போது டைனிங் டேபிளில் உணவு தயாராக இருந்தது.

''விடிய விடிய மழை கொட்டுதுல்ல. காலையிலயே அம்மாவுக்கு போன் மேல போன். அதான் சீக்கிரமே கிளம்பிட்டா. இன்னைக்கு ஒரு நாள்தாம்மா. நாளையில் இருந்து ஆபீஸ் போகமாட்டா. அப்புறம் அம்மா உன் கூடவேதான் இருப்பா'' என்றார் ஸ்ரீதரன். அஷ்வினி அந்த பதிலில் திருப்தி அடையவில்லை என்பது அவளின் முகத்தில் தெரிந்தது.

வசுந்தரா காரில் வழக்கமாகப் போகும் பல வழிகளில் தண்ணீர் தேங்கி நின்றதால் டிரைவர் மாற்று பாதைகளில் காரைச் செலுத்தி, எப்படியோ ஒரு வழியாக அவளை ஆபீஸிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்.

உள்ளே நுழையவும் பியூன் ரவி ''குட்மார்னிங் மேடம்'' என்றான்.

''குட்மார்னிங் ரவி. உங்க ஏரியாவுல மழை எப்படி இருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே தனது அறைக்குள் சென்றாள்.

"படகுல ஏறித்தான் ஆபிஸ் வந்தேன் மேடம். இன்னைக்கு ஆபிஸ்க்கு பதினைஞ்சு பேர்தான் வந்துருக்காங்க. பன்னிரெண்டு பேர் லீவு சொல்லிட்டாங்க" என்று வருகைப் பதிவேட்டைக் கொண்டு வந்து கொடுத்தான். அப்போது டேபிளில் இருந்த லேண்ட் லைன் போன் அடித்தது. எடுத்துப் பேசினாள். திருநெல்வேலி வட்ட அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கோட்ட அலுவலகத்தின் நிர்வாகப் பொறியாளர் கூட்டுக் குடிநீர் திட்டத்தைப் பற்றிய சந்தேகங்களைக் கேட்டார்.

"சார்.. மொத்தம் அஞ்சு சம்ப் கட்டுறோம். மோட்டார் ஸ்பீடு குறைஞ்சது இருநூறு ஹார்ஸ் பவர் இருக்கணும். அப்பதான் தண்ணீர் தடையில்லாம சீரான வேகத்துல அடுத்தடுத்த சம்புக்கு போகும். டீட்டெயில் புராஜக்ட் ரிப்போர்ட் ரெடி பண்ணியாச்சா?. அடுத்த வாரம் வேலையை ஆரம்பிக்கணும். ஆனா இந்த மழை எல்லாத்தையும் கெடுத்துரும் போல இருக்கு. இதைப் பத்தி இப்ப ஹெட் ஆபிஸுக்கு பேச முடியாது. மழை வெறிக்கட்டும். அப்புறமா நான் உங்ககிட்ட பேசுறேன்" என்று சொல்லிவிட்டு போனை வைத்தாள்.

அப்போது உதவிப் பொறியாளர் வந்து "மேடம் மழை இப்படியே தொடர்ந்துச்சுன்னா நாளைக்கு எம்.டி. விசிட் இருக்கும்னு தகவல் வருது" என்றார்.

"போச்சுடா. நாளைக்குத்தான் எனக்கு லீவு ஆரம்பிக்குது. இப்பப் பார்த்துதான் இந்த மழை வரணுமா?"

"மேடம் பேசாம நீங்க லீவு போட்டுட்டுப் போங்க. ஆபீஸ்ல என்னிக்குத்தான் வேலை இல்லை. பாப்பாவைப் பாருங்க" என்றான் ரவி. "இல்லை ரவி. எம்.டி. வந்துட்டா மேடம் அவர் கூடவே எல்லா இடத்துக்கும் ஆய்வுக்காகப் போகணும். அதனால் லீவைக் கேன்சல் பண்ணிடுவாங்க" என்றார் உதவிப் பொறியாளர்.

"அதை அப்புறம் பார்த்துக்கலாம் சார். முதல்ல இப்ப எங்கெல்லாம் வெள்ளம் வந்துருக்கு? எங்கெல்லாம் பைப்லைன் உடைஞ்சிருக்குன்னு விசாரிங்க. என்ன காரணம்? எப்படி சரி செய்யலாம்னு நாம எம்.டி கிட்ட ரிப்போர்ட் ரெடி பண்ணிக் கொடுக்கணும். நல்லவேளையா எங்க ஏரியாவுல தண்ணீர் ரொம்பத் தேங்கலை. என் ஹஸ்பண்டும், பொண்ணும் பத்திரமா இருக்காங்க. இப்போதைக்கு எனக்கு இருக்கிற ஒரே நிம்மதி இதுதான்" என்று கூறியவள் ரவியிடம் "நான் வரும்போது பார்த்தேன். எதிரே உள்ள மெஸ் திறந்துருக்கு. நம்ம ஆபீஸ்ல யாரெல்லாம் சாப்பாடு கொண்டு வரலைன்னு கேட்டு விசாரிச்சு மெஸ்ல வாங்கிட்டு வந்து கொடுத்துடுங்க ரவி" என்றாள்.

"சரி மேடம்" என்றான்.

மழையின் வேகம் அதிகரித்தது.

அஷ்வினி மதியம் சாப்பிட உட்கார்ந்தாள். டேபிளில் அவளுக்குப் பிடித்த சாம்பார், அவியல், பருப்பு, நெய், அப்பளம் எல்லாம் இருந்தது. எதுவும் பேசாமல் சாப்பிட்டாள்.

"அம்மா உனக்குப் பிடிச்சதாப் பார்த்துப் பண்ணிருக்கா" என்று ஸ்ரீதரன் சொல்லவும் "நான் நேத்து காலையில அம்மாவைப் பார்த்ததுப்பா. மழை வேற கொட்டிக்கிட்டிருக்கு. நியூஸ்ல சொல்றதைக் கேட்டு என் புருஷன், மாமியார், மாமனார் எல்லாரும் மாத்தி மாத்தி போன்பண்றாங்க. இப்பக்கூடஉங்கம்மாஉங்கூடஇருக்காமஆபீஸ்போயிட்டாங்களான்னு என் வீட்டுக்காரர் கோபப்படுறாரு. என் மாமியாரும் இதுதான் சாக்குன்னு குத்திக் காட்டுறாங்க. நான் என்ன பண்ணட்டும்?" என்று அழுகையும் கோபமுமாகக் கேட்டாள்.

"நேத்து நீ பேசினதுல இருந்த எனக்கு மனசு சரியில்லை அஷ்வினி. என் உடல்நிலை நல்லா இருந்தா உன் அம்மா கண்டிப்பா வேலையை ரிசைன் பண்ணிருப்பா. எல்லாம் என்னாலதான்னு தோணுது" என்று ஸ்ரீதரன் வருத்தப்பட்டுக் கூறியதும் "அய்யோ... அப்பா.. அப்படி எதுவும் ஃபீல் பண்ணிடாதீங்க" என்று அஷ்வினி பதறினாள்.

"இல்லடா. நீ சொல்றது நியாயம்தான். உனக்கு இருக்குற இதே வருத்தம் வசுந்தராவுக்கும் இருக்கு. பல தடவை எங்கிட்ட சொல்லி அழுதுருக்கா. இந்தா.. உன் அம்மாவோட டைரி. இதைப் படிச்சுப் பார்த்தா உனக்குப் புரியும். இந்த மழையில அவ எப்படி வீடு வந்து சேரப் போறாளோ? என்று புலம்பியபடி வசுந்தராவின் டைரியை நீட்டினார்.

டைரியை வாங்கிய அஷ்வினி வேகமாக அதைத் திறந்தாள். "அம்மாவாக நான் தோற்ற தருணங்கள்" என்று முதல் பக்கத்தில் எழுதப்பட்டிருந்தது. பதட்டத்துடன் பரபரவென்று பக்கங்களைப் புரட்டினாள். ஒவ்வொரு நிகழ்வும் தேதி, வருடத்துடன் குறிப்பிடப்படிருந்தது.

மார்ச் 12, 2001

இன்று அஷ்வினிக்குக் காய்ச்சல் குறையவில்லை. ஆனாலும் லீவ் இல்லாததால் ஆபீஸுக்கு சென்றேன். நாள் முழுவதும் பிள்ளை எப்படி இருக்கிறாளோ என்ற கவலைதான். வேலையைப் பார்க்கவே முடியவில்லை. எப்படா வீட்டிற்கு வந்து என் பிள்ளையைப் பார்ப்பேன் என்று இருந்தது.

அக்டோபர் 8, 2003

அஷ்வினி பள்ளிக்கூடத்தில் விளையாடும்போது கீழே விழுந்து அடிபட்டு கையில் ரத்தம் சொட்டச் சொட்ட வீட்டிற்கு வந்து நின்றாள். நான் பதறிப் போனேன். ஆனால் அப்போது எலக்ஷன் டியூட்டிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். உடனிருந்து என் மகளைக் கவனிக்க முடியாமல், ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல முடியாமல் கிளம்பிச் சென்றேன். அன்று நான் விட்ட கண்ணீரை இறைவனே அறிவான். வலது கையில் அடிபட்ட என் மகள் எப்படி சாப்பிடுவாள், எப்படி தலை பின்னுவாள். அதையும் உடம்பு சரியில்லாத என் கணவர்தான் செய்ய வேண்டும். ஒரு அம்மாவாக இந்த நிலையில் கூட என் மகளைத் தனியே விட்டுச் செல்கிறேனே?

ஏப்ரல் 25, 2006

மகள் வயதுக்கு வருவது பெற்றோருக்கு மகிழ்ச்சியான விஷயம். ஒரு தாயாக அஷ்வினியை சிறப்பாக கவனித்துக் கொள்ள விரும்பினேன். ஆனால் இரண்டு நாட்கள் கழித்துதான் விடுப்பு கிடைத்தது. அந்த இரண்டு நாட்களும் ஆபீஸ் போக வேண்டியதாயிற்று. அஷ்வினி ஏழாம் வகுப்பு படிக்கும் பெண். பாவம் எந்த விபரமும் தெரியாத சிறுமி. என்ன செய்வாள்?. பெண் பிள்ளைகள் தாயிடம் மட்டுமே கேட்க வேண்டியசந்தேகங்களைஎன்மகள்பக்கத்துவீட்டுப்பெண்களிடமும், உறவினர்களிடமும் கேட்க வேண்டிய நிலையில் இருந்தாள். மன்னித்து விடு என் மகளே!

ஏப்ரல் 24, 2012

அஷ்வினி அம்மன் போட்டு படுத்திருந்தாள். ஆபீஸில் ஆடிட் என்பதால் லீவு போடுவதில் சிரமம் இருந்தது. உடலெங்கும் பரவியிருந்த அம்மையின் தாக்கத்தால் என் மகள் கண் விழிக்காமல் கிடந்தாள். அம்மா.. அம்மா.. என்று ஈனஸ்வரத்தில் முனகினாள். நானோ ஆபீஸில் பைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மேலதிகாரிகளிடம் சண்டை போட்டு லீவு பெற்று வருவதற்குள் அஷ்வினிக்கு அம்மையின் வேகம் தணிந்திருந்தது. அம்மா.. அம்மா.. என்று அவள் அழைக்கும்போது உடனிருக்காத அம்மா நான்..

பக்கங்கள் நீண்டு கொண்டிருந்தன. கண்களில் நீர் வடிய ஒவ்வொரு பக்கத்தையும் வாசித்த அஷ்வினி கடைசியாக நேற்று வசுந்தரா எழுதியதைப் படித்தாள்.

டிசம்பர் 18, 2023

"அஷ்வினி நான் அவளுடன் இல்லை என்று வருத்தப்பட்டிருக்கிறாள். அவளின் வருத்தம் நியாயம்தான். பிரசவ நாள் நெருங்க, நெருங்க ஒவ்வொரு பெண்ணுக்கும் இனம் புரியாத பயம் ஏற்படும். அப்போது தாயின் அருகாமை வேண்டும் என்று தோன்றும். என் மகள் கேட்பது நியாயம்தானே? அவளும் சிறு வயதில் இருந்து எங்கள் சூழ்நிலை புரிந்து நடந்து கொண்டிருக்கிறாள். எந்த விதத்திலும் எங்களைக் கஷ்டப்படுத்தியதில்லை. எங்கள் வார்த்தையை மீறி நடந்தது இல்லை. இறைவா.. அடுத்த பிறவி என்று ஒன்று உண்டு எனில் அஷ்வினியே எனக்கு மகளாகப் பிறக்க வேண்டும். அப்போது நான் அவளருகில் இருந்து அவளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். இந்த வரத்தை மட்டும் எனக்குக் கொடுத்து விடு. உனக்குக் கோடி புண்ணியமாக இருக்கும். அதை விட இப்போது என் மகள் அஷ்வினியின் பிரசவ நேரத்தில் நான் உடனிருக்க வேண்டும். அதை நிறைவேற்றிக் கொடு இறைவா"

அஷ்வினி தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். ஸ்ரீதரன் பதறிவிட்டார்.

விடாமல் பெய்த மழையால் திருநெல்வேலி வெள்ளக் காடானது. பல இடங்களில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. வசுந்தரா ஆபீஸில் இருந்து கிளம்பும் வரை எம்.டி. விசிட் பற்றிய எந்த அதிகாரப்பூர்வமான அறிவிப்பும் வரவில்லை. அவள் பதட்டத்தில்

இருப்பதைப் பார்த்த ரவி துணைக்கு வருகிறேன் என்று சொன்னான். இருவரும் குறிப்பிட்ட தூரம் வரை காரில் வந்தனர். அதன் பிறகு கார் செல்ல முடியாததால் சிறிது தூரம் தண்ணீருக்குள் நடந்து, பின் கிடைத்த ஆட்டோவில் ஏறி வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

மழைநீர் வசுந்தராவின் வீட்டு வாசல் நடையைத் தொட்டுவிட்டுச் சென்றது. வசுந்தராவைப் பார்த்தும் ஸ்ரீதரனுக்கு நிம்மதி ஏற்பட்டது. அஷ்வினி அம்மாவை ஓடி வந்து கட்டிக் கொண்டு "ஸாரிம்மா" என்று அழுதாள். வசுந்தரா எதுவும் புரியாமல் "எதுக்குடா ஸாரி?" என்று கேட்டாள். அதற்குள் அஷ்வினி வயிற்றில் கை வைத்து "அம்மா" என்று கத்தினாள். ஸ்ரீதரன் பதறிவிட்டார். வசுந்தரா மகளின் தலையை வருடி "பயப்படாத அஷ்வினி.. அம்மா வந்துட்டேன்ல" என்று தேற்றினாள்.

"மேடம் மழை நிக்கிற மாதிரி தெரியலை. பேசாம இப்பவே பாப்பாவைக் கூட்டிட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருங்களேன். பாதுகாப்பா இருக்கும்" என்றான் ரவி. மூவருக்கும் அந்த யோசனை சரியென்றுபட்டது. ரவி எப்படியோ ஒரு டாக்ஸியை வரவழைத்து மூவரையும் பத்திரமாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றான். ஆஸ்பத்திரியின் கீழே இருந்த கார் பார்க்கிங் ஏரியாவில் லேசாகத் தண்ணீர் தேங்கியிருந்தது. முதல் தளத்தில் எந்த பயமும் இல்லை. ரவி மூவரையும் மாடிக்கு அழைத்துச் சென்றான்.

அஷ்வினிக்கு அட்மிஷன் போடப்பட்டது. ஏற்கனவே அவள் அழுது அழுது சோர்ந்து விட்டதால் சிசேரியன் பண்ணி குழந்தையை வெளியே எடுப்பது நல்லது என்று டாக்டர்கள் கூறினர். அஷ்வினி பிரசவ வார்டிற்குள் அனுமதிக்கப்பட்டாள். வசுந்தராவும் ஸ்ரீதரனும் பதட்டத்துடன் நின்றனர்.

அப்போது ரவியின் செல்போன் அடித்தது.

"மேடம் பொண்ணுக்கு இப்போ டெலிவரி டைம். பதட்டத்துல இருக்காங்க. அதான் செல்போனை எடுக்கலை. நான் சொல்லிடறேன்" என்று கூறிவிட்டு போனை வைத்தான். வசுந்தரா அவனை என்ன என்பதுபோல் பார்த்தாள்.

"மேடம் எம்.டி. வந்துட்டாரு போல. உங்களை வரச் சொல்றாங்க" என்றான்.

வசுந்தரா அப்போது எதுவும் பேசும் மனநிலையில் இல்லை. மகளுக்கு பிரசவம் நல்லபடியாக நடந்தால் போதும் என்று நினைத்தாள்.

சிறிது நேரத்தில் பெண் குழந்தை பிறந்திருப்பதாகத் தகவல் வந்தது. நர்ஸ் குழந்தையை வசுந்தராவிடம் கொடுத்தாள். பேத்தியைக் கையில் வாங்கிய தருணம் ஸ்ரீதரனும், வசுந்தராவும் மகிழ்ச்சியில் திளைத்தனர். அஷ்வினிக்கு நினைவு திரும்பியதும் குழந்தையைப் பார்த்துப் பரவசம் அடைந்தாள்.

அப்போது அவளது மொபைலுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது. எமர்ஜென்சி சூழ்நிலையில் வசுந்தரா அலுவலகப் பணியாற்றாமல், சொந்தக் காரணங்களுக்கு

முக்கியத்துவம் கொடுத்ததால் ஒரு வாரத்திற்கு சஸ்பெண்ட் செய்யப்படுவதாக அந்த செய்தி கூறியது.

"இதெல்லாம் ரொம்ப அநியாயம்" என்றான் ரவி.

"என்ன வசுந்தரா இது?" என்று ஸ்ரீதரன் அதிர்ச்சி அடைந்தார்.

"பொறுங்க நான் எம்டிகிட்ட பேசிப் பார்க்கிறேன்" என்றாள்.

பின் எம்.டி.க்கு போன் செய்து, தன் மகள் டெலிவரிக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு குழந்தை பிறந்திருப்பதைச் சொன்னாள். அதனால் தான் விடுப்பு எடுத்ததாகச் சொல்லி நிலைமையை விளக்கினாள்.

போனை வைத்ததும் "மேடம் எம்டி என்ன சொன்னார்?' என்று ரவி பதட்டத்துடன் கேட்டான்.

"விஷயத்தை சொல்லி இருக்கேன் ரவி. பார்க்கலாம்" என்றாள்.

"அம்மா என்னால் தானே இதெல்லாம்?" என்று அஷ்வினி கண்கலங்கினாள்.

"இல்லடா செல்லம். நீ இப்படி நினைக்காத" என்று வசுந்தரா ஆறுதல் சொன்னாள்.

"ரிட்டயர்மென்ட் நேரத்துல இது உனக்கு பிளாக் மார்க் ஆயிடுமே?" என்று ஸ்ரீதரன் வருத்தப்பட்டார்.

"பரவாயில்லைங்க. என் பொண்ணுக்காக இதை நான் ஏத்துக்கிறேன். இந்த பிளாக் மார்க் தான் என் பொண்ணோட பிரசவ நேரத்துல நான் கூட இருந்தேன் என்பதற்கு அத்தாட்சி. ஒரு அம்மாவா நான் தோற்கவில்லை. இது எனக்கு போதும்" என்றாள்.

"என்னை மன்னிச்சிடுங்கம்மா" என்று அஷ்வினி கதறினாள்.

"குழந்தை பெத்த உடம்பு. அழக்கூடாதும்மா" என்று வசுந்தரா அவளைத் தேற்றினாள்.

அப்போது ரவிக்கு போன் வந்தது. எடுத்துப் பேசியவனின் முகத்தில் சந்தோஷம் தெரிந்தது.

"மேடம் எம்டி உங்க சூழ்நிலையைப் புரிஞ்சிகிட்டார். உங்க சஸ்பென்ஷனை கேன்சல் பண்ணிட்டாங்க. நீங்க லீவ்ல இருக்கலாம்னு எம்டி சொல்லிட்டார்" என்றான்.

அதைக் கேட்டதும் அஷ்வினி அழுகையை நிறுத்தினாள். ஸ்ரீதரன் நிம்மதி பெருமூச்சு விட்டார். வசுந்தராவிற்கும் மகிழ்ச்சியில் கண்கள் லேசாகக் கலங்கின.

"நல்லவேளை வசுந்தரா. இப்பதான் நிம்மதியா இருக்கு" என்றார் ஸ்ரீதரன்.

"ஆமாங்க. எனக்கும் ரொம்ப சந்தோஷமா இருக்கு. பாருங்க பேத்தி எவ்வளவு அழகா இருக்கா!" என்றாள் வசுந்தரா குழந்தையைக் கொஞ்சியபடி.

அம்மாவின் அருகாமையையும், மகிழ்ச்சியையும் கண்ட அஷ்வினி "இறைவா மீண்டும் ஒரு ஜென்மம் உண்டெனில் என் அம்மாவிற்கே நான் மகளாய்ப் பிறக்க வேண்டும். அப்போது அம்மாவைக் குற்றம் சொல்லாமல், காயப்படுத்தாமல் வாழ வேண்டும். எனக்கு அந்த வரம் கொடு இறைவா" என்று கண்ணீர் மல்க மனதிற்குள் வேண்டினாள்.

சுபம்

மனைவி அமைவதெல்லாம்

மனைவி என்னும் மந்திரச்சாவி
எந்தப் பூட்டையும் திறக்கும்

மனைவி ஓர்
மகோபாத்யாயா
வாத்தியாருக்கெல்லாம்
வாத்தியார்
கற்ற அனைத்தையும்
காலாவதியாக்குவாள்

மனைவி ஓர் மாயக்குகை
ஒரு வழிப் பாதை
உள்ளே போகலாம்
வெளியே வர இயலாது

மனைவி ஒரு மத்தாப்பு
பல வர்ண ஜாலம்
சில நிமிட கோலம்/

மனைவி ஓர் கல்வெட்டு/
சொன்ன சொல் ஒவ்வொன்றும்
பல தலைமுறைக்கு நிற்கும்

மனைவி ஓர் அகராதி
அத்தனை சொற்களுக்கும்
புதுப் பொருள் காட்டும்

- சத்யபிரபா

ரம்பா நளகூபரன்

எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி
கோவில்பட்டி

ஒரு பெண் ஐபிஎஸ் அதிகாரி தனக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த முன்னாள் சிறப்பு டி.ஜி.பி மீது வழக்கு தொடர்ந்தார். தீர்ப்பு வெளிவந்து முன்னாள் சிறப்பு டிஜிபிக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. விருதுநகரைச் சேர்ந்த 82 வயது முதியவர், மனவளர்ச்சி குன்றிய 16 வயது சிறுமியிடம் தவறாக நடந்துள்ளார். அதற்காக அவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தில் மாணவியிடம் தவறாக நடந்து கொண்டவருக்கு 30 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வக்கிரம் பிடித்தவர்கள் சின்னஞ்சிறு பெண் குழந்தைகளைக் கூட விட்டு வைப்பதில்லை என்பதுதான் மனதைப் பதற வைக்கும் கொடுமையாக உள்ளது.

இந்தக் காலத்தில் அறிவியல் வளர்ச்சி ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் குற்றங்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டேதான் வருகிறது. பெண்கள் கல்வியறிவு, வேலைவாய்ப்புகளில் முன்னேறினாலும் உடல் சார்ந்த கொடுமைகளை எதிர்கொள்வதில் இப்போதும் சிரமங்கள் உள்ளன.

எனில் ராமாயண காலத்தில் ராவணன் எப்படி சீதையை துன்புறுத்தாமல் அசோகவனத்தில் சிறை வைத்திருந்தான் என்ற கேள்வி எழுகிறது. அதற்கு அவன் பெற்ற சாபமே காரணம் என்று சொல்லப்படுகிறது. விஷ்ரவசுவின் மனைவி இலவித தேவிக்கு பிறந்தவர் குபேரன். விஷ்ரவசுவின் இன்னொரு மனைவி அசுரர் குலத் தலைவரின் மகளான கேகசி ஆவாள். கேகசிக்கு பிறந்தவன் ராவணன். எனவே குபேரனும், ராவணனும் சகோதரர்கள் ஆவர்.

குபேரனுக்கு நளகூபரன் என்ற மகன் இருந்தான். அவனது மனைவியின் பெயர் ரம்பா. அவள் பேரழகி. அழகில் சிறந்தவளான ரம்பாவைக் கண்ட உடனே ராவணன் மோகம் கொண்டான். அவளை நெருங்கினான். ''நான் உங்கள் மருமகள் இது தவறு'' என்று ரம்பா கெஞ்சினாள். ஆனால் ராவணன் அதைப் பொருட்படுத்தவில்லை. ரம்பாவைத் தன் இச்சைக்கு பலியாக்கினான். அவள் ஓடிவந்து தன் கணவனிடம் நடந்ததைச் சொல்லி அழுதாள். கோபம் கொண்ட நளகூபரன் ராவணனைப் பார்த்து, ''இனி நீ, எந்தப் பெண்ணையும் அவளின் விருப்பம் இல்லாமல் தொட்டால், உன் தலை வெடித்துச் சிதறிவிடும்'' என்று சாபம் கொடுத்தான். ராவணன் இந்த சாபத்திற்கு பயந்துதான் சீதையை நெருங்காமல் அசோகவனத்தில் பாதுகாப்பாக வைத்திருந்தான். இந்த நிகழ்வுக்குப் பிறகு

ராவணனால் சிறைபிடிக்கப்பட்ட ஒவ்வொரு பெண்ணும் கற்புடன் இருந்ததற்கு ரம்பா என்ற பெண்ணே காரணம் ஆவாள்.

இன்று ராவணன்கள் ஏராளமாக இருக்கிறார்கள். பலியாக ரம்பாக்களும் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் சாபமிடத்தான் நளகூபரன்கள் இல்லை. ஆயினும் சாபங்கள் விமோசனங்கள் அல்ல. தண்டனைகள் தீர்வுகள் அல்ல. பெண் என்பவள் உடல் மட்டுமல்ல என்பதை பாலியல் வக்கிரம் நிறைந்த குற்றவாளிகள் உணர்ந்து, மனம் திருந்துவது ஒன்றே சமூகத்திற்கு உண்மையான தீர்வாக இருக்கும்.

தெளிவு

நடை பாதையில் ஒருவன்
காற்றோடு குத்துசண்டை
போடுவது போல் பாவனை செய்து கொண்டு
நடையும் ஒட்டமுமாக இருந்தான்

பதின்வயது பெண் ஒருத்தி
செயற்கை முடி பொருத்தி
டாட்டூ போட்ட தொடைத் தெரிய
குட்டை பாவாடையுடன்
நடந்து போய்க்கொண்டிருந்தாள்

எதிரே சென்ற காரின்
பின்பக்க ஜன்னலின் கண்ணாடி வழியே
இரண்டு பேய் முகங்கள் எட்டி பார்ப்பது
போல்
முகமூடி வைக்கப்பட்டிருந்தது
முச்சந்தியில் ஒருவன்
மூன்றாம் பாலினித்தவளிடம்
தன் உடல் பசிக்கு
பேரம் பேசிக் கொண்டிருந்தான்

இவை எல்லாவற்றையும்
இன்னும் தெளிவாகக் காண
சமிக்ஞைகாக காத்திருக்கும்
கார் கண்ணாடிகளில் நீர் பீச்சி
துடைத்து சுத்தம் செய்து
யாசித்துக் கொண்டிருந்தாள்
சிறுமியொருத்தி

- அதிரன்

மற்றவை நீங்கள் அறிந்ததே...

அதிரன்

வந்ததிலிருந்து பரபரப்புடன் காணப்பட்டனர் அவனுக்கு அடுத்தடுத்த இருக்கையில் அமர்ந்திருந்த வெளிநாட்டு பதின்வயது யுவதிகள். இடை இடையே முன் இருக்கையில் ஜன்னலோரம் பொம்மை போல் அமர்ந்திருந்த இன்னொரு யுவதியுடன் ஏதோ ஒரு மொழியில் அவனை கைகாட்டி கைகாட்டி பேசிக் கொண்டிருந்தனர்.

கடைசியில் அவன் மகள் சாயலில் இருந்த ஒருத்தி மட்டும் எழுந்து சென்று விமானப் பணிப் பெண்ணிடம் மீண்டும் அவனை கைகாட்டி ஏதோ கேட்க்கிறாள். அவள் முடியவே முடியாது என்பது போல் தலையாட்டுகிறாள்.

அவனுக்கு புரிந்து விட்டது நண்பிகள் எல்லோரும் பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்து பயணிக்க விரும்புகிறார்கள் என்று. அவனாகவே அதை அவர்களிடம் ஆங்கிலத்தில் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டான்.

இருக்கையை மாற்றிக் கொள்வதில் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் தெரிவித்தான். மகிழ்ச்யுடன் யுவதிகள் *Yes yes* என்று ஒருவருக்கொருவர் ஹை-பை கொடுத்துக் கொண்டனர்

தன் மகள் சாயலில் இருந்ததவளை மட்டும் இன்னொரு முறை பார்த்துக் கொண்டான் முன் வரிசை யுவதி மிகப்பரபரப்புடன் அவனை திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டிருந்தாள்

நானே வருகிறேன் என்பது போல் சைகை காட்டிவிட்டு தன் சீட்டை விட்டு எழுந்து அந்த முன் வரிசை ஜன்னல் ஓர சீட்டை அடைந்தவனை கைகுலுக்கி "நன்றி" "நன்றி" என்று ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு குதுகுலத்துடன் சென்று பின் இருக்கை ஜன்னல் சீட்டில் போய் அமர்ந்து கொண்டாள்.

இன்னும் சற்று நேரத்தில் நடக்கப் போகிற கோர விபத்தை பற்றி எந்த பதற்றமும்மின்றி அமைதியாய் நின்று கொண்டிருந்தது அந்த வான் ஊர்தி அவன் வந்து அமர்ந்த ஜன்னல் சீட்டின் எண் *11 A*

டீச்சர் வீடு

சதீயபிரபா

டீச்சர் வீட்டுக்குள் நுழைந்தேன், உள்ளே ஹாலில் சார் போட்டோ பெரியதாக இருந்தது. கிறிஸ்தவர் என்பதால் படத்துக்கு மாலை, ஊதுபத்தி, விளக்கு என்று எதுவும் இல்லை. 'வா லதா உன் மகன் எங்கே? அவன் வரலியா என்றார் டீச்சர். அவருக்கு வயது எழுபதை எட்டியிருக்கும்.. இன்னொரு ரிட்டயர்டு டீச்சரும் இவரும் மட்டும் இருக்கிறார்கள்

இந்தாங்க டீச்சர் வாடகை என்று பணத்தை கொடுத்தேன்

அம்மாவும் பொண்ணும் கேக்கமாட்டீங்க. அவனுங்க ரெண்டு பேரும் அமெரிக்காவுல இருக்குறானுங்க. எனக்கு பென்ஷன் இருக்கு. இந்த பணம் எதுக்கும்மா? அம்மா நல்லாருக்காங்களா? அப்போ அவுங்க சொந்த சகோதரி போல உதவுனாங்க; அதை மறக்கவே மாட்டேன்

நல்லா இருக்காங்க டீச்சர்; நடக்க முடியல. இப்பவும் டீச்சர் தான் எனக்கு தாய் மாதிரி, என்னை அன்பா ஆதரிச்சாங்கன்னு சொல்லிகிட்டே இருப்பாங்க. டீச்சர் வீட்டுக்கு போய்ட்டு வரும்போது தாய் வீட்டுக்கு போய்ட்டு வர்ற மாதிரி பை நிறைய சாமான் போட்டு குடுத்துவிடுவாங்கன்னு சொல்லுவாங்க

லதா, கடவுள் எப்படியும் நல்லவங்களுக்கு உதவாம போக மாட்டாரு காப்பி போடு குடிப்போம்

உடனே நான் போய் காபி போட்டேன்; இருவரும் குடித்தோம்.

லதா என் காலமும் முடிய போகுது. நீ ஒரு தானப் பத்திரம் எழுதிகொண்டா. நான் கையெழுத்து போட்டு தர்றேன். இந்த வீடுகளை உன் பேருக்கும் உன் தங்கச்சி பேருக்கு மாத்திடலாம்

வேணாம் டீச்சர் இப்பவே நாங்க நல்லா தான் இருக்கோம். நாளைக்கு தம்பிமாருக்கு எதுக்காவது தேவைப்பட்டால் இந்த வீடுகளை வித்து பணம் எடுக்கலாம் .

நீ சொன்னா கேக்க மாட்ட. அவனுங்க இங்கே எங்க வரப்போறானுங்க . நான் திடீர்ன்னு செத்தா தேவாலயத்துக்கு இந்த வீடுக இரண்டும் போகும் உங்க அம்மா அப்பாக்கு நான் நன்றிக்கடன் தீர்க்கனும்ன்னு நெனக்கிறேன் நீ மறுத்து பேசுற.,

இப்படியே கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்துவிட்டேன்.

அன்று நடந்ததை நினைத்துக்கொண்டேன். அம்மாவும் நானும் அழுதுகிட்டே டீச்சர் வீட்டுக்கு போனோம். அங்கே வீடு வாசல் எல்லாம் கழுவிவிட்டு ஆட்கள் எல்லோரும் தலைக்கு குளிசுட்டு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாங்க, . அம்மாவை பார்த்ததும் டீச்சரின் தங்கச்சி சகுந்தலாக்கா வந்து

லதாம்மா அழாதிங்க இப்ப தான் அக்கா தூங்ககுறாங்க உடனே லதாம்மாவை உள்ளே ரூமுக்கு அழைச்சுட்டு போனாங்க..

என்னம்மா ஆச்சு

ஹார்ட் அட்டாக் என்றார் சகுந்தலாக்கா.

நீங்க எப்பம்மா வந்தீங்க.

நாங்க காலையில தான் வந்தோம். வந்த உடனே எடுத்திட்டாங்க

டீச்சர் எங்க இருந்தாங்க, பசங்களை காணோமே

விளையாடுவானுங்க. அக்கா எங்க வீட்டுல தான் இருந்தாங்க கிறிஸ்மஸ்க்கு வந்துட்டு முந்தாநாள் தான் அத்தான் இங்க வந்தாரு. இன்னக்கு கிளம்பி நாளைக்கு அங்கே வர்றதாக சொல்லியிருந்தாரு. அதுக்குள்ள இப்படி ஆயிருச்சு

சகுந்தலாக்கா அமைதியாக பேசினாங்க,. யாரகிட்டயும் ஒரு பதட்டமோ அதிர்ச்சியோ இல்லை. அம்மாவும் கொஞ்ச நேரம் தேம்பிகிட்டே இருந்தாங்க வாய்விட்டு புலம்பினாங்க. எனக்கு பெத்த தாய் மாதிரின்னு சொல்லி அழுதாங்க

டீச்சர் கண் முழிச்சாங்க ,. என்னை தலையசைத்து கூப்பிட்டாங்க அம்மாவும் பக்கத்தில வந்து உட்கார்ந்து அழுதாங்க,. டீச்சர் சாப்பிட்டுட்டு போங்கன்னு சொன்னதும் . அம்மா ஒன்னு கத்தி அழுதுட்டாங்க.

. எங்களுக்கு டீச்சர் வீடு தான் சொந்தம் சுற்றம் எல்லாம். எங்க அம்மா அப்பா லவ் மேரேஜ் அதனால ஜாதிக்காரங்க யாருமே அவுங்கள சேர்த்துக்கல. டீச்சர் தான் லதாவை நல்லா படிக்க வையுங்க. அப்புறம் அவ உங்களை காப்பாத்துவா,, சொந்தக்காரங்க இல்லைனா என்ன நான் இருக்கேன். எங்க வீட்டுக்கு பிள்ளைங்களை அனுப்பி வைங்க ன்னு

சொல்வாங்க. என் தங்கையை கூட தத்து கேட்டாங்க. என் அம்மா கொடுக்கல. இப்பொ சாப்பிட மறுத்துட்டு அம்மா கிளம்பிட்டாங்க. .

ஒரு வாரம் கழித்து அம்மா அப்பாவுக்கு சாப்பாடு வைக்கும்போது ரகசியமாக பேசினாங்க. இன்னைக்கு டீச்சரை பார்க்க பள்ளிக்ககூடம் போயிருந்தேன். ஒரு விஷயம் கேள்விப்பட்டேன்.. ரொம்ப மனசுக்கு சங்கடமா போச்சு. டீச்சர் வீட்டுக்காரரு மாரடைப்பு வந்து சாகல்லியாம் யாரோ அடிச்சு கொன்னுட்டாங்க

ஐயையோ யாரும் போலிசுக்கு போகலையா?

இல்லங்க வெளியே தெரிஞ்சா அசிங்கம்னு கொழுந்தன் சொல்லிட்டாராம் அவுர் தான் பிணத்தை இறக்கி கொண்டு வந்து வீட்டுல வச்சுட்டு டீச்சருக்கு போன் பன்னுணாராம்

கொன்னுட்டாங்கன்னு சொன்ன, அப்புறம் இறக்குனாங்கன்னு சொல்ற

அவர் எப்படித்தான் செத்தாரு?

அவரு கவர்ன்மென்ட் ஆபிசரு. அவர் தான் பியுனோட சம்சாரத்தை வச்சிருந்தாராம் அடிக்கடி அங்க அவ விட்டுக்கு போவாராம். டீச்சர் கிறிஸ்மசுக்கு ஊருக்கு போய்ட்டாங்கள்ல இவர் ஜாலியா கிளம்பிட்ட்டாரு. அங்க பக்கத்து வீட்டுக்காரங்க இவர்கிட்ட எதுக்கோ தகராறு பண்ணிருக்காங்க. எதுக்குன்னு யாருக்கும் தெரியல. திடீருன்னு கைகலப்பாகி இருக்கு அவனுங்க அடிச்சதுல படாத எடத்துல பட்டு இவரு செத்துட்டாரு ஒடனே அந்த ஆளுங்க இவரைதூக்கில தொங்கவிட்டுட்டு இவர்தம்பிகிட்ட வந்து சொல்லி இருக்கானுங்க

என்ன சொன்னாங்க ?

எங்க சாதிக்காரப் பிள்ளையை ஊருக்கு தெரியாம வச்சிருந்தான் இன்னைக்கு அவளை என்கிட்டே கட்டித்தரச் சொல்லி கேட்டான் நாங்க மறுத்திட்டோம் உடனே அங்கேயே தூக்கு போட்டு கிட்டான்னு சொல்லிட்டாங்களாம், அடிச்சதை யாரும் சொல்லலியாம். ஆனா ஒடம்பு முழுக்க காயம். டீச்சர் சொல்லி அழுதாங்க எனக்கு மனசே கேக்கல இப்ப அவர் பணம் கொஞ்சம் வருமாம் கொழுந்தனும் பாதி பணம் கேக்குறாராம் அந்த ஆட்களுக்கு கொடுக்கனும்கிறாராம் டீச்சர் என்ன செய்வாங்க, பாவம்

ஏன் முந்தியே டீச்சருக்கு இவர் குணம் தெரியாதா? கண்டிச்சு வைக்க கூடாதா? எதுக்கு அவரை தனியா விட்டுட்டு ஊருக்கு போறாங்க?

அந்த ஆளு ஆரம்பத்திலே இருந்தே அப்படி தான். கொஞ்ச நாள் டீச்சர் டியுஷன் கூட எடுக்காம பள்ளிக்கூடம் விட்ட உடனே வீட்டுக்கு போனாங்க என்னன்னு நான் கேட்டதுக்கு வீட்டுல அவர் வேலைக்காரிய வச்சுக்கிட்டு என்ன கொடுமை படுத்திறாரு. அதனால் வேலக்கு ஆள் வைக்கல லதாம்மா. நான் வீட்டுக்கு போய் தான் மாவாட்டணும் பாத்திரம் வெளக்கணும் துணி துவைக்கணும்னு சொன்னாங்க.

இப்ப என்ன செய்ய போறாங்களாம்?

இப்ப வீட்டுல யாரும் இல்லையாம். எல்லோரும் ஊருக்கு திரும்பி போய்ட்டாங்களாம். தங்கச்சிமார் முணு பேருக்கு இவுங்க தான் கல்யாணம் பண்ணி வச்சாங்க. அவர் அதுக்கெல்லாம் ஒன்னும்சொல்ல மாட்டார். தம்பி ரெண்டு பேருல ஒருத்தர் மிலிட்டரி சின்னவர் . அவர் வரல போல. எல்லோரும் ஊருக்கு போய்ட்டாங்க நான் இனி என் சம்பளத்த மட்டும் வச்சுக்கிட்டு என்ன செய்வேன்னு அழுறாங்க. அவருக்கு வர்ற பணத்தை நம்ம கிட்ட தர்றாங்களாம் வட்டிக்கு விட்டு மாசாமாசம் பணம் தர முடியுமான்னு கேட்டாங்க

வேண்டாம் வேண்டாம் யாராவது வாங்கிட்டு கொடுக்கலைன்னா நாம பொறுப்பேற்க முடியாது. எவ்வளவு இருக்காம் ?

பதிலை காணோம் அம்மா விரலை காட்டி தொகையை சொல்லியிருப்பாள்

கோபால் கொத்தனார் வீடு கட்டி விக்குறார். ரெண்டு வீடு ஜோடியா கட்டியிருக்காரு அதை வாங்கி போட சொல்லு. இப்ப வாடகை வரட்டும் பின்னாடி பையனுங்க ஆளுக்கொரு வீடாக எடுத்துக்குவாங்க,

அப்பா சாப்பிட்டுவிட்டு கை அலம்பினார். 'டீச்சருக்கு இரண்டு வீட்டையும் சல்லிசான விலைக்கு அப்பா வாங்கி கொடுத்தார்.

இரண்டு வீடுகளில் ஒன்றில் நாங்களும் மற்றொன்றில் இன்னொருவரும் குடி இருந்தோம் எனக்கு கல்யாணம் ஆகவும் நான் ஒரு வீட்டிலும் என் அம்மா ஒரு வீடுமாக நாங்களே இன்னும் குடியிருக்கிறோம். அப்போ இந்த வாடகை டீச்சருக்கு மிகவும் உதவியாக இருந்தது. இப்போ இது தேவையில்லைன்னு சொல்வாங்க இருந்தாலும் எங்க நன்றிக்காக நாங்க கொடுத்துகிட்டே வரறோம் டீச்சர் வாடகை வேண்டாம் என்று சொன்னாலும் நாங்க கேட்குறதில்லை இந்த இரண்டு வீட்டுக்கும் டீச்சர் வீடுன்னே பேர் வச்சாச்சு.

வீடு வந்துருச்சு

அம்மா சுருண்டு படுத்திருந்தார். என்னம்மா வாடகைய குடுத்தியா? டீச்சர் நல்லாருக்காங்களா? பார்க்கனும்னு ஆசையா இருக்கு. முடியலயே.

நல்லா இருக்காங்கம்மா உங்களுக்கு நன்றிக்கடன் தீர்க்கனுமாம் அதுக்கு வீட்டை எங்க பேருக்கு மாற்றி தருவேன்னு பிடிவாதம் பிடிச்சாங்க. நான் வேண்டாம்னுட்டேன்,

வேண்டாம் வேண்டாம் அந்த மகராசி வீடு நமக்கெதுக்கு. அவுங்க எனக்கு பெத்த தாய் மாதிரி என்று ஏதேதோ தனக்குள் அம்மா பேசிக்கொண்டே இருந்தார்,

நன்றி தேவதை ரெண்டு வீட்டுக்குமாக மாறி மாறி அலைந்து கொண்டிருந்தாள்

பவுத்தமும் பெண்களும்

எஸ்.சாந்தினிபீ,
மேனாள் வரலாற்று பேராசிரியர்

பவுத்தம் என்றதும் இரு கண்களை மூடி, சிறிய புன்னகை தவழும் அமைதியான தோற்றத்தை உடைய புத்தரின் முகம் நம் மனதில் எழுவது இயற்கை.. அரச வாழ்வை துறந்து மக்களின் துயர் நீக்கும் வழி காண துறவியான மன்னர் மகன். அறிவுத் தெளிவு பெற்றதால் புத்தா என்றழைக்கப் படும் கவுதம புத்தர். அசோகர் சாலையின் இருபுறத்திலும் மரங்கள் நட்டார் என்று பள்ளிக் குழந்தைகளும் அறிந்ததைப் போல் ஆசையே அழிவுக்குக் காரணம் என்பதைப் புத்தர் சொன்னார் என்று வெகு எளிமையாக எல்லோரும் அறிவர். ''மூப்பு, பிணி மரணம் இவை எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. இதைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் எந்த சக்திக்கும் கிடையாது'' என்று புத்தர் சொல்லிச்சென்ற இயற்கை விதியை நம்மில் பலர் அறியவில்லை. சமயம், மதம், ஆன்மீகம் இவை தன் வாழ்க்கையில் குறுக்கிட அனுமதிக்காமல் அவற்றை நீக்கினார். ஆனால் அவரையே கடவுளாக்கியது பின்னர் வந்தவர்களின் திறமை.

பொ.ஆ.மு. 6ஆம் நூற்றாண்டில் பவுத்தமும் சமணமும் தொடங்கும் அளவுக்கு என்ன தேவை...? என்ற கேள்வி தோன்றலாம். அக்காலத்தில் வேதங்களின் மையச் சாறு மறைந்து மக்களின் வாழ்க்கையில் சமயச் சடங்கு சம்பிரதாயங்கள் பெருகின. அவற்றை நிறைவேற்ற முடியாமல் மக்கள் தவித்தனர். விவசாயத்திற்கு பயன்படும் பசுவையும் மாட்டையும் வேள்வித்தீயில் இழக்க மக்கள் தயங்கினர். சாதிப் பிரிவினைகள் மக்களை அழுத்தியது. இரும்பின் பயன்பாட்டால் விவசாய உற்பத்தி பெருக வாணிபமும் பெரும் செல்வத்தைக் கொண்டுவர நகரங்கள் வளர கைவினைஞரின் கைகளிலும் செல்வம் தாராளமாகப் புரண்டது. ஆனால் செல்வச் செழிப்பால் வந்த உயர்வை அடையவிடாது சாதிகள் கீழ் நோக்கி இழுத்தன. இதைப் போன்ற இன்னும் பல கட்டுப்பாடுகள் சமுதாயத்தின் அமைதியைக் குலைத்து மக்கள் மனவமைதியை சூறையாடியது. எனவே சமுதாயத்தின் பெரும்பான்மையினருக்கு வேறு வடிகால் தேவைப் பட்டது. அப்பொழுது பல சிந்தனையாளர்கள் பல சித்தாந்தங்கள் தலைத்தூக்கின. அதில் பவுத்தமும் சமணமும் இன்றும் நம்மால் பெரிதும் அறியப் பட்டவை.

சமணம் தொடக்கத்தில் இருந்தே பெண் துறவிகளை அனுமதித்தது. ஆனால் புத்தர் மாற்றுக்கருத்துடன் இயங்கினார். அவரின் வளர்ப்புத் தாயான ஆனந்தா என்னும் மாணவரின் கருத்துக்களால் தன் கொள்கையை மாற்றி பெண்களை துறவறத்திற்கு அனுமதித்தார். இவர்கள் பிக்குனிகள் என்றழைக்கப் பட்டனர். இவர்கள் கல்விக்கு செய்த சேவை மிகப் பெரியது. இந்தியாவின் பல்வேறு பகுதி கல்வெட்டுக்கள் இவர்களைப் பற்றி தரும் தரவுகளை விரிவாகப் பார்ப்போம்.

பண்டைய இந்தியாவில் ஒருவர் தன்னை அடையாளப் படுத்த தன் தந்தையின் பெயரை முதலில் சொல்லிப் பின்னர் தன் பெயரைச் சொல்லுவர். இன்றும் தமிழகத்தைச் சேர்ந்த நாம் தந்தையின் பெயரை முதல் எழுத்தாக சுருக்கி இனிஷியல் ஆக எழுதுகிறோம். ஆனால் இந்தியாவின் மற்ற பகுதிகளில் இப்பழக்கம் இன்று இல்லை. பெரும்பாலும் தனது சாதி, இனம் குலம் கோத்திரம் அல்லது தந்தையின் பெயரை தன் பெயருக்குப் பின்னால் வைத்திருப்பார்கள். அயல் நாட்டு பயணத்திற்கான பாஸ்போர்ட் வாங்கி அனுபவப் பட்டவர்கள் இதை அறிந்திருக்க வாய்ப்புண்டு. இனிஷியல் என்றால் அது என்ன? என்று விசாரிப்பார்கள். ஆனால் பண்டைய இந்தியாவில் முதலில் தந்தையின் பெயர் பின்னர் தன் சுய பெயர் எனும் பழக்கம் பெரும்பாலும் காணப்பட்டது.

உதாரணமாகக் கல்வெட்டுகளில் அல்லது பானை ஓடுகளில் ''சாத்தன் அமுதன்'' என்று வந்தால் சாத்தன்-தந்தை பெயர், அமுதன் – மகன் பெயர் என்று பொருள் கொள்ளவேண்டும். இப்பழக்கம் நீண்டகாலம் அதாவது விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலம் வரை (14 ஆம் நூற்றாண்டு) நீண்டது. பெண்கள் கணவன் பெயர் கொண்டு அறிமுகப் படுத்திக் கொண்டனர். பவுத்த சமண வழி வந்த மாணாக்கர் ஆண் பெண் இருவரும் தங்கள் ஆசிரியர்/ஆசிரியை பெயரை முன் வைத்து அடையாளப் படுத்திக் கொண்டனர். இந்த அடையாளமே பெண்ணாசிரியைகள் இருந்ததை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

இத்தகைய தகவல் பல புத்த ஸ்தூபிகள், விஹாரைகள் போன்ற பவுத்தம் தொடர்புடைய தளங்களில் கல்வெட்டுக்களில் காணக்கிடைக்கிறது. பவுத்த ஆண், பெண் துறவிகளுக்கு நினைவுத் தூண்கள், கல் படுக்கைகள், ஓய்விற்கான அமருமிடங்களை அவர்களின் மாணவர்கள் அமைத்துள்ளனர். அவற்றில் உள்ள கல்வெட்டுகளின் வழியே நாம் பல தகவல்களை அறிகிறோம். பெரும்பாலும் பிராகிருத மொழியில் இத்தகு பழமையான கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன. உதாரணமாக சாரநாத், குசிநகர் (உ.பி),சாஞ்சி (மத்திய பிரதேசம்), அமராவதி, குண்டபள்ளி (ஆந்திர பிரதேசம்), புத்த கயா (பீகார்), சாந்தி ஸ்தூபா (கஷ்மீர்,) தவுலிகிரி (ஒடிசா) என இந்தியா முழுதும் புத்த நினைவுச் சின்னங்களைக் காணலாம். தமிழகத்தில் தியாகனூர்(சேலம்),தர்மபுரி, பெரம்பலூர், வேலூர் எனப் பல இடங்களில் புத்தர் சிலைகள் கிடைத்துள்ளன. பழம்

சிலகளுக்கு புதிய விகாரைகள் அமைத்துள்ளனர். யசிலா, கடா, மிதஹூீ, தின்னா, புசஹதினி, ரெதீ, பதுமந்திகா போன்ற பெயர் கொண்ட பெண் ஆசிரியர்களின் தகவல்கள் கிடைக்கின்றன.

கீழ்காணும் கல்வெட்டு வாசகங்கள் சாஞ்சியில் கிடைத்தவை. (முதலில் வருவது கல்வெட்டு வாசகம், இரண்டாவது அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு இறுதியில் என் தமிழ் கருத்துச் சுருக்கம் தரப் பட்டுள்ளது.)

1. yasilaya atevasini-sagharakhitāye dānaṃ (Marshall and Foucher [1939] 1983: 1.311)
'The gift of Sagharakhitā, female pupil of Yasilā.'

யாசிலா வின் மாணவி சங்கரகிதாயே அளித்த தானம். இங்கே குறிப்பிடப் பட்டுள்ள இரு பெயர்களும் பெண்பால் பெயர்கள். யாசிலா ஆசிரியயை மற்றொருவர் மாணவி.

2. mulāyā dāna thabho gaḍāya atevāsiniyā (Marshall and Foucher [1939] 1983: 1.367)
'The pillar is the gift of Mulā, female pupil of Gaḍā

இந்த தூண், மாணவி கடா (தன் ஆசிரியை) முலாவிற்கு அமைத்த பரிசு.

3. [dha]madevaya dānaṃ mitasiriya atevasiniyā (Marshall and Foucher [1939] 1983: 1.363)
'The gift of Dhamadevā, female pupil of Mita'siri

மாணவி தமதெவா, மிதஹூீ (ஆசிரியை) க்கு அமைத்த பரிசு.

இந்த மூன்று கல்வெட்டுக்கள் வழியே நாம் அறிவது மாணவியர் தங்கள் ஆசிரியைகளுக்கு அமைத்த பரிசுகள் என்பதே. ஆனால் இவர்கள் துறவிகளா அல்லது இல்லற வாழ்க்கையை மேற்கொண்ட பவுத்தர்களா என்று நம்மால் அடையாளப் படுத்த முடியவில்லை. ஆக இரண்டு வழிகளிலும் கருதலாம்.

உத்திர பிரதேசத்தின் மதுரா அருங்காட்சியகத்தில் இடம்பெற்றிருக்கும் இரண்டு கல்வெட்டுக்கள் ஆசிரியை மாணவியர் உறவு குறித்து பேசினாலும் ஒரு கூடுதல் தகவலைத் தருகிறது.

Huviṣkasya[s](am) 30 1 [he 4] d(i) 20 dana bh(i)k(ṣu)ṅiy(e) Dinnaye ant(e)vāsinī[aṃ] khuḍaye [gra] …
'In the year 31 of Huviṣka, in the 4th month of winter(?), on the 20th day, the gift of Khuḍā (and) … the female pupils of the nun D' in(tnraān.s. Lüders 1961: 149–50)

'குடா என்னும் மாணவியும் இன்னும் சில மாணவிகளும் (இணைந்து) தங்கள் துறவிஆசிரியைக்கு வைத்த பரிசு. ஹுவிஸ்க எனும் மன்னன்னின் 31 வது ஆட்சி ஆண்டில், குளிர் காலத்தின் நான்காவது மாதத்தில், இருபதாம் நாள் இப்பரிசு அளிக்கப்பட்டது 'என்பதே கல்வெட்டின் தகவல்.

(mahārājasya) [d](e)vaputrasa huv[i]ṣkasya sa[ṃ] 30 9 va 3 di 5 etasya[ṃ] purva[y](aṃ) bh[i]khuṅiye Puśaha[th]iniye [a](ṃtevāsi)ni[y](e) bh[i]khuṅye Budhadevāye bodhisatvo pratithāpito sahā mātāpitīhi saravsat[v]ahitasukh[a]

'In the year 39 of mahārāja devaputra Huviṣka, in the 3rd (month) of the rainy season, on the 5th day, on this date, the bodhisattva was set up by the nun Budhadevā, the female pupil of the nun Puśahathini, together with her parents for the welfare and happiness of all being's (.trans. Lüders 1961: 166)

புத்ததேவா என்னும் பெண் துறவி தன் பெற்றோருடன் இணைந்து போதிசத்வரின் (உருவச் சிலையை) அமைத்தார். இவர் புசஹதினி எனும் பெண் துறவி ஆசிரியையின் மாணவியாவார். அதற்குப் பின் வரும் தகவல் அச்சிலை வைக்கப்பட்ட காலத்தைச் சொல்கிறது.

இந்த இரண்டு கல்வெட்டுகளும் இரு வேறு செய்தியை தருகின்றன. முதலாம் கல்வெட்டில் ஆசிரியை மட்டுமே துறவி. மாணவி அல்ல. இரண்டாவது கல் வெட்டில் ஆசிரியை மாணவி இருவருமே புத்தத் துறவியினர். ஆனல் சிலை வைத்தது வேறு ஒரு துறவிக்கு. ஒரே ஆசிரியையிடம் துறவறத்தை மேற்கொண்டவர்களும் உலகியல் வாழ்க்கை மேற்கொண்டவர்களும் கல்வி கற்றுள்ளனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் புகழ் மிக்க பவுத்தத் தலமான அமராவதி கல்வெட்டுகள் சிலவற்றைப் பார்ப்போம்

*sid*haṃ kudūranivāsika bhaya-nāgasa atavāsikasa daharabhikusa vidhikasa atevāsiniya cha budharakhitāya natiya cha chūlabudharakhitāya cha utarāyake paṭo dāna

'Success, the tablet at the northern gate, the gift of the young monk Vidhika, pupil of Reverend nāga, who resides at Kudūra, and of [his] pupil Budharakhitā, and of [her] granddaughter, and of the younger Budharakhitā.' (trans. Hultzsch in Burgess

[1886] 1996: 93)

அமராவதி ஸ்தூபியின் வடக்கு வாசலில் வெற்றிகரமாகப் பலகை வைக்கப்பட்டது. இந்தக் கொடை அளித்தவர்கள் இளந்துறவி (ஆண்) விதிகா, அவரின் மாணவி புத்தாரகிதாவும், புத்தாரகிதாவின் பெயர்த்தி இளம் புத்தாரகிதாவும் ஆவர். ஆண் துறவி விதிகா குதூராவில் வசிக்கும் மதிப்பிற்குரிய நாகா(ஆண்)வின் மாணவர்.

ஆண் துறவி ஆசிரியரிடம் பெண்கள் பாடம் பயின்றுள்ளனர். அதைப் போண்றே பெண்துறவி ஆசிரியைகள் ஆண் மாணவர்களுக்கும் கல்வி கற்பித்துள்ளனர். இருபாலினரும் கல்வி கற்றலையும் கற்பித்தலையும் இணைந்தே நடைமுறைப் படுத்தி உள்ளனர்.

[r]āyaselanivāsino vasibhūtasa (ma)hatherasa ayira-bhūtarakhitasa (a)(te)vāsikasa chula-ay(i)rasa ara[ha]-[ta]sa ayira-budharakhitasa atev(ā)s(i)niya bhikhuniyā nadāya|thaṃbho dā(na) (Burgess [1886] 1996: 104)

'The pillar is the gift of the Venerable Chula, pupil of the great elder, of self controlled mind, Venerable Bhūtarakhita, resident of [R]āyasela—and of the nun nadā, pupil of the Arhat, Venerable Budharakhita.'

சுலா எனும் ஆணும் நதா எனும் பெண்துறவியும் இணைந்து ஒரு நினைவுத் தூணை எழுப்பியுள்ளனர். இவர்கள் இருவரும் இரு வேறு ஆசிரியரின் மாணவர்கள். இவர்கள் இருவருக்குமான உறவுமுறை கல்வெட்டில் சொல்லப்படவில்லை.

vinayadhirasa aya-punavasusa atevāsiniya uvajhāyinī samuḍiyāya atevāsiniya malaṃyā pāḍakā dāna[ṃ] (Burgess [1886] 1996: 37)9
'Gift of footprints by Malā, pupil of the female teacher Samuḍiyā, pupil of Venerable Punavasu, a vinayadhāra.'

மேலே உள்ள அமராவதி கல்வெட்டு சொல்லவந்த நம் கருத்தை தெளிவாக்கிவிட்டது. மலா என்பவர் கால் பாதங்களைத் தானமாக வைத்துள்ளார். இந்த ஆடவர் சமுதியா எனும் பெண் ஆசிரியையின் மாணவர். அந்த பெண் ஆசிரியை புனவசு எனும் ஆண் ஆசிரியரின் மாணாக்கி.

பவுத்தத்தின் வழியே பெண்களின் வாழ்வியலில் இல்லற வாழ்க்கை எனும் ஒரே ஒரு கதவு இருந்து வந்த சமுதாயத்தில் வேறு சில கதவுகள் திறக்கப்பட்டன. துறவு என்பது ஒரு கதவு, கல்வி கற்க அறிவு தெளிவு பெறுதல் மற்றொரு கதவு. ஆசிரியை பொறுப்பை பெற்றது மூன்றாவது கதவு. மிகப் பெரிய மைல் கல். ஆண், பெண் இருபாலரும் இணைந்து படித்தல் நான்காவது கதவு, இருபாலருக்கும் கற்பித்தல் ஐந்தாவது கதவாகும். ஒருமாணவரும் மாணவியும் சேர்ந்து ஒரு தானத்தை வழங்குதல் ஆறாவது கதவு. இவற்றையெல்லம் கடந்து மேலோங்கி நிற்பது தந்தையின் பெயருக்குப் பதிலாக ஆசிரியைகளின் பெயர் முன்னிலைப் படுத்தப்பட்டது அதுவும் ஆணுக்கு நிகராக பெண்ணின் நிலை உயர்த்தப் பட்டது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் வாழ்ந்த சாவித்திரி பாய் புலே பெண்கல்விக்காக பட்ட எண்ணவியலா துண்பங்களையும் சந்தித்த துயரங்களையும் அவமானங்களையும் சற்று மீள்பார்வை செய்து அத்துடன் கல்வெட்டு சொன்ன தரவுகளையும் ஒப்புமைப் படுத்திப் பார்க்கும் பொழுதே பவுத்தம் பெண்களுக்களித்த உயர்வின் முழுத் தன்மையைப் புரிந்து கொள்ள இயலும்.

இக்கல்வெட்டுக்களின் காலம் அதிகப்படியாக பொது ஆண்டு 1000 ற்குள் அடங்கும். சமணமும் இதே உயர்வை பெண்களுக்குத் தந்தது.

உனக்கான ஓர் அழகிய கவிதை

பல ஆண்டுகளுக்கு முன்பு
வாழ்வின் நெடுஞ்சாலையில்
நடந்து கொண்டிருந்தபோது
ஒரு பெயர்ப் பலகையைப்
பார்த்தேன்

அது
சொர்க்கம் பல சரக்குக் கடை
அதனருகில் நான் சென்றதும் கதவுகள் அகலத்
திறந்தன

பார்த்தால்
நான் கடைக்குள் நிற்கிறேன்

தேவதைகளின் கூட்டம்
அங்கே இங்கே நிற்கின்றது

ஒருவர் என்னிடம்,
ஒரு கூடையைத் தந்தார்
குழந்தையே!
'பொருட்களைக் கவனமாக வாங்கு' என்றார்

மனிதனுக்கு தேவைப்பட்டதெல்லாம்
அந்தப் பல சரக்குக் கடையில்
இருந்தன.

சுமக்க இயலவில்லை என்றால்
மீண்டும் வந்து
தேவையான பொருட்களை
வாங்கிக் கொள்ளலாம்

முதலில் கொஞ்சம் **பொறுமை** வாங்கினேன்.
அதே வரிசையில்
காதலும் இருந்தது
கொஞ்சம் கீழே **புரிதல்** காணப்பட்டது.
போகுமிடமெல்லாம் புரிதல்
எனக்குத் தேவை
இரண்டு பெட்டிகள்
ஞானம் வாங்கினேன்
நம்பிக்கையும்
இரண்டு பைகள் நிறைய வாங்கினேன்
தர்மமும் வாங்கினேன்
இன்னும் கொஞ்சம் எனக்கு அது
தேவைப்பட்டது

பரிசுத்த ஆவியை விட்டு வைக்க
மனம் வரவில்லை
அங்கிங்கெனாதபடி
அது எங்கும் நிறைந்திருந்தது

இந்தப் போட்டியில் ஓடுவதற்காக வலிமையும்
துணிவும்
கொஞ்சம் வாங்கினேன்

என் கூடை நிறையும் தருணத்தில்
எனக்கு **அருள்** தேவை
என்பது நினைவுக்கு வந்தது.

மீட்பைத் தெரிவு செய்தேன்
ஏனென்றால்
அது இலவசமாகவே கிடைத்தது

உனக்கும் எனக்கும் **போதும்** என்பதை
வாங்க முனைந்தேன்

பின்னர்
நான் வாங்கிய பொருட்களுக்குப்
பணம் செலுத்தச் சென்றேன்

ஆசானின் விருப்பத்தை நிறைவேற்றும்/
அனைத்தையும் வாங்கி விட்டதாக நினைத்தேன்/

மேலே ஏறிச் சென்ற போது
அங்கே
இறை வணக்கம்
இருப்பதைக் கண்டேன்
அதையும் எடுத்துக்
கூடையில் போட்டுக் கொண்டேன்.

ஏனென்றால்
நான் வெளியே கால் வைத்ததும் **பாவம்**
என்னைப் பிடித்துக் கொள்ளும்.
அது எனக்குத் தெரியும்

ஷெல்ஃபின் கடைசியில்
அமைதியும் **மகிழ்ச்சி**யும் ஏராளமாக இருந்தன
அருகிலேயே **பாடலும் துதி**யும்
தொங்கவிடப்பட்டிருந்தன
எட்டி கைநீட்டி
அவற்றை எடுத்துக் கொண்டேன்.

'நான் எவ்வளவு பணம் கொடுக்கணும்' என்று
அங்கிருந்த தேவதையிடம் கேட்டேன்

அவன் சிரித்தபடியே
'இவற்றை நீ போகும் இடமெல்லாம்
எடுத்துக்கொண்டு போ'
என்றான்.

நான் வியந்து போய்
'இப்பவே வா'
எனக் கேட்டேன்
'எவ்வளவு பணம் கொடுக்கணும்' என்று
கேட்டேன்.

'குழந்தாய்!
உனக்கான தொகையை
கடவுள்
வெகு காலத்துக்கு முன்பே கொடுத்துட்டார்'
என்றான்

மூலம் - தெரியவில்லை
தமிழில் முனைவர் திருமதி ராஜேஸ்வரி

மனமாற்றம்

அன்னபூரணி தண்டபாணி

புனிதா அரசுப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கிறாள். அவளுடைய அம்மா வசந்தி அக்கம் பக்கத்து வீடுகளில் வீட்டு வேலை செய்து சம்பாதிக்கிறாள். அவளுடைய அப்பா கோவிந்தன், வீடுகளுக்கு எல்பிஜி (LPG Gas cylinder) எரிவாயு சிலிண்டர் விநியோகம் செய்யும் டெலிவரி பாயாக வேலை செய்கிறான்.

எப்போதும் பள்ளியிலிருந்து சிரித்துக்கொண்டே வரும் மகள் புனிதா இன்று அழுதுகொண்டே வருவது கண்டு பதறினாள் வசந்தி.

"என்னம்மா? ஏன் அழுதுகிட்டே வர? எங்கியாவது கீழ விழுந்துட்டியா? அடி பட்டுடுச்சா? என்ன ஆச்சு?" என்று பதற்றத்துடன் வினவினாள்.

"அம்மா! இனிமே நா ஸ்கூலுக்கே போக மாட்டேன்.." என்று விம்மி விம்மி அழுதாள் புனிதா.

மகள் அழுது கொண்டே கூறியதைக் கேட்ட வசந்தி அதிர்ந்தாள்.

'ஏதாவது பெரிய பிரச்சனையோ? இப்பல்லாம் டீவில கண்டபடி செய்தி வருதே? அது மாதிரி.. யாராவது இவளுக்கு.. பாலியல் தொல்லை குடுத்துட்டாங்களோ?' என்று வசந்தியின் மனம் கண்டதையும் சிந்திக்கத் தொடங்கியது.

"என்னடீ சொல்ற? ஸ்கூலுக்கு போக மாட்டியா? ஏன்? யார் உன்ன என்ன சொன்னாங்க?" என்று மேலும் பதற்றத்துடன் கேட்டாள்.

"எல்லா பசங்களும் என்னிய ஒண்ற கண்ணி! முண்டக்கண்ணி! கருவாச்சின்னுல்லாம் அசிங்க அசிங்கமா கிண்டல் பண்றாங்க.." என்று அழுதாள் புனிதா.

"ப்பூ! இவ்ளோதானா! நா என்னமோ ஏதோன்னு பயந்தே போயிட்டேன்!" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் வசந்தி.

"அது மட்டுமில்ல.. நா கூலிக்காரன் பொண்ணாம்! வேலைக்காரியோட பொண்ணாம்! என்னால எல்லாம் பெரிய கனவு காண முடியாதாம்! அப்டியே நான் கனவு கண்டாலும் அது பலிக்கவே பலிக்காதாம். நான் எவ்ளோ படிச்சாலும் நான்லாம் வேலைக்காரியாவேதான்

இருப்பேனாம். நம்மல்லாம் வாழ்க்கையில முன்னேறவே முடியாதாம்!" என்று கதறலுடன் கூறினாள் புனிதா.

இதைக் கேட்ட வசந்தியின் மனமும் வருந்தியது. ஆயினும் மகளை சமாதானம் செய்ய முயன்றாள்.

"அட என்னடீ நீ? யாரோ என்னமோ சொன்னாங்கன்னு இப்டி அழுவற? அவங்க சொல்லிட்டா நீ வேலைக்காரி ஆகிடுவியா? நா படிக்காதவ.. வேற வேல எதும் எனக்கு செய்ய தெரியாது.. அதுனால வீட்டு வேலைக்கு போறேன்.. நீ அப்டியா?" என்று கூறிக் கொண்டே மகளின் கண்ணீரைத் துடைத்தாள்.

"நா எவ்ளோ படிச்சாலும் என்னோட இந்த மாறு கண் இப்டியே தானேம்மா இருக்கும்? இதனால எனக்கு நல்ல வேலையே கெடக்காதாம்.. பசங்க சொல்றாங்கம்மா.." என்று மேலும் கூறி வருந்தினாள் புனிதா.

"உன் கண்ணு ஒண்ணும் இப்டியே இருந்துடாது.. உன் கண் ஆபரேசனுக்குதான் நானும் அப்பாவும் காசு சேக்கறோம்ல.. உனக்கு ஆபரேசன் முடிஞ்சிட்டா உன் கண்ணு நேரா ஆகிடும்னு டாக்டரு சொல்லிருக்காருல்ல.. அவனுங்க கெடக்காறானுங்க.. நீ அழுவாதம்மா.. போய் டிரஸ் மாத்திக்கிட்டு வா.. வேல செய்யற வூட்ல இன்னிக்கு ஏதோ விசேசம்னு பாயாசமும் வடையும் குடுத்தாங்க.. எடுத்து வெக்கிறேன். கை கால் கழுவிகிட்டு வந்து சாப்பிடு.." என்று மகளுக்கு ஆறுதல் கூறி அனுப்பினாள் வசந்தி.

புனிதாவுக்கு மனம் சமாதானம் அடையவே இல்லை.

தன்னை ஏளனம் செய்தது தன் வகுப்பு மாணவர்கள் மட்டுமல்ல, தன் தோழிகளும்தான் என்று அவள் தன் அன்னையிடம் சொல்லவில்லை. சொன்னால் அவள் நிச்சயம் வருந்துவாள் என்று மகளுக்கு நன்றாகத் தெரியும்.

ஒன்றும் பேசாமல் எழுந்து உள்ளே சென்றாள்.

தன் தோழிகள் சொல்வது போல எத்தனை முயன்றாலும் தன்னால் எதையும் சாதிக்க முடியாது என்று அவளுடைய மனதில் தோன்றத் தொடங்கிவிட்டது. அதனால் அவள் மிகவும் சோர்ந்து போனாள்.

அன்றிரவு வேலை முடிந்து வந்தான் கோவிந்தன்.

"பாப்பா! இன்னிக்கு எங்க ஆபீஸ்ல என்னா நடந்துச்சு தெரியுமா?" என்று தன்னை விளித்து, உற்சாகமாகக் கேட்டுக் கொண்டே வந்தவனைக் கண்டு குழம்பினாள் புனிதா.

"என்னாங்க? என்ன ஆச்சு?" என்று கேட்டாள் ஆர்வமாகக் வசந்தி.

அவர் மனைவிக்கு பதிலளிக்காமல் தன் மகளின் கைபிடித்து,

"பாப்பா! இன்னிக்கு எனக்கு புரமோசன் கெடச்சிருக்கு பாப்பா.. என் வழக்கமான சம்பளத்த விட ஐயாயிரம் ரூபா அதிகமா கெடக்க போவுது.. எல்லாம் உன்னாலதான் பாப்பா! நீ மட்டும் இல்லன்னா எனுக்கு புரமோசன் கெடச்சிருக்காது பாப்பா!" என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

தந்தையின் மகிழ்ச்சி புனிதாவுக்கும் தொற்றிக் கொண்டது.

"என்னப்பா சொல்றீங்க?" என்று மகிழ்ச்சியுடன் கேட்டாள்.

"பாப்பா! இன்னிக்கு எங்க ஆபீஸ்ல ஒரு பெரிய ஆபீசர் வந்து எல்லா டெலிவரி பாய்க்கும் போன்ல பணம் வாங்குறது எப்டின்னு ட்ரைனிங் குடுத்தாங்க. ஆனா அவரு பேசினது அங்க யாருக்கும் புரீல.. ஆனா நீதான் எனக்கு முன்னமயே இதப் பத்தி சொல்லி குடுத்திருக்கல்ல.. அதனால நா எங்க பசங்க எல்லாருக்கும் புரியிற மாதிரி சொல்லி குடுத்தேன்.. இதப் பாத்த அந்த ஆபீசரு இனிமே நடக்கற ட்ரைனிங் எல்லாத்தையும் நாந்தான் நடத்தணும்னு சொல்லி புரமோசன் குடுத்தாரு.." என்று மகிழ்வுடன் கூறினான் கோவிந்தன்.

இதைக் கேட்ட புனிதாவும் வசந்தியும் மிகவும் மகிழ்ந்தார்கள்.

"நீ மட்டும் எனுக்கு இந்த போனை எப்டி யூஸ் பண்ணனும்னு கத்து குடுத்துருக்காட்டி எனக்கு இந்த புரமோசன் கெடச்சிருக்காது பாப்பா! அடுத்த மாசத்தில இருந்து நமக்கு சம்பளம் அதிகம் வரும். உன் கண் ஆபரேசனை சீக்கிரமே முடிச்சிடலாம்!" என்று நெகிழ்ச்சியுடன் கூறினான்.

"பாத்தியா கண்ணு! உன்னால எதையுமே சாதிக்க முடியாதுன்னு எல்லாரும் கிண்டல் பண்ணாங்கன்னு அழுதியே.. எட்டாங் கிளாஸ் ஃபெயிலான உங்கப்பாவுக்கே உன்னால புரமோசன் கெடச்சிருக்கு.. நல்லா படிக்கற உனக்கு பெரிய வேலை கெடக்காதா.. கண்டதையும் நெனச்சு கவலப்படாம பள்ளிக்கூடம் போ கண்ணு!" என்றாள் வசந்தி.

"என்னாச்சு? ஏன் இப்டி சொல்ற புள்ள?" என்று கோவிந்தன் மனைவியிடம் விசாரிக்க, நடந்ததை கணவனிடம் விவரித்தாள் வசந்தி.

அவள் சொல்வதைக் கேட்ட கோவிந்தன்,

"பாப்பா! நம்ம ஒரு நல்ல விசியம் பண்றப்ப எல்லாரும் எதையாவது பேசி நம்ம மனச ஒடப்பானுங்க.. அதே நம்ம ஜெயிச்சிட்டோம்னு வெய்யி.. இவ பெரிசா வருவான்னு நாந்தான் சொன்னேன்லன்னு சொல்லி பெருமை பேசுவானுங்க.. அவனுங்க கொறை சொல்றானுங்கன்னு மனசு ஒடஞ்சும் போகக் கூடாது.. பாராட்டுறானுங்கன்னு மண்டக் கனமும் படக் கூடாது. நாம பாட்டுக்கு நம்ம வேலைய செஞ்சிட்டு போயிகிட்டே இருக்கணும்.." என்று கூறினான்.

தாயும் தந்தையும் சொல்வதை நன்றாக உள்வாங்கிக் கொண்ட புனிதா, மனமாற்றம் அடைந்து புதிய தன்னம்பிக்கை வரப் பெற்றவளாய் தன் பெற்றோரைப் பார்த்து புன்னகைத்தாள்.

வாழ்த்தின் மேன்மை அறிந்து வாழ்க!

முனைவர் இல. ஜெயந்தி,
சென்னை.

வாழ்த்து என்பது நலமாக, வளமாக இருக்க, மனம் விரிந்த நிலையில் தெரிவிக்கும் ஒரு வெளிப்பாடு ஆகும்.

இனிமையான சொற்களையே பேசுவதால் வளங்கள் மேலோங்குகின்றன.

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.

'அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின் (திரு. 92)

மெய்ப்பொருள் கண்டவர் இனிய சொற்களையே பேசுவர். ஒருவருக்குச் சிறந்த அணிகலனாக விளங்குவதும், அறம் பெருக, இன்பம் வளர காரணமாக இருப்பதும் இன்சொற்கள் என்பார் திருவள்ளுவர்.

எண்ணமே சொல்லாகிறது. சொல் செயலாகிறது. செயல் விளைவைக் கொடுக்கிறது.

'தூய்மையாம் விளைவு தரும் சொற்கள் அனைத்துமே வாய்மையாம், அவை வாழ்வின் வளம் காத்து சிறப்பளிக்கும்.' என்பார் வேதாத்திரி மகரிசி.

தமிழே அமிழ்தம்

தமிழ் மொழியின் சிறப்பை அறிஞர்கள் போற்றுவர். மற்ற மொழிகளில் இல்லாத சிறப்புத் தன்மை 'ழ' கரத்திற்கு உள்ளது.

வாழ்க! என்ற சொல் உடலையும், மனதையும் வளப்படுத்தும் மேன்மை கொண்டது.

வாழ்க! என்பதிலுள்ள 'ழ்' என்ற எழுத்தை உச்சரிக்கும்போது, வாயின் மேலண்ணத்தில் ஓர் அதிர்வை உண்டாக்கி, மூளையில் உள்ள பிட்டியூட்டரி, பீனியல் சுரப்பிகளைத் தூண்டி முறையே உடல், மன இயக்கத்தை ஊக்கப்படுத்துகிறது. முதுகந்தண்டை ஒட்டி

அமைந்துள்ள, ஆதார சக்கரங்களை சீராக்கி, நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாட்டை தூண்டி உடலை வலுப்படுத்துகிறது.

'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்று தமிழின் பெருமையை பறை சாற்றினார் பாவேந்தர் பாரதிதாசன்.

வாழ்த்தின் சிறப்பை உணர்ந்திருந்தனர் முன்னோர்.

கடவுள் வாழ்த்து

கடவுளை வாழ்த்தி, நூலைத் தொடங்குவது வழக்கம் ஒவ்வொரு நூலின் தொடக்கத்திலும் கடவுள் வாழ்த்து அமைந்திருக்கும்.

தன் வாழ்த்து

தன் உடல், மனம், வளம், ஓங்க வாழ்த்துவது தன் வாழ்த்து. அது ஒரு உறுதிமொழியாக அமைகிறது.

குடும்பநல வாழ்த்து

குடும்பத்தில் பிணக்கிருந்தால் குடும்ப உறுப்பினர்களை, காலையிலும் மாலையிலும் இருபத்தைந்து முறை வாழ்த்தினால் பிணக்கு நீங்கி இணக்கம் ஏற்படுத்தும் என்பார் வேதாத்திரி மகரிஷி.

தமிழ்த்தாய் வாழ்த்து

பேராசிரியர், மனோன்மணியம் பெ. சுந்தரனார் வழங்கிய தமிழ்த்தாய் வாழ்த்து,

'நீராரும் கடலுடுத்த நிலமடந்தை...
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

என தமிழின் புகழை ஓங்கச் செய்தல் காணலாம்.

'வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழியே!' என்பார் பாரதியார்

இந்திய தேசிய கீதம்

கவிஞர் இரவீந்திரநாத் தாகூரால் உருவாக்கப்பட்ட "ஜன கண மன" என தொடங்கும் இந்திய தேசிய கீதம், நாட்டின் வளர்ச்சியையும் வளங்களையும் ஓங்கச் செய்யும் மிகச் சிறந்த இந்திய நாட்டு வாழ்த்தாகும்.

சமுதாய வாழ்த்து

மக்கள் கூட்டமான சமுதாயத்தை வாழ்த்தி ஒற்றுமையும், முன்னேற்றமும் காண வழி வகுத்தனர்.

'பாரத சமுதாயம் வாழ்கவே! வாழ்க! வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே!

என்றார் பாரதியார்

'எல்லோரும் இன்பமாக இருக்கட்டும்! எல்லோரும் அமைதி பெறட்டும்! எல்லோரும் ஆனந்தமடையட்டும் என்று மனதில் திரும்பத் திரும்ப கூறுங்கள்! அதுபோல் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு பக்கங்களிலும் கூறுங்கள்! அதனால் நீங்களும் இன்பம் அடைவீர்கள்!' என்றார் சுவாமி விவேகானந்தர்.

உலக நல வாழ்த்து

மனம் விரிந்த நிலையில், உலகமே பெருங்குடும்பமாக எண்ணி, அனைவரும் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைவும் பெற்று வாழ அறிவில் உயர்ந்தோர் உலகத்தை வாழ்த்துவர்.

பாவேந்தர் பாரதிதாசனின், குடும்ப விளக்கு, குடும்பத் தலைவி, அதிகாலையில் எழுந்து, முகம், கை, கால் கழுவி முற்றத்தைப் பெருக்கி, மாக்கோலம் இட்டு, யாழின் இசை மீட்டி, இனிய தமிழில் உலகத்தை வாழ்த்தியபடி (காலைப்பாட்டு) அந்நாளினைத் தொடங்குவதை,

'வாழிய வையகம்! வாழிய! என்று பாவலர் தமிழில் பழச்சுவை சேர்த்தாள்'

என்றுரைத்தல் காணலாம்.

'உலகமெலாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும்'
வாழ்க வையகம்! வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

என உலக அமைதி காண, உலகத்தை வாழ்த்த வேண்டும் என்பார் வேதாத்திரி மகரிசி.

அலை இயக்கம் ஐந்து வகை:

பிரபஞ்ச தோற்றம், இயக்கம், விளைவுகளுக்கு அடிப்படையான காந்த அலை இயக்கம் ஐவகையாக செயல்படுகின்றது.

எந்தப் பொருள்களிடத்தும் தோன்றக்கூடிய அலைக்கு ஐவகை இயக்கங்கள் உண்டு. அவை

1. மோதுதல், 2. பிரதிபலித்தல், 3. சிதறுதல், 4. ஊடுருவுதல், 5. ஊடாடுதல் (முன்பின்னாக ஓடுதல்) என்ற ஐந்து நிலைகளில் இயங்குகின்றது.

வாழ்த்தும் போது எண்ண அலைகளும், ஒலி அலைகளும் ஐவகையில் இயங்கி மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

மனம் ஒடுங்கிய நிலையில் செயல்பாடு அதிகமாக இருப்பதால், தவம் அல்லது தியானத்தால் மனம் அமைதியாக உள்ள நிலையில் வாழ்த்தும் போது, உயரிய பயனை அளிக்க வல்லது.

ஒலி அலைகள் நான்கு:

1. பரை (பரா) : இறை மொழி, மௌனம்
2. பைசந்தி : அதிக நுட்பமானது
3. மத்திமை : நுண்ணிய ஒலி (பறவைகள், விலங்குகள், சில உயிரினங்கள் உணரும்)
4. வைகரி : ஸ்தூல ஒலி (கேட்கும் ஒலி, டெசிபல் அளவில் அளக்கக்கூடியது)

ஆற்றல் மிக்க எழுத்துக்களைக் கொண்டதாக வாழ்த்து விளங்குகிறது.

மனதின் திறமே மந்திரம்

நுட்பமும் வேகமும் பெறுமாறு தனது உயிரின் ஆற்றலை உச்சநிலைக்கு உயர்த்திக் கொள்ளும் மனதின் திறமே மந்திரமாகும்.

'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும் மறைமொழி தானே மந்திரம் என்ப'

என்பார் தொல்காப்பியர்.

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல, சான்றோரின் பெருமையை உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழியே காட்டிவிடும்.

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்துமறைமொழி காட்டி விடும்.' (திரு. 28)

என்பார் திருவள்ளுவர்

'ஓம்' என்னும் மந்திரம்

எழுத்துக்களின் உச்சரிப்பில் ஓர் அதிர்வியக்கம் உள்ளது. ஒவ்வொரு எழுத்துக்கும் ஓர் ஆற்றல் உள்ளது. அதனை அறிந்து, பயன்படுத்தி உயிராற்றலை வளர்த்து, சக்தி மிக்கதாகச் செய்தனர் முன்னோர்.

ஓம் எனும் சொல் அகரம், உகரம், மகரம் இணைந்தது.
'எட்டும் இரண்டும் அறியாதவர்க்கு,
சுட்டுப் போட்டாலும் ஞானம் வராது' எனும் பழமொழி உள்ளது.

தமிழில் எண்கள், எட்டைக் குறிக்க 'அ'வும் இரண்டைக் குறிக்க 'உ' என்ற எழுத்தையும் முன்னோர் பயன்படுத்தினர்.

அ - எட்டு - 8
உ - இரண்டு - 2
அ - தோற்றம் - பருவுடல்
உ - இயக்கம் - நுண்ணுடல்
ம் - ஒடுக்கம் - காரண உடல்
அ - இடைநாடி
உ - பிங்கல நாடி
ம் - சிரசின் உச்சி அதிர்வுநிலை

இறையாற்றலின் தன்மைகளைக் குறிப்பதாக அ, உ, ம எழுத்துக்கள் விளங்குவதாக சித்தர் பாடல்கள் அறிவிப்பதை முனைவர் மி.ப.சோமு எடுத்துரைக்கிறார்.

அ+உ+ம் சேர்ந்த ஓம் எனும் சொல், மூலத்திலிருந்து ஓ வென எழுச்சி பெற்று 'ம்' என மூலத்திலேயே மௌனமாக ஒடுங்கும் இயல்பை குறிக்கிறது. இதுவே பிரணவ மந்திரம் என்பர்.

'ஓம்' என்று உச்சரிப்பதால் புருவ மத்தியில் ஓர் அதிர்வை உண்டாக்கும். அது மூளையில் உள்ள பிட்டியூட்டரி, பீனியல் சுரப்பிகளைத் தூண்டி உடல் மன இயக்கத்தை சீராக்குவதால், அந்த எழுத்துக்களைக் கொண்டு பாடல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளமை அறியலாம்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு' (திரு. 1)

என்பார் திருவள்ளுவர்.

'அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே'
"அருட்பெரும் சோதி! அருட்பெரும் சோதி!
தனிப்பெரும் கருணை! அருட்பெரும் சோதி!"
என்றுரைப்பார் வள்ளலார்.
"ஓ மென் றெழுப்பித்தன் உத்தம நந்தியை
நாமென் றெழுப்பி நடுவெழு தீபத்தை
ஆமென் றெழுப்பியல் வாறறி வார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்திருந் தாரே" (திருமந்திரம் - 944)

"ஓங்காரத் துள்ளொளி உள்ளே உதயமுற்று
ஆங்கார மற்ற அனுபவம் கைகூடார்
சாங்கால முன்னர் பிறவாமை சார்வுறார்
நீங்காச் சமயத்துள் நின்றொழிந் தார்களே" *(திருமந்திரம் - 1556)*

என 'ஓம்' எனும் சொல்லின் மேன்மையை எடுத்துரைத்தல் காணலாம்.

கிறித்துவம்

ஒருவரை ஒருவர் பார்த்து 'தோத்திரம்' என்பதும், ஏசுவுக்கு 'தோத்திரம்', கர்த்தருக்கு தோத்திரம், 'ஆமென்' என்பதும், புருவமத்தியை தொட்டு உரைப்பதும் காணலாம். இந்த வார்த்தையில் அ,உ, ம் எழுத்துக்கள் அடங்கியுள்ளமை அறியலாம்.

இசுலாம்

புருவமத்தியை தொட்டு 'சலாம் அலைகும்' என்று ஒருவரிடம் ஒருவர் கூறுவதை அறியலாம் இந்த வார்த்தையில் அ,உ,ம் எழுத்துக்கள் உள்ளன.

'வாழ்த்து எல்லா மந்திரங்களுக்கும் மேலான திருமந்திரமாகும்'

'ஓம் என்று செபிப்பவனையே பக்தன் என்போம்

உட்பொருள் உணர்ந்தவனை ஞானி என்போம்'

என்று கூறி'அ, உ, ம்' என்ற ஆற்றல் மிக்க எழுத்துக்கள் கொண்ட 'வாழ்க வளமுடன்' என்ற வாழ்த்தை வடிவமைத்தார் வேதாத்திரி மகரிசி.

வாழ்த்தின் மூலம் உடலையும், மனதையும் வளப்படுத்திக் கொள்வோம். நட்பு நலமும், உலக அமைதியும் ஓங்கி வாழ்வோம்.

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை
நூல் விலைப்பட்டியல்

3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

நூல்கள்		விலை
1.	திருவிளையாடல் புராணக்கதைகள் (எளிய உரைநடையில்)	200
	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்	
1.	உன்னோடு உரையாடுதல்	100
2.	காதல் மொழி	200
3.	பார்வையில் பூத்த நிலா	100
4.	தேனடையும் வரலாறு	100
5.	நுண்கலை மருத்துவன்	200
6.	தொடரும் புழுதிக்கால்கள்	100
7.	புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை இரவு	200
	முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்	
1.	வெற்றித்திருமகள் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர் கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் (எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - 1)	
11.	பாட்டுடைத்தலைவன். எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள்- II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்ஜி.ஆர். படத்தில் சண்டைக்காட்சிகளின் சுவாரஸ்யங்கள்-1	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை.	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	
	முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்	
1.	தலைமை பொறுப்பேற்கலாம்	200
2.	இணையத் தமிழ்	120
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200

5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*200*
6.	*பாரதியார்*	*100*
7.	*நவீன மொழி பெயர்ப்பு உத்திகள்*	*200*
8.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	
9.	*மாயோன் வீட்டு யானை (சிறுவர் நூல்)*	

பிற ஆசிரியர்களின் நூல்கள்

1.	*பன்முகப் பண்பாட்டு உரையாடல் - முனைவர் ஆனந்த அமலதாஸ்*	*200*
2.	*மொழிபெயர்ப்புத் திறன் - பேரா. முனைவர் மு. முத்துவேலு*	*150*
3.	*சிறுநல் வாழ்க்கை - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*200*
4.	*ஏன்? எதற்கு? எப்படி? - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*150*
5.	*உடல் நலமும் புதிய சிகிச்சை முறைகளும் - முனைவர் ஜோதி எஸ். தேமொழி*	*150*
6.	*தமிழ் இறைவனார் யார் - பேரா. முனைவர் மு. முத்துவேலு200*	
7.	*கவிஞர்களும் எழுத்தாணிய - மேனகா நரேஷ் (NJ)*	*300*
8.	*இலக்கிய நயங்களும் நுட்பங்களும் – மு. பழநிச்சாமி*	*300*

Other Books

1.	Concepts of Constitution - Dr. S. Kalai Arasu	300
2.	Aranyani By Vijeni (English Novel Part I & Part II)	200
3.	Translating Tamil Poetry - Dr. C. Rajeswari	200
4.	Tie Your Hears with Words - Afrah Fathin F.N.	215

முனைவர் செ. இராஜேஸ்வரியின் சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1.	*பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன். காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*250*
11.	*பெண் தெய்வம் (தோற்றமும் வரலாறும்)**	*300*
12.	*உலகத்தமிழரின் ஒரே நூல் திருக்குறள்*	*200*

சமய வழிகாட்டி நூல்கள் (7)

சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்)	*300*
விரதங்களின் விளக்கம்	*200*
சாமிகளின் துதிகள் (27, 54, 108 போற்றி)	*200*
மலைக்கோயில்கள் - முருகன் (வரலாறும் வழிபாடும்)	*200*
மலைக்கோவில்கள் - சிவன், விஷ்ணு	*250*
அம்மன் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*
திருமணத் திருத்தலங்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*
பிள்ளை வரம் அருளும் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	*250*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்*	*200*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக்கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரானின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*ஆங்கிலத் தேன் கவிதைகள்*	*400*

Tamil Classics in English - (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Purananooru	200
3.	Naaladiyaar	200
4.	Aasaarakkovai	200
5.	A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanchi)	200
6.	A Peasant with two Wives (Mukkudal pallu)	200
7.	Classic Tamil Poems of Poetess Avvai.	300
8.	Classic Poems of Love and Life	400
9.	Ainkurunuuru	200
10.	Pastoral Literature of Classic Tamil	300
11.	A Classic Portrait of Ancient Madurai	300
12.	The Winter's Tale in Classic Tamil (Nedu nal vaadai)	

Socio Cultural Study Series

1.	Lord Indra -The Forgonen Diet	300
2.	Serpent - The Primordial God	300

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	*குறுந்தொகைக் கவிதைகள்*	*200*

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் - முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
2.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
3.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள்* (Co-author)	*200*
4.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*
5.	*மொழிபெயர்ப்பு நுண்ணாய்வு*	*400*

தமிழ் இலக்கண நூல்

1.	*தமிழில் வேற்றுமை உருபுகள்*	*200*

சிறுகதை, கவிதை

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*200*
2.	*ரோஜா மொட்டு (சித்திரக்கவிதைகள்) - சத்யப்பிரபா*	*200*
3.	*மகிழ் பேரின்பம்*	*200*

ஜோதிட நூல்கள்

மேஷ ராசியின் சூட்சும ரகசியம்	*200*
ரிஷப ராசியின் சூட்சும ரகசியம்	*200*
நவரத்தினமும் உபரத்தினமும்	*200*
மிதுன ராசி சூட்சும ரகசியங்கள்	*200*
கடக ராசியின் சூட்சும ரகசியம்	*200*

மாத இதழ்கள்

1.	*தமிழணங்கு மாத இதழ்*	*200*
2.	Love Thamizh	*500*
3.	*சக்தி (பெண்ணிதழ்*	

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் - முனைவர் செ. இராஜேஸ்வரி

Moonstone Publication, Madurai

1.	Emerging Mallarism	200
2.	Festival of lord Indra	200
3.	Role of Devendirar's in Indian war of Independence	200
	(Sundaralingam Kudumbanar)	200
4.	Re reading of Pallu literature	200
5.	Mallariyan Literature	200
6.	Frontyard without My Dad (Poem)	200

Poems of Er. Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari [Moonstone Publication]

1.	Therapist of the Finest Art	200
2.	Following Dusty Feet	

“பட்டன் போனும் – பட்டினிப் போரும்..”

முனைவர். வி ஆனந்தி



லட்சுமி... லட்சுமி என்னடிநீ வேலைக்கு ரெண்டு நாளா வரல நீயும் உன் புருஷனும் இன்னைக்கு வேலைக்கு போகல என்ன ஆச்சு, என்று 60 வயது மதிக்கத்தக்க பக்கத்து வீட்டு அக்கா கேட்கிறார்

வாங்க அக்கா வாங்க நான் எங்க வேலைக்கு போறது எங்க வீட்ல தான் ரெண்டு நாளா மார்பு வலிக்குது மார்பு வலிக்குதுன்னு சொல்லிக்கிட்டு இருக்குது அதான் அது வேலைக்கும் போகல டாக்டர் கிட்ட போனாலும் போக மாட்டேங்குது.

என்னடி சொல்ற சரி..லட்சுமி உன்கிட்ட தவிடு இருக்கா அதை கடாயில் வறுத்து ஒத்தடம் கொடு அப்புறம் சீரகத் தண்ணீர் கொடு எல்லாம் சரியாயிடும்

“ ஆமாம் என்னை வேலைக்கு வரலைன்னு யாராவது ஏதாவது சொன்னாங்களா?” லட்சுமி

ஏண்டி யாரும் எதுவும் சொல்லலடி நான் தான் ஓர் எட்டு பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்

லட்சுமி 100 நாள் வேலைக்கு போகிறாள் லட்சுமியின் கணவன் கணேசன கட்டிடத் தொழிலாளி, மேஸ்திரி ஓர் அருமையான சிறு குக்கிராமத்தில் வசித்து கொண்டு இருக்கிறார்கள் . கணேசன் தினமும் காலை 6 மணிக்கு வேலைக்கு போயிட்டு மாலை 7 மணிக்கு வீடு திரும்புவான். அவனுக்கு வாசு என்ற ஒரு மகனும் இருக்கிறான் அவன் பனிரெண்டாவது வரை படித்துவிட்டு சென்னையில் ஒரு பிரைவேட் கம்பெனியில் வேலை செய்கிறான்

இந்த அக்கா பலாப் பயம் பக்கத்து வீட்டுக்காரங்க ஊர்ல இருந்து கொண்டு வந்தாங்களாம் எனக்கு கொடுத்தாங்க அதான் பலாப் பயம் உனக்கு பிடிக்குமே நீ இரண்டு சாப்பிடு ...

மீனா மீனா, என்று சத்தம் கேட்கிறது”

"அப்பப்பா அதுக்கு வேலையே இல்ல ... அதாண்டி என் வீட்ல கூப்பிடுது

"பொண்டாட்டி இல்லாம ஒரு நிமிஷம் கூட இருக்காதே"

சீ போடி, என்று இந்த வயசிலேயேயும் வெட்கப்பட்டு கொண்டு ஒரு பலாப்பழத்தை சாப்பிட்டுவிட்டு மற்றொன்றை கையில் வைத்துக்கொண்டு போக புறப்பட்டாள்.

"ஐய.. உனக்கு தானே கொடுத்தேன் அதை நீ துன்னு.. நா உன் புருஷனுக்கு வேற கொடுக்கிறேன்" என்ன என்று வேற இரண்டு பலாப்பழங்களை பேப்பரில் மடித்து அக்காவிடம் கொடுக்கிறாள் லட்சுமி.

"இந்தா டி லட்சுமி இந்த பலா பயத்தையும் அதுல வை நான் வீட்டில் போய் அது கூட ஒக்காந்து சாப்பிடுகிறேன்"

நீ திருந்த மாட்டியே சரி எடுத்துனு போ, என்று கூறி அவளை வழி அனுப்புகிறாள் லட்சுமி

" இப்போ வலி எப்படி இருக்கு என்று தன் கணவனிடம் கேட்டுக் கொண்டே அடுப்புக்கு அருகில் கொட்டி வைத்திருக்கும் தவிடு எடுத்துக்கொண்டு போய் சூடு பண்ணி கொண்டு வந்து தன் கணவனுக்கு ஒத்தடம் கொடுக்க போக போகும்போது

"இருக்க இருக்க வலி அதிகமாய் இருப்பது போல உள்ளது லட்சுமி நீ ஒரு ஆட்டோவை கூப்பிடு நம்ம ஆஸ்பத்திரிக்கு போலாம்" என்றான் கணேசன்

அதானே நான் நேத்துல இருந்து சொல்லிட்டு இருக்கேன் ஆனா நீ எங்கே கேட்டே சரி வா, அப்படின்னு ஹாஸ்பிடல் போக ஒரு ஆட்டோவை பிடிக்கிறார்கள்.

ஹாஸ்பிடலுக்கு சென்று டாக்டர் பரிசோதனை செய்த பிறகு கணேசனிடம் டாக்டர்,

"நீங்க கட்டிட தொழிலாளி மேஸ்திரி ஆக இருப்பதனால் தப்பித்தீர்கள் இல்லை என்றால் உங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கும் "

"அந்த வேலைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் எனக்கு ஒன்னும் புரியலையே டாக்டர்"

அதாவது, "தங்களிடம் விசாரித்தவரை தங்களுக்கு எந்தவித கெட்ட பழக்கமும் இல்லை, உணவு பழக்கமும் சரியாக இருக்கிறது, மேலும் தண்ணீரையும் அதிகம் எடுத்துக் கொள்கிறீர்கள் என்கிறீர்கள் ஆகையால் தான் நான் கூறினேன். இதையே ஃபாலோ பண்ணி முடிந்த அளவு தியானமும் செய்யுங்கள் நான் எழுதிக் கொடுக்கும் மருந்துகளை வழக்கமாக சாப்பிட்டுக் கொண்டு வரவும் தற்போதைக்கு வலி இல்லாமல் இருக்க இந்த மாத்திரையை சாப்பிடவும் என்று ஒரு மாத்திரையை கணேசனுக்கு சாப்பிட கொடுக்கிறாள். இதைப்

சாப்பிட்டதும் வலி கம்மியாக இருக்கும் ஒரு வாரம் கழிச்சு வந்து காட்டுங்க சரியா என்று டாக்டர் அனுப்பி வைத்தார்.

டாக்டர் எழுதிக்கொடுத்த மாத்திரை சீட்டை எடுத்துக் கொண்டு ஹாஸ்பிடலுக்கு உள்ளே இருக்கும் மாத்திரை கடைக்கு செல்கிறார்கள் அங்கு

மருந்துகளை கொடுத்து விட்டு பணம் ஆன்லைனில் கொடுக்க வேண்டும், என்று கேட்டவுடன் தூக்கி வாரி போட்டது கணேசனுக்கு.

கட்டிட வேலைக்கு போகிறவனுக்கு பேங்கல பணம் வைக்கிற அளவுக்கு எங்க வருமானம் இருக்கு இதுவே அவசரத்துக்கு ஒரு இடத்தில கடன் வாங்கி வந்து இருக்கேன் கையில காசு வாங்காம அலைய வைக்கிறீங்க எங்ககிட்ட பட்டன் போன் தான் இருக்கு யார்கிட்ட போய் கேட்கிறது தெரியலைங்க, என்று வருத்தத்துடன் வெளியே வர

லட்சுமி எவ்வளவு கெஞ்சியும் அவங்க பணம் வாங்க மாட்டேங்கிறாங்களே என்ன செய்வது, என்று தெரியலையே என்று புலம்புவதை கேட்ட அருகில் இருக்கும் ஒரு நபர்

ஐயா உங்க மருந்து சீட்டு கொடுங்க நான் வேணா ஆன்லைன்ல பணம் கொடுத்து வாங்கி வந்து விடுகிறேன் அப்புறமா எனக்கு அந்த பணத்தை கொடுத்துடுங்க என்று உதவினார்.

இந்த ஹாஸ்பிடல்ல பணம் இருக்கிறவங்க பணம் கொடுக்கலாம் ஆன்லைன்ல கொடுக்குறவங்க ஆன்லைன்ல கொடுத்துக்கலாம், என்ற வசதி இருக்கணும் அவங்க கிட்ட அப்படி இல்லவே இல்ல எப்ப பாரு ஆன்லைன்ல குடு ஆன்லைன்ல குடு என்றால் எங்க இருந்து கொடுக்கிறது? ஏதோ நம்ம செய்த புண்ணியம் அந்த தம்பி நமக்கு உதவி செஞ்சது இல்லன்னா என்ன பண்றது.

என்று மருந்தை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு செல்கிறார்கள்.

என்னது நம்ம வீட்டை சுத்தி இவ்வளவு பேர் இருக்காங்க?

என்ன ஆச்சு அப்படி, என்று ஆட்டோவில் இருந்து இறங்கி போய் பார்க்கிறார்கள்

என்னப்பா கணேசா உனக்கு உடம்பு சரி இல்லையாமே பக்கத்து வீட்டு அக்கா சொன்னாங்க மார்பு வலி, என்று அதான் நாங்க எல்லாம் சேர்ந்து பார்க்கலாம்னு வந்தோம்

"அப்படியா ரொம்ப சந்தோசம் இப்ப தான் நாங்க ஹாஸ்பிடலுக்கு போயிட்டு வருவோம் இப்ப "பரவால்ல டாக்டர் அப்பவே ஒரு மாத்திரை கொடுத்திருக்காங்க இப்ப நல்லா தான் இருக்கு

“ பாத்துக்கோப்பா நாங்க எல்லாம் பயந்துட்டோம் மார்பு வலின்னு சொன்னதும் அதான் எல்லாரும் வந்து பார்க்கலாம் வந்தோம்”

கிராமம் என்பதால் ஒருத்தருக்கு தெரிந்ததும், தெரிந்தவர்கள், அக்கம் பக்கத்து சொந்தக்காரர்கள், தெரிஞ்சவங்க எல்லாரும் ஒன்று கூடி பார்க்க வந்திருந்தார்கள்.

நாங்க எப்போ.. வந்திருப்போம் அந்த ஹாஸ்பிடல்ல ஆன்லைன்ல பணம் கொடுக்கணும்னு சொல்லிட்டாங்க அதுக்கு ரொம்ப கஷ்டமாயிடுச்சு ஒரு தம்பி உதவி செஞ்சது இல்லன்னா என்ன ரொம்ப கஷ்டமா இருந்திருக்கும் இந்த பட்டன் ஃபோனை வைத்துக்கொண்டு

என்னடி சொல்ற லட்சுமி

ஆமாக்கா இப்ப இருக்குற காலத்துல யாரு கையில பணம் வச்சிருக்காங்க எல்லாம் ஒரு போனை வைத்துக்கொண்டு டக்கு டக்கு டக்குன்னு அடிக்குதுங்க எல்லா வேலையும் ஆயிடுது எங்க கிட்ட பட்டன் போன் தான் இருக்குது.

சரிவாங்க எல்லாம் வந்து உள்ள உட்காருங்க காப்பி தண்ணிபோட்டு தரேன் குடிப்பீங்க

அதெல்லாம் ஒன்னும் வேணாம் டி நாங்க கணேசனை பாத்துட்டோம்ல அது போதும் நான் போயிட்டு வரோம் டாக்டர் சொன்ன மாதிரி மருந்து மாத்திரை எல்லாம் ஒழுங்கா குடு பத்திரமா பாத்துக்கோ

கூறிவிட்டு ஊர் மக்கள் எல்லாம் சென்று விடுகிறார்கள்

சென்னையில் ஒரு பிரைவேட் கம்பெனியில் வேலை செய்யும் தன் மகனிடம் அப்பா வாசு ஆன்லைன்ல பணம் கொடுக்க றாங்க இல்ல கைல அந்த போன் எவ்வளவு பா வரும் என்னமோ பேர் சொல்றாங்களே ம்ம்..

அது பேரு” ஸ்மார்ட் போன்” பா அந்த போன் வாங்கி கொடுப்பது பெரிசு இல்லப்பா அது கத்துக்கணும் அது எப்படி உன்னால முடியும் அப்பா’

“என்னால முடியும் பா அம்பது வயது தானே ஆகுது எனக்கு போன் ஒன்னு வாங்கி கொண்டு வா இந்த மாசம்” என்று தன் மகனிடம் உரிமையாக கேட்கிறான் கணேசன்

“சரிப்பா,” என்று கூறிவிட்டு ஆபிசுக்கு சென்று விட்டான் வாசு

தன் ஒரே மகன் வாசுவிடம் கூறியதும் அவன் அந்த மாதம் சம்பளத்தில் ரூபாய்7000 ஃபோனை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு ஜாங்கிரி அரை கிலோவும் வாங்கிக்கொண்டு வருகிறான்

அதைப் பார்த்ததும் அப்பாவிற்கு முகம் எல்லாம் பூரிப்பு இதுல பணம் கொடுக்கலாம் இல்லப்பா என்றுமிகவும் குழந்தை மாதிரி கேட்கிறான்

"அப்பா அதற்கு தங்களுடைய பேர்ல அக்கவுண்ட் இருக்கணும்ப்பா அப்பதான் முடியும்"

சரிப்பா முதல்ல இதுல போன் வந்ததுன்னா எப்படி எடுக்கணும்? எப்படி என்ன என்பதை சொல்லி கொடு, என்று கணேசன் கேட்டான்.

சரி என்று போனில் சிம் போட்டு எல்லாம் அரேஞ்ச் பண்ணி அந்த போனை எப்படி யூஸ் செய்ய வேண்டும் என்பதை கணேசனுக்கும் அவனுடைய அம்மா லட்சுமிக்கும் சொல்லிக் கொடுக்கிறான்

இரண்டு நாள் கழித்து ஒரு நாள்

அம்மா.... அப்பா எங்கே? அப்பாவை காணோம் எங்கே போனார்?

தெரியலையேப்பா இப்போது தான் டிபன் கொடுத்தேன் சாப்பிட்டு எங்கே போனாருன்னு தெரியல கழனிக்கு எங்கேயாவது போய் இருக்கும் நீ வேலைக்கு போகணும் இல்ல வா சாப்பிடு, என்று தன்னுடைய மகனை காலை சிற்றுண்டி சாப்பிட அழைத்தாள்."அம்மா.. அப்பாவை பத்திரமா பாத்துக்கங்க அவர் வந்ததும் வீட்ல ரெஸ்ட் எடுக்க சொல்லுங்க மருந்து மாத்திரை தவறாமல் கொடுங்க ஒரு வாரம் கழிச்சு அவர் மறுபடியும் டாக்டர்கிட்ட கூட்டிட்டு போகணும் சரியா"என்று கூறிவிட்டு ஆபீசுக்கு போக தயாராகிறான்

அதற்குள் அவங்க அப்பா வீட்டிற்கு வந்து வாசு நீ ஆபீஸ் போகிறாயா அல்லவா போகும் வழியில் என்னை பேங்க்ல விட்ரியா

எதுக்குப்பா என்ன ஆச்சு

அது ஒன்னும் இல்லப்பா நான் ஒரு வாரம் கழிச்சு டாக்டர் கிட்ட பரிசோதிக்கணும் அதுக்கு பணம் வேணும் அதான் போன்ல வாங்குறாங்களே இப்போ அதான் நீ கூட சொன்னியேப்பா பேங்க்ல என் பேர்ல அக்கவுண்ட் பணம் இருக்கணும்னு சொன்னியே அதான் போய் விசாரிக்கலாம் என்று பேங்குக்கு போகணும்

ஓ அப்படியாப்பா சரி வாப்பா நம்ம ரெண்டு பேரும் போகலாம் அதுக்கு முன்னாடி ரெண்டு போட்டோ ஏதாவது இருக்காப்பா உங்ககிட்ட அது , ஆதார் கார்டு இதெல்லாம் எடுத்துக்கங்கப்பா

அதெல்லாம் எதுக்குப்பா

அப்பா அக்கவுண்ட் திறக்கணும்னா இதெல்லாம் வேணும் பா நீங்க எடுத்துட்டு வந்தீங்கன்னா இன்னைக்கே நம்ம அக்கவுண்ட் திறந்து விடலாம் அதுக்கு தான்.

சரிப்பா என்று எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு வர உள்ளே சென்றான் கணேசன

கணேசன் உள்ளே இருந்து வந்ததும் இருவரும் ஆட்டோவில் பேங்க் போகிறார்கள்

பேங்குக்கு சென்றவுடன் பேங்கில் வயது வரம்பு எல்லாம் விசாரித்துவிட்டு

அவங்க கொண்டு வந்த ஆவணங்களை சரி பார்த்துவிட்டு ஒரு விண்ணப்பத்தை எடுத்து அதனை பூர்த்தி செய்து அக்கவுண்டை திறக்கிறார்கள்.

மாதந்தோறும் பணம் போடுவது நல்ல பழக்கம் அது உங்கள் சேமிப்பையும் நல்ல நிலையில் வைத்திருக்கும் தேவையான போது எடுத்துக் கொள்ளலாம் சரிங்களா, என்று சொல்லிவிட்டு" அவர்களை அனுப்பி வைக்கிறாள் அங்கு வேலை செய்யும் பெண்

பேங்கில் அனைத்தையும் கேட்டுக் கொண்டு வீட்டுக்கு வருகிறார்கள்

வீட்டுக்கு வந்ததும் பேங்கில் சொன்னதை வீட்டில் தன் மனைவியிடம் சொன்னதும்

இது நல்ல ஐடியா வா கீது நானும் கடுகு டப்பால கொஞ்சம் கொஞ்சமா சேமித்து வைப்பேன் ஆனா கடைசியில அது செலவாயிடும் இதுபோல வேண்டுமென்றால் நிறைய சேர்க்கலாம் போல

கடவுள் எது செஞ்சாலும் நல்லது செய்வாரு இனி நமக்கு வேற ஏதாவது நோய் இருந்தாலும் யார்கிட்டயும் கடன் வாங்காம இது மாதிரி சேர்த்து வெச்சா அது எடுத்துக்கினு போய் டாக்டர்கிட்ட கொடுக்கலாம் நல்ல ஐடியா தான் ஆமா அதுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கணும் சொல்றீங்களே உங்ககிட்ட ஆயிரம் ரூபாய் இருக்கா?

உன்கிட்ட தான் இருக்கும் மேடி லட்சுமி

சரி சரி கொடுக்கிறேன் என்கிட்ட 1200 இருக்குது குடுக்குறேன் எடுத்துட்டு போயி கட்டுங்க அடுத்த மாசத்திலிருந்து ஆயிரம் ரூபாய் இல்ல 500 ரூபாய் எவ்வளவு இருக்குதோ அவ்வளவு கட்டுவோம் சரிங்களா.

என்று அடுப்படிநோக்கி செல்கிறாள் லட்சுமி.. கடுகு டப்பாவில் பணம் எடுக்க.

சுபா காரைக்குடி, நியூஜெர்சி

மேனகா நரேஷ்

சுபா காரைக்குடி, திறமையான கவிஞரும், எழுத்தாளரும் ஆவார். தனது கல்லூரிப் படிப்பை காரைக்குடியில் முடித்து தற்போது நியூஜெர்சியில் வசித்து வருகிறார். தொழில்நுட்பத் துறையில் மேலாளராக பணியாற்றும் இவர், இலக்கியம் மற்றும் கலை நிகழ்வுகளில் தீவிர ஈடுபாடு கொண்டவர் . பேச்சாளராக பல நிகழ்ச்சிகளில் உரையாற்றியுள்ளதுடன், பட்டிமன்றங்களில் நடுவராகவும் பொறுப்பேற்று செயல்பட்டுள்ளார்.

இவரை "சக்தி" இதழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறேன். அவரது பேட்டி இதோ உங்களுக்காக!

1.வணக்கம் சுபா! உங்களது இலக்கியப் பின்னணி குறித்து கூறுங்கள்?

என் இலக்கியப் பயணம் தமிழ் இலக்கியங்களைப் படிப்பதிலிருந்து தொடங்கியது. சங்க இலக்கியத்தின் அழகு முதல் சமகால எழுத்தாளர்களின் படைப்புகள் வரை தொடர்ந்து வாசிப்பது என் உள்ளார்ந்த ஆர்வமாக இருக்கிறது. கருத்தாழம் பொதிந்த தமிழ் நூல்களைக் கேள்வியுடனும், அறிதலுடனும் அணுகியதன் வழியாக, உலக இலக்கியங்களையும் ஆர்வத்துடன் வாசித்து வருகிறேன். மொழி எல்லைகளை மீறிச் சிந்திக்கச் செய்யும் படைப்புகள் என் வாசிப்புப் பாதையை விரிவாக்கியுள்ளன.

2.உங்கள் எழுத்துப்பயணம் எப்போது, எப்படிப் ஆரம்பமானது?

என் எழுத்துப் பயணம் கல்லூரி நாட்களில் சிறிய கிறுக்கல்களாகத் தொடங்கியது. படிப்பில் கொண்டிருந்த ஆழ்ந்த விருப்பம், எழுத்திலும் பிரதிபலித்தது. அப்போது தொடங்கிய எழுத்து ஆர்வம் காலப்போக்கில் கவிதைகள், பின்னர் கதைகள் எழுதுவதில் வளர்ந்தது. எண்ணங்களை வார்த்தைகளில் ஒழுங்குபடுத்துவதும், மனநிலைகளை

படைப்பாக வடிவமைப்பதும் என்னை எழுதத் தூண்டிய காரணங்களாகின்றன. இன்று வரை, எழுத்து என்னுடைய ஆளுமையின் அங்கமாகவே இருந்து வருகிறது.

3.நீங்கள் இதுவரை வெளியிட்ட புத்தகங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

* ''தேடலில் தொலைந்த வெயில்" என்ற கவிதை நூலை வெளியிட்டு இருக்கிறேன்.

'தேடலில் தொலைந்த வெயில்' கவிதை நூல், சமகாலச் சிந்தனைகள், அன்பின் பரிமாற்றம், ஏமாற்றம், சமூகத்தின்மீதான பிடிப்பு, சமூக அவலங்கள் மீதான சாடல், மனித மனம் - இவற்றைக் குறித்த கவிதைகளின் தொகுப்பு நூல்.

''சுபா காரைக்குடியின் கவிதைகள் பலவிதமான உணர்வுகளைக் கிளர்த்துகின்றன. ஒரு நீண்ட தாழ்வாரத்தின் சுவர்களில் பதித்துவைக்கப் பட்டிருக்கின்ற கவிதைகளை நம் மனத்தின் வெளிச்சத்தில் படித்துக்கொண்டு போவது போன்ற உணர்வைத் தரும் எளிமையான கவிதைகள் இவை. இது முதல் கவிதைத் தொகுப்புதான் என்றாலும் அந்தச் சாயல் இல்லாமல் இருக்கிறது.

சிலவேளைகளில் நமக்குக் காலை வெயில் பிடிக்கும்; சில நேரங்களில் உச்சி வெயில்; இன்னும் சில நேரங்களில் மாலை வெயில். இந்தக் கவிதைகள் காலை நேரத்து மஞ்சள் வெயில்.''

'தேடலில் தொலைந்த வெயில்' குறித்து, கவிஞர் சுகிர்தராணியின் மதிப்பீடு இது.

4.அயலகத்தில் நீங்கள் ஆற்றிவரும் தமிழ்ப்பணிகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

அமெரிக்காவில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் 'கதையாடும் முன்றில்' என்ற இலக்கிய வாசகர் வட்டத்தை நிறுவி நடத்தி வருகிறேன். இதில் வாரந்தோறும் சிறந்த கதைகளை வாசித்து, உரையாடும் இலக்கியச் சூழலை உருவாக்கியுள்ளோம்.

வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையும், நியூஜெர்சி தமிழ்ச்சங்கமும் நடத்தும் நிகழ்வுகளில் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வருகிறேன்.

அமெரிக்க தமிழ்க் கல்விக் கழகத்தில், குழந்தைகளுக்கான தமிழ் கல்வித் திட்டங்களை உருவாக்கும் பணியில் இயக்குநராக பங்களித்திருக்கிறேன்.

மேலும், தமிழாசிரியராகவும், மரபுக் கலைகளை வளர்த்தெழுப்பும் நோக்கில் ''நியூஜெர்சி தமிழ் கலைக் குழு'' என்ற அமைப்பை நிறுவி, பன்முகத் திறன்கள் வாய்ந்த இளம் தலைமுறையை ஊக்குவித்து வருகிறேன்.

5.நியூஜெர்சியில் புத்தக வாசிப்புக்குழு அமைத்து நடத்தி வருகிறீர்கள். கவிதை, சிறுகதை, நாவல் குறித்த உங்கள் பார்வை என்ன?

ஆம், 'கதையாடும் முன்றில்' என்ற வாசிப்புக் குழுவை நியூஜெர்சியில் நிறுவி, வாசிப்பில் ஆர்வமுள்ளவர்களுடன் வாரந்தோறும் கதைகளைப் பகிர்ந்து, கலந்துரையாடி வருகிறேன். இவ்வாசிப்பு மன்றம் என்னுடைய வாசிப்புப் பயணத்துக்கும், எழுத்துப் பயணத்துக்கும் ஊக்கமாக இருக்கிறது.

கவிதை எனக்கு உணர்வின் செறிவையும், மொழியின் இசைநயத்தையும் உணர்த்துகிறது. ஒரு சில வரிகளில் முழு வாழ்க்கைப் பயணத்தைச் சொல்வதற்கான ஆற்றலை கவிதையில் காணலாம். சிறுகதை, ஒரு கணத்தின் சித்திரம் போல. ஒரு குறுகிய வட்டத்துக்குள் மனிதர்களின் உணர்வுகள், பரிமாணங்கள், சிக்கல்கள் என அனைத்தையும் கொண்டது—all compact.

நாவல் எனக்குப் பரந்த உலகம். பாத்திரங்கள் வளரவேண்டும், பின்னணிகள் விரிவாக வேண்டும். நாவல்களில் நான் கதை சொல்லும் திறனையே சோதிக்கிறேன்.

முக்கியமாக, இவை மூன்றும் வேறுபட்ட வடிவங்கள் என்றாலும், ஒரு நூலின் உள்ளார்ந்த உணர்வும், வாசகருடன் ஏற்படும் அந்த நெருக்கமும் என்னை இழுத்துச் செல்லும். வாசிப்பும் எழுத்தும் ஒருங்கிணையும் இந்தப் பயணம் தொடரும் என்ற நம்பிக்கையோடு, வாசிப்பு குழுவின் வாயிலாக பலருடன் அந்த அனுபவத்தைப் பகிர்ந்து வருகிறேன்.

6.நீங்கள் எவ்வகையான புத்தகங்களை விரும்பி வாசிக்கின்றீர்கள்? என்ன காரணம்?

நான் வாசிக்க விரும்பும் புத்தகங்கள் பலவகையானவை. தமிழிலும் ஆங்கிலத்திலும் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, மற்றும் சிந்தனைநெறி சார்ந்த புத்தகங்களை ஆர்வத்துடன் வாசிக்கிறேன்.

தமிழில், சங்க இலக்கியத்தின் நுட்பங்களும், சமகால எழுத்தாளர்களின் சமூகநிலை பிரதிபலிப்புகளும் எனக்கு ஆழமான ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன. தமிழில் எழுதிய சிறந்த கட்டுரைகள், குறிப்பாக கலை, மொழி, பெண்கள் வாழ்வு, மற்றும் கலாச்சார பார்வையை விவாதிக்கும் படைப்புகள் , எனக்குள் புதிய சிந்தனைகளைத் தூண்டுகின்றன.

ஆங்கிலத்தில், மனித மனதின் இயல்புகளையும், தனிமனித வளர்ச்சியையும் அலசும் புத்தகங்களை விரும்புகிறேன். உதாரணமாக "Ikigai", "The Power of Now", "Alchemist" "Emotional Intelligence" "Last Lecture" போன்ற புத்தகங்கள் வாழ்க்கையை விழிப்புணர்வுடன் வாழக் கற்றுத் தரும்.

நான் வாசிக்கும் ஒவ்வொரு நூலும் புதிய உலகத்தைத் திறந்துவைத்து, வாசிப்புக்கு ஆழமான உந்துசக்தியையும், எழுதுவதற்கான மனப்பரப்பையும் உருவாக்குகின்றன.

வாசிப்பு என்பது ஒரு பயணம். ஒரு எழுத்தாளராக தொடர்ந்து வளர வாசிப்பு அனுபவம் என்னை ஊக்குவிக்கிறது.

7.இதுவரை உங்களுக்குக் கிடைத்த விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

** ஈரோடு தமிழன்பன் விருது மற்றும் தில்லி கலை இலக்கிய பேரவையின் 'சிந்தனைச் செல்வி' விருது பெற்றிருக்கிறேன்.*

8.இன்றைய இலக்கிய உலகில் பெண்களின் பங்கு குறித்து உங்கள் பார்வை என்ன?

இன்றைய இலக்கிய உலகில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியமானதாயும், பலதரப்பட்ட வெளிப்பாடுகளால் செழிப்படைந்ததாகவும் இருக்கின்றது. இன்று பெண்கள் வெறும் கதாப்பாத்திரங்களாக மட்டுமல்ல, கதைகளின் வடிவமைப்பாளர்களாக, கவிதையின் குரல்களாக, இலக்கியத்தின் திசையை மாற்றும் சிந்தனையாளர்களாக மாறியுள்ளனர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் பெண் எழுத்தாளர்கள், தங்களின் அனுபவங்களையும், உணர்வுகளையும், சமூக கட்டமைப்புகளுக்குள் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் மிகத் திறமையாக பதிவு செய்து வருகின்றனர்.

இன்று பெண்கள் எழுத்து ஒரு சமூகக் கருத்தாக, விமர்சனமாக வளர்ந்துள்ளது. அவர்கள் எழுத்துகள் கேள்விகள் எழுப்புகின்றன, புதிய பார்வையை முன்வைக்கின்றன, மாற்றத்தைத் தூண்டுகின்றன.

பெண்கள் இன்று வாசகர்களாக மட்டுமல்ல, எழுத்தாளர்களாக, ஆசிரியர்களாக, விமர்சகர்களாக, வெளியீட்டாளர்களாக என இலக்கியத்தின் ஒவ்வொரு நிலைக்கும் உரிய பங்களிப்பை அளித்து வருகின்றனர். இதுவே ஒரு மகிழ்ச்சியான மாற்றம்.

இவர்களது பங்களிப்புக்கு ஏற்ற அங்கீகாரமும் நாளுக்குநாள் உயர்ந்து வருகிறது. ஆனால், இது தொடர்ச்சியான முயற்சியால் மட்டும் நிலைபெறும் வளர்ச்சி என்பதும் உண்மை. பெண்கள் மேலும் இலக்கிய உலகில் பரந்த அளவில் இடம் பெற்றால்தான் மொழியின் முழுமையும், சமூகத்தின் முழுமையும் பிரதிபலிக்க முடியும்.

10.இலக்கியம் தவிர்த்து வேறு என்ன துறைகளில் ஆர்வம் இருக்கிறது

புதிய இடங்களைச் சுற்றி பார்க்கும் பயணங்களில் பெரும் ஆர்வம் உண்டு. ஒவ்வொரு புதிய இடமும் அதன் கலாச்சாரம், இயற்கை அழகு, மக்களின் வாழ்க்கை முறைகள் என பலரீதியான அனுபவங்களைத் தருகிறது. பயணம் எனக்கு மனதை விரிவுபடுத்தும், புதிய கண்ணோட்டங்களை கொடுக்கும் ஒரு வாழ்வியல் பாடமாக உள்ளது.

இதோடு, தமிழ்க் கலைகள் மீதும் ஈடுபாடு உண்டு . பாடல், நடனம், இசை போன்ற பாரம்பரியக் கலைகளில் ஈடுபடுவதும், அவற்றை அனுபவிப்பதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. தமிழ் பாரம்பரிய கலைகள் என் அடையாளத்தின் ஓர் அங்கமாக இருக்கின்றன. அவற்றை அறிந்து, பாதுகாத்து, பரப்புவதில் எனக்கு ஆழ்ந்த பங்களிப்பு உணர்வும் உள்ளது.

இவற்றின் மூலம், எனது வாழ்வில் கலையும், இயலும், அனுபவமும் இணைந்து ஒரு முழுமையான பயணம் தொடர்கிறது.

இந்தப் பேட்டியில், எழுத்தாளர் சுபா காரைக்குடி தன் இலக்கியப் பயணம், எழுத்து, வாசிப்பு, தமிழ்க் கலைகளை வளர்க்கும் பங்களிப்பு ஆகியவற்றை நம்முடன் பகிர்ந்துகொண்டார்.

அவருடைய பயணமும், வருங்கால இலட்சியங்களும் பலருக்கும் ஊக்கமாக இருக்கும் என்பது உறுதி.

இந்த நேர்காணலை நடத்தும் வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நேரத்தை ஒதுக்கி, மனம் திறந்து பகிர்ந்துகொண்டதற்காக சுபா காரைக்குடி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி!

பேட்டியாளர், மேனகா நரேஷ்

நதி மீனின் கடல்

முதலாமாண்டு பயிலும்
மகளைப் பார்க்க
கல்லூரிக்குச் சென்றேன்
பரபரப்பாக இருந்தாள்

கடலுக்குள் நுழைந்து
நீந்த முற்படும்
ஆற்று மீனின்
சாயல் அவளுக்கு

– அ.ஈடித் ரேனா

வானத்து நிலவு
தரையிறங்கி
பெருங்கடலை
தொட்டுவிடும்
புள்ளியில்
தான்
புரிகிறது
வானமும்
தொட்டு விடும்
தூரம்தானென!

– புனிதா, கோவை

அம்மா, அத்தாவாகிறாள் ஜரீனா

சம்சுல் ஹுதா பானு

தம்பி காசிமுக்கு தட்டுல சோத்தப் போட்டுக் கருவாட்டுக் கொழம்ப ஊத்தி, பருப்புத் தொகையில வச்சு 'காசிம்...காசிம்'... வாடா வந்து சாப்புடு. நான் கிரைண்டரைப் போடனும் அரிசி உழுந்து நல்லாவே ஊறிரிச்சு. காசிமு ஜன்னத்த எங்கடா? என தங்கச்சி ஜன்னத்தை விசாரித்தாள் ஜரீனா. ஜன்னத்து அம்மா அத்தட்டாப் போறேனு பஜாருக்கு டிபன் கடைக்கு போய்ட்டா.. ரெண்டுபேருந்தேன் வெளயாடுனோம். நீ வீட்டுக்குப் போனு சொல்லிட்டு பஜாருக்குப் போயிட்டாக்கா...

மணி ஏழாகுது இன்னியாரத்துல பஜாருக்குப் போறாலே, காரு வண்டிலாம் வேகமாப் போகுமே... "அல்லா உங் காவல்"-எனக் கூறியவாறு கிரைண்டரை ஓடவிட்டு அரிசியைப் போட்டு விட்டு ஸ்... அல்லாவே என சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள். மூணு நாளக்கி முன்னாடி தேன் கமுதிக்கார மாப்பிள்ள வீட்டுல என்னப் பாத்துட்டு போனாக, இன்னைக்கி பதில் சொல்றேனு சொன்னாக இது ஆறாவது வரன், 'ஆற்றாமையால்' இந்த மாப்புள்ள வீட்டுக்காரவுகளாவது சம்மதம் சொல்லுவாகளா?.. என தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். கிரைண்டரின் ஓட்டம் போலவே ஜரீனாவின் மன ஓட்டமும் ஓடியது...

பன்னன்டாவது வர படிச்சாச்சு, மேல படிக்க வைக்க அம்மா, அத்தாவுக்கு வசதியில்ல. வீட்டுவேல பூராவும் கத்துக்குட்டாச்சு. தையல், குர்ஆன் ஓத, தொழுக என வாக்கப்படப்போகும் வீட்டுக்குள்ள 'தகுதிலாம்' அம்மா தெளிவா சொல்லிக்குடுத்தாச்சு. அம்மா, அத்தாவை நினைத்தால் ஜரீனாவுக்கு பெருமையாக இருந்தது. வறுமையிலும் செம்மையாக வாழ்பவர்கள், 'இபாதத்தாக'- வாழும் ஜீவன்கள் இருவரும். இபாதத்தாளிகளைத்தான் இறைவன் அதிகம் சோதிப்பானோ?... தகுதிகலாம் இருந்தும் இந்தத் திருமணச் சந்தையிலே அழகும், பணமும் முதல் முதலீட்டா இருக்கே?..

வசதியில்லையினாலும் நெறமாவது இருக்கனும் என்ற அங்கலாய்ப்புகள்... ஆனா நான் மாப்பிள்ளைகளை வேணானு சொல்ல பல காரணங்கள் இருக்கே.. ம்..ஹூம் எனப் பெருமூச்சு விட்டு திருமண புரோக்கர் மைதீன் மாமு தந்த மாப்பிள்ளை போட்டாவ எடுத்துப் பார்த்தாள் ஜரீனா, "ஒடச்சு ஒரு சட்டியில வக்கிற ஒடம்பு", "தலையில முடியக்காணோம்"- என நினைத்து அவளது கரங்கள் இடுப்பு வரை கிடந்த தன் தலைமுடியை தடவிப் பார்த்தது.

அஞ்சு மாப்புள்ள வீட்டுக்காரவுகளும் பாத்துட்டுப் போயிட்டு "நெறமில்லை" எனச் சொன்னாகளே அந்த மாப்புள்ளைக கொறய நாஞ் சொல்லக் கூடாதா? நாயம் ஒரு பக்கம் மட்டும்தேனா?.. என மனதின் எண்ணப் பிராண்டல்களில் வாய்விட்டு மௌனமாக முனகியபடி இருந்த ஜரீனாவை "எக்காவ்" "ஏக்காவ்"- எனக் கத்தியபடி வந்த காசிம் ஈரக் கையை டவுசரில் துடைத்தபடி 'சாப்புட்டுட்டு தட்டக் கழுவிட்டேன்". நானும் அம்மா, அத்தாகிட்டே பஜாருக்கு டிபன் கடைக்கிப் போறேக்கா என மூக்கை உறுஞ்சிக் கொண்டான்.

காசிம் நீ ஜன்னத்தோடயே கூடப் போயிருக்கலாமுல, பாத்து கவனமாப் போடா என ஜரீனா சொல்லவும், அக்கா வாரேன்... எனச் சொல்லிடுர்...டுர்..டுர்..டுர்ர்ர்ர்..... என காற்றில் இரு கைகளாலும் வண்டியைக் கிளப்புவதுப் போல பாவனையுடன் கால்களில் ஓட்டமெடுத்தான். டேய்...பாத்துப்போடா... கார், வண்டி கவனம்டா.... இட்லிக்கி மாவு காலியாச்சுனா தூக்க எடுத்துட்டு வரச் சொல்லுடா என ஜரீனா கத்தியது தூரமாய் ஒலிக்கற்றைகள் காசிமின் காதுகளில் நுழைந்தது. தனக்கே தனக்காய் தலையை ஆட்டிக்கொண்டு டுர்ர்ர்ர்....டுர்ர்ர்ர்ர்... என வேகமெடுத்தான் காசிம்.

காசிம் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ஜரீனாவுக்கு திருமண புரோக்கர் மைதீன் மாமு சைக்கிளில் வருவது தெரிந்தது. ஜரீனா வீட்டு வாசலில் சைக்கிள் வந்து நின்றது.

"அஸ்ஸலாமு அலைக்கும் ஜரீனாமா"- அம்மா, அத்தா இல்லையாம்மா? என வினவினார். "வ அலைக்கும் சலாம் மாமு"- அம்மா, அத்தா பஜார்ல டிபன் கடையில இருக்காங்க...

"தள்ளு வண்டிக் கடைனாலும் டி(ஃ)பன் கடை நம்மளதுனு சொல்றதுல ஒரு பெரிய சந்தோஷம் ஜரீனாவுக்கு. சொந்தமா கடை வச்சுருந்தாதானா? "தள்ளுனாலும்" வண்டிக்கடைநம்மகடைஎன்றஒருபெருமிதமும்கொள்வாள்ஜரீனா.தள்ளுவண்டினாலும் குத்தகைக் காசு வாங்காமலா இருக்காங்க பஜார்ல? ஜரீன உழைப்பின் வலி அறிந்தவள் அல்லவா?..

சரிமா...ஜரீனா அம்மாவாச்சும் இருக்குமுனு வந்தேன், சரி சரி பஜார்ல போயி பாத்துக்கிறேன். சைக்கிளை மாற்றுத் திசையில் திருப்பி அழுத்தினார் பெடலை மைதீன் மாமு.

தெருவில் மிகத் திருத்தமாக 'சத்தமாக' ராபியாக்கா மைதீன் மாமுவை "மைதீண்ணே... மைதீண்ணே"- கூப்புடுவது கேட்டு கிரைண்டரில் மாவை அள்ளப்போன ஜரீனா ராபியாக்காவின் குரல் "அடித்த" மாதிரி விழுந்ததில் வாசல் பக்கம் நகர்ந்தாள் ஜரீனா. செவிகளை கூராக்கி ராபியாக்காவின் அடுத்த வார்த்தையைக் கேட்கத் தயாரானாள்.

மைதீன் மாமுவிடம் என் விஷயத்தைதான் கரக்கப் பார்க்கும் ராபியா அக்கா, அடுத்த வீட்டுக்குக் கூட அவலாகிப் போனது அவளது திருமணத் தகவல். அம்மா, அத்தா வந்து

வீட்டுல எங்கிட்ட சொல்லுவாகனு நினச்சிருந்தேன். ஆனா ராபியாக்கா உபயத்துல தெரிஞ்சுக்க வச்சுருக்காம் போல அல்லா. ''மூணு நாளக்கி முந்தி ஜரீனாவைப் பாத்துட்டு போன கமுதி மாப்பிள்ள வீட்டுல என்ன பதில்ணே சொன்னாக''- என தெருவுக்கே இருக்கும் அனைத்துக் காதுகளிலும் கேட்குமாறு வினவினாள் ராபியா.

ச்ச்...சேய்...என்ன மனுஷி இந்த ராபியாக்கா, மைதீன் மாமு பதிலை தெருவுக்கே பந்தி வைக்கிறார்களா? என்ன வெறுப்பு எண்ணம் கசப்பாக மனதினுள் ஓடினாலும் மைதீன் மாமுவின் சொல்லுக்கு, பதிலுக்கு மூச்சைப் பிடித்து காதுகளுக்கு உயிர் கொடுத்து காத்திருந்தாள் ஜரீனா.

ராபியா அக்கா இரண்டு மகள்களையும் கட்டிக்குடுத்துட்டாக, வெளிநாட்டுப் பணம், ராபியாக்க கணவர் துபாய்ல வேலை செய்து பணம் அனுப்புறார். வரதட்சணை கொடுக்க முடியும், நம்ம தலவிதிய அல்லா ராபியாக்காவுலாம் தெருவுல விசாரிக்கிற மாதிரி வச்சுருக்கான். சரி..சரி.. மைதீன் மாமு சொல்வதைக் கேட்போம் என சிலையாக... வழியும் வியர்வையைக் கூட துடைக்கத் தோணாமல் கவனம் முழுவதையும் தன் காதுகளில் வைத்து நின்றாள்.

ராபியாம்மா இந்த மாப்புள்ள வீட்டுலையும் நிறமில்லைனு சொல்றாக, பேசிப் பார்த்தேன் ''அம்பதாயிரம் ரொக்கமும் இருபது பவுன் நகையும் கேக்குறாங்க''- இதுக்கு சரிண்டா மேற்கொண்டு பேசாலாமுங்குறாக... அதேன் பஜாருக்கு ஜரீன அம்மா, அத்தாவப் பாக்கப் போறேன், ரெண்டு பக்கமும் பேசிப் பாப்போம் அல்லா நாடுனா நடக்கும் நான் வரேன் ராபியாம்மா. 'விருட்' டென சைக்கிளை மிதித்து பறந்தார் மைதீன்.

காதுகளில் விஷயத்தை வாங்கிய ஜரீனா மூச்சை ஆசுவாசமாக விட்டு அம்பது ஆயிரமும், இருபது பவுனுமா பணங்காய்ச்சி மரமா இருக்கு வூட்டுல... அன்னாடங் காய்ச்சிக்கு அம்பது ஆயிரமும், இருபது பவனுக்கும் எங்க போறது?.. அது என்ன மாப்புள்ள வீட்டுல நெறம் குறச்சலுனு என்னச் சொல்றது ''நாஞ் சொல்லுறேன் அந்த மாப்புள்ள எனக்கு வேணாம்''- டி.பி வந்த உடம்பாட்டம் ஒல்லி குச்சி, மண்ட...மண்ட..வழுக்க மண்ட-என திட்டிக் கொண்டும், மனதுக்குள் சங்கல்ப்பம் செய்துக் கொண்டும் கிரைண்டரில் மாவை அள்ளிட்டு, உழுந்தைப் போட்டு ஓட விட்டாள். பாதி பின்னிய கூடையை எடுத்து பின்னலானாள்... இந்தக் கூடையை முடுச்சு பஜார்ல யாசர் அண்ணே கடைல குடுத்தா நூறு ரூபாயாச்சு கெடக்கிம், பின்னலில் கைகளை வேகப் படுத்தி முடித்து உழுந்தை ஆட்டியது பார்த்து கிரைண்டரில் உழுந்து மாவை வழித்துதெடுத்து இட்லிமாவைப் பதமாகக் கரைத்து வைத்தாள் ஜரீனா.

அக்கா...ஜரீனாக்கா..அக்கா... என அலறிய குரலுடன் ஜன்னத்தும், காசிமும் அலறி வருவது கேட்டு ஈரக்கொலையே ஜரீனாவுக்கு ஆடியது, ஜன்னத்தும், காசிமும் உடல் முழுவதும் நடுங்கியபடி உடல், உடைகளில் ரெத்தத்துளிகளுடன் நின்றிருந்த கோலம், ஆடிய ஈரக்கொலை வாயில் வந்தது போல இருந்தது ஜரீனாவுக்கு.

ஜன்னத்து...காசீம்..என்னாச்சு..என்னாச்சு புள்ளைகளை கட்டி அணைத்து சொல்லுங்க.. சொல்லுங்க... என அலறினாள் ஜரீனா. அக்கா...அக்கா... அம்மா, அத்தா மேல லாரி ஏறிடுச்சு...நம்ம வண்டியும் ம்..ம்..டிபன் வண்டியும் நொறுங்கிறுச்சு. அம்மா, அத்தாவ ஆம்புலன்சுல ஏத்திட்டுப் போயிட்டாங்கக்கா... என நடுங்கிய... கிரீச்சிட்ட குரலில் புள்ளைகள் சொன்னபோது ஜரீனாவின் கால்கள் துவண்டன. அக்கா...அக்கா... அம்மா, அத்தாவுக்கு உசுரு இல்லையாம்க்கா... சொல்றாங்கக்கா..யா...அல்லாவே.. உனக்குக் கண்ணு இல்லையா? அல்லா... அல்லானு உண்மையா வாழ்ந்த ஜீவனுகளுக்கு நீ குடுத்த தண்டனை-அம்மா...அத்தா... பாவிகளா எங்க அம்மா, அத்தா மேல லாரிய ஏத்துன மகராசனே... மனச் சாட்சி இல்லையா... மனசே இல்லையா புள்ளைகளை கட்டியபடி கதறினாள் ஜரீனா. இரத்தத்தின் வாசத்தில் அம்மா, அத்தா பாசத்தின் வாசம் மோதி மேற்க்கொண்டு கதற வைத்தது ஜரீனாவை.

மறுநாள் போஸ்ட்மாட்டம் முடிந்து அம்மா, அத்தா உடல் மிகச் சேதமானதால் மையவாடிக்குக் கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. குடித்து விட்டு ஓட்டிய டிரைவரை ஜெயிலில் அடைத்தனர் போலிஸ். குடித்து விட்டு தன்னை, தன் குடும்பத்தை அழிக்கும் குடிமகன்கள், அடுத்த குடியையும் அழிக்கிறார்களே! வீட்டின் கொள்ளளவு குறைவு என்பதால், உறவுகள் வாசலில் உட்கார்ந்தும், நின்றும் பேசுவது ஜரீனாவுக்குக் கேட்டது... இரண்டு பிள்ளைகளையும் மடியில் கடத்தி எதிர்காலத்தின் நினைவுகள் நெருப்பாக தகித்துக் கொண்டிருந்த மனதுடன் உறவுகளின் உரையாடல்கள் மேலும் தீக் கங்குகளைக் கொட்டியது.

மூத்தவ கட்டிக் கொடுக்க முடியாம இருக்கா, இளயவ இப்பவோ, அப்பவோனு இருக்கா சின்னவே தல எடுக்க நாளாகும்... ஆளுக்கு கொஞ்சம் பணம் போட்டுக் குடுத்துட்டு வந்து போயி பாத்துக்குறுவோம், என முடிவெடுத்து உறவுகளில் மூத்தவர் ''ஜரீனாமா இந்தாம்மா செலவுக்கு இந்தப் பணத்த வச்சுக்க... போனவுக போயிட்டாங்க அல்லா பாத்துக்குவான். நாங்க போயி வந்து பாக்குறோம்... இப்பக் கௌம்புறோம் தங்கச்சி, தம்பிய பாத்துக்க, போன் நம்பர் தரேன் ஏதுனா போன் பண்ணு இந்தாம்மா... வாங்கிக்க என்று சொன்னபடி பணத்தைக் கொடுத்த பெரியத்தாவைப் பார்த்து தலையை அசைத்து, கைகளால் கொடுக்க வந்த பணத்தை தடுத்து.. விருட்டென தங்கை, தம்பிகளை தள்ளச் சொல்லி எழுந்து தாவணியின் முந்தியை இடுப்பில் சொருகி... தம்பி, தங்கையை எழுந்திருக்கச் சொல்லி அணைத்து ''அம்மாவும், அப்பாவும் ''அவளாகி''... விறு..விறு வென சென்று கிரைண்டரை ஓடவிட்டாள்.., வாழ்க்கைப் பயணத்தை தொடர....,

(முற்றும்)

கல்வெட்டில் பாரசீகப் பெண்கள்

முனைவர் எஸ். சாந்தினிபீ
மேனாள் வரலாற்று பேராசிரியர், சென்னை

பாரசீகப் பெண்கள் புகழ்ந்த ஒரு இந்தியர் உண்டு என்றால் நம்பமுடியுமா?... முடியலையா...? பதில் எதுவாக இருந்தாலும் சரி அது உண்மையே. அதுவும் புகழப் பட்டது ஒரு மன்னன்.... இன்று நேற்று அல்ல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த சோழ மன்னன். இதையும் சொல்வது ஒரு கல்வெட்டுத் தான்... கல்வெட்டுக்களும் கதை விடுமா... என்றால் .. ஆம், ஆனால் அதற்காகவே இருப்பது தான் கல்வெட்டின் முதல் பகுதி 'மெய்கீர்த்தி'.

ஒரு மன்னனின் புகழ், வீரம், வெற்றி, பாரம்பரியம் போன்ற தரவுகள் கொண்டது கல்வெட்டின் முதல் பகுதியான மெய்கீர்த்தியாகும். இப்பகுதியில் மெய்யும் பொய்யும் கலந்திருக்கும். உலகின் ஒரு கண்டமான ஆசியாவின் ஒரு நிலப் பகுதியான இந்தியாவில்... அதன் தென்பகுதியில் அரசாளும் ஒரு மன்னனை 'நான்கு கடல்களை அடக்கி ஆளுபவன், உலகம் முழுதுடையான்' என்று புகழ்வார்கள். நாம் நான்காவது கடல் எங்கிருகிறது என்று தேடினால் அதில் பலனில்லை. மூன்று கடல்களால் சூழப்பட்ட தெற்குப் பகுதி என்று தான் புரிந்துக்கொள்ள வேண்டும். கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் இப்பகுதி வடமொழியில் எழுதப் பட்டிருக்கும். இதை அடுத்து வரும் தமிழ் பகுதியில் தான் குறிப்பிட்ட மன்னனின் ஆட்சியாண்டு, கல்வெட்டுவதின் நோக்கம், பயன்பெறுபவர்கள் போன்ற உண்மைத்தகவல் தமிழில் இருக்கும்.

புகழ் பெற்ற சோழமன்னர்கள் வரிசையில் முதலாம் குலோத்துங்கனும் ஒருவர். ஐம்பதாண்டு காலம் ஆட்சி செய்தவர்(கி.பி1070-1120). இவர் ஆட்சியின் 41-ம் ஆண்டிற்குறிய(கி.பி 1111) ஒரு கல்வெட்டுத்தான் பாரசீகப் பெண்களைப் பற்றிச் சொல்கிறது. கங்கைக் கொண்ட சோழபுரத்திலுள்ள பிரகதீசுவரர் கோயில் முன் மகாமண்டபம் ஒன்று உள்ளது. இதன் வடக்குப் பக்க படி ஏறும் பாதையில் வலது பக்கத்தில் இருக்கும் கிழக்குச் சுவரில் இக்கல்வெட்டை இன்றும் காணலாம், இக்கல்வெட்டின் பாதிபகுதி அச்சுவற்றோடு இணத்துக் கட்டப் பட்டத் துண்டுக் கல்லாகும், இதன் தகவலும் துண்டாகவே கிடைக்கிறது. அறியத் தகவலை தாங்கிய ஒரு கல்வெட்டு வரலாற்று அருமை அறியாமையால் அரைகுறையாகக் காணக்கிடைக்கிறது. 1962-62ம் ஆண்டில் மைசூரு கல்வெட்டியல் துறையினரால் படி எடிக்கப்பட்டு 709 என்ற எண்ணுக்குச் சொந்தமானது.

இக்கல்வெட்டு வடமொழியில் எழுதப்பட்டது. இதன் பிரதி சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ளதாகவும் அறிய முடிகிறது. குலோத்துங்கசோழனின் வெற்றிகளை பட்டியலிடுகிறது. மகாபாரத ஐம்பெரும் கதாநாயகர்களில் ஒருவரான 'பாண்டுவின் மகன் அர்ஜுனன்' போல் அம்பு எய்தி பாண்டியர்களைத் தோற்கடித்தார். அவர்களின் கோட்டைகளை அழித்து தன்

வெற்றியைப் பறைச்சாற்ற ஒரு வெற்றித் தூணூரம் நட்டு வைத்தார். பாண்டியர்கள் குலோத்துங்கனைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள் என்றெல்லாம் சொல்கிறது. இப்படி புகழ்ந்தும் நிறைவு பெறாத மெய்கீர்த்தி இயற்றிய கவிஞர் 'இவர் புகழ் கடல்களையும் தாண்டி அமைந்துள்ள பாரசீக நாட்டு இளம் பெண்களாலும் பாடப்பட்டது' என்று முதாய்ப்பு வைத்து நிறைவு கொள்கிறார்.

இங்கே பாரசீகப் பெண்கள் குலோத்துங்கனைப் பற்றி பாடினார்களா இல்லையா எனும் ஆராய்ச்சியை விட்விடுவோம். கி.பி 1111-ல் தமிழர்கள் இன்றைய ஈரான் எனப்படும் அன்றைய பாரசீகத்தையும் அப்பெண்களின் அழகையும் ,படித்த பெண்களின் கவித் திறனையும் அறிந்திருந்தனர் என்று புரிந்துக் கொள்வோம். பெண்கள் ஒரு ஆடவனின் அழகையும் புகழையும் ஒளிக்காது பாடும் தன்மைக் கொண்டது போலும் 12 ஆம் நூற்றாண்டின் பாரசீகத்தின் கவித்தளம்.

(கல்வெட்டை படிக்க விரும்பினால் தேடுக- ஏபிக்ராபியா இண்டிகா, தொகுப்பு- 5, எண்- 13ஏ) படங்கள்= நன்றி-டாக்டர். இல. தியாகராஜன், கங்கைகொண்டசோழபுரம் கல்வெட்டுக்கள்

நீ உயிரென நினைப்பவர்கள்
எப்போதும்
உன்னை மட்டுமே
நேசித்திருப்பார்களா
என்ன

நீ மலையென நம்பியிருப்பவர்கள்
எப்போதும்
உன் நம்பிக்கையை காப்பார்களா
என்ன

நீ உடன் இருப்பார்களென
எண்ணுபவர்கள்
எப்போதும்
உன் கரங்களையே
பற்றிக்கொண்டிருப்பார்களா
என்ன

உனக்கேத் தெரியும்
கனவுபோல வந்தவர்கள்
கனவாகவே சென்றுவிடுவார்களென

இருந்தும்
நீதான்
போனவர்கள் திரும்புவார்களென
வாசலிலேயே அமர்ந்திருக்கிறாய்

பின்னும்
நீ உயிரென நினைப்பவர்கள்
உன்னை நேசிப்பார்கள்தான்
ஆயினும்
எப்போதும்
உன்னை மட்டுமே நேசித்துக்கொண்டிருக்க
மாட்டார்கள்

தவிர
ஒருவர் வாழ்வில்
நீ இருக்கிறாய்
என்பதற்கும்
நீயும் இருக்கிறாய்
என்பதற்குமான
வித்தியாசம்
புரிந்தால்
போதும்

மூடிய கதவுகளின் முன் நின்று
தேம்புவதை
நீ விட்டுவிடுவாய்

-ரிஸ்கா முக்தார்

தைரியலட்சுமி

வை.மு.கோதைநாயகி

அத்தியாயம்-1

உலகத்திலில்லாத விசித்திர குணம்படைத்த மேதாவி உன் மாமனார். மோரக்கட்டையைப் பாரு. கல்யாணத்திற்கு முன்பு ஒரு வார்த்தை. கல்யாணத்திற்குப் பின்பு ஒரு வார்த்தையா? 5 ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணை ரொக்கமாகக் கொடுப்பதாகச் சொன்னான். ஏதோ கல்யாண த்தில் அஸாத்ய செலவாகிவிடுவதால் இரண்டாயிரம்ரொக்கம் முதலில்கொடுப்ப தாயும் மூவாயிரம் ரூபாய் பிறகு பெண்ணைக் கொண்டுவிடும் போது கூடவே கொடுப்பதாயும் சொன்னான். போனால் போகிறது என்று விட்டுக்கொடுத்தேன். பஞ்சப்பயல். பழைய பல்லவியையே பாடி பல்லை இளித்துக் கடிதம் எழுதி யிருக்கிறான் பாரு. பெண்ணை நாம் சொல்லிய முகூர்த்தத்தில் கொண்டுவிட்டுவிடுகிறானாம். பணம் மட்டும் இன்னும் ஆறு மாதம்: ஒரு வருஷத்தில் கொடுக்கிறானாம். வேணுமானால் ப்ரோ-நோட்டு எழுதிக்கொடுக்கிறானாம்! முட்டாள் பயல், எத்தனை திமிருடன் இப்படி எழுதியிருக்கிறான் பாருடா? கண்டிப்பாய் அவன் கொழுப்பை அடக்கியே தீரப்போகிறேன். அன்று மூவாயிரம் ரூபாய் ரொக்கத்தைத் தவிர சீர்வகை களுடன் பெண்ணை அழைத்துவந்தால் வரலாமேயன்றி மற்ற படி வருவதில் உபயோகமில்லை ! என்று கண்டிப்பான கடிதம் எழுதிவிட்டேன். நீ கட்டாயம் என் வார்த்தைக்குக் கட்டுப் பட்டே தீரவேண்டும். அசட்டுப் பிசட்டென்று ஏதா வது செய்துவைத்தா ல் தெரியும் சேதி! – என்று மிகவும் சாதுவான தன்மகன் வைத்யநாதனைப் பார்த்து அவன் பிதா பரமேச்வரன் கூறினார்.

வைத்யநாதன் இயற்கையிலேயே நல்ல அடக்கம், ஒழுக் கம், பெரியார்களிடம் கட்டுப்பட்டு அடங்கி நடக்கும் தூய குணம், பக்தி முதலிய சகல அம்சங்களும் பொருந்தியவன். தான் படிக்கும் ஒவ்வொரு புத்தகத்திலுள்ள நீதிகளின்படி கூடுமானவரையில் வழுவாமல் நடந்துவருகிற முறையை மேற் கொண்டவன். அடக்க ஒழுக்கமான பையனாக விருப்பினும் தனக்கு மனைவி வெகு ஜோராய் வரவேணும்; அவளுடன் அன் யோன்யமாய் வாழவேண்டும் – அவளை சிறந்த மேதாவியாகச் செய்து இன்புறவேண்டும். என்றெல்லாம் கனவுகண்டு எதிர் பார்ப்பான். ஏதோ கடவுள் அருளால் இவன் கனவு வாகியதுபோல் தற்கால நாகரீகப்படி S S L. C. பாஸ் செய்த ஒரு அழகான யுவதி கண் நிறைந்த எழிலும் சங்கீ தச் செல்வமும் ஒருங்கே அமையப் பெற்ற நந்தினி கிடைத்ததும் பரம த்ருப்தியடைந்துப் பூரித்தான்.

ஆனால் அந்தச் சந்தோஷம் அதிக நாள் நிலைக்க விடாமல் சிதறவடிக்கப் பாழும் பணத்திரை குறுக்கே மலை எரிமலையே தலைமீது போல் விழுந்துவிட்டதுபோன்றும் விழுந்ததுபோன்றதுமான வார்த்தைகளைக் கேட்டு மனது துடித்தது. இத்தனை காலமாகத் தன் பிதாவுக்கு எதிர்த்துப் பதில் பேசியறியாதவனாயினும் இன்று அவனையறியாது பேசி விடவே ஆத்திரம் துடிக்கின்றது. இயற்கையிலேயே தன் பிதா ருத்ரமூர்த்திபோன்றவர் என்பது நன்றாகத் தெரியும். தான் ஏதாவது சொல்விவிட்டால் வீண் ரஸாபாஸமாகி ஊர் சிரித்துவிடுமே! என்று அச்சம் வேறு பாதிக்கிறது.

தகப்பனாரும் பிள்ளையும் இருக்கும் நிலைமையைக் கண்ட அவன் தாயாராகிய தங்கம்மாளுக்கு உள்ளூற பயம் நடுக்கு கிறது. அவள் மகா விவேகி, மானவதி, உறத்துப் பேசி யறிய மாட்டாள். யௌவன பால்யத்தின் ரோஷத்தினால் வைத்ய நாதன் ஏதாவது அசட்டுத்தனமாய்ப் பேசிவிடப் போகிறானே என்ற பயத்தால் மறைவாக நின்று மகனையே உற்று நோக்கி, ''எதிர்த்துப் பேசாதே, சாந்தியை இழக்காதே, பொறுமையா யிரு. எல்லாம் சரியாகிவிடும். நான் எப்படியாவது வழி செய்கிறேன்'' என்று ஜாடையினாலும் மெல்ல உதட்டை மட்டும் அசைத்தும் பேசி மகனுக்குத் தெரிவித்தாள்.

தாயின் அன்புக்கு அபாரமாகக் கட்டுப்பட்டவனாகை யினால் அந்த ஜாடையை அறிந்து நடுங்கினான். தாயாரின் வார்த்தைக்குக் கட்டுப்படுவதா? அல்லது தந்தையின் பிற் போக்கான செய்கைக்கு எதிர்த்துப் பேசுவதா? என்ன செய் வது? என்று பெரிய குழப்பம் உண்டாகிவிட்டது. தகப்ப னாரை மீறிக்கொண்டு தான் ஏதாவது செய்துவிட்டால் பிளவும் சண்டையும் தாயாருக்கும் தகப்பனாருக்குமே மனஸ்தாபமும் உண்டாகி பார்ப்பவர்கள் சிரிக்கும்படியாகிவிட்டால் என்ன செய்வது. அம்மாவுக்கு ரோஷமும் அதிகம், மான மும் மரியாதையும் அதிகம். அதோடு பலவீனப்பட்டு துர்பல மானவள். இந்த நிலைமையில் அவளுக்கு ஏதாவது அதிர்ச்சி உண்டாகிவிட்டால் என்னசெய்வது? என்று உட்கார்ந்த இடத் திலேயே அசையாமல் பலபல எண்ணங்களுடன் குழம்பித் தவித்தவாறு தகப்பனாருக்குப் பதில் பேசாமலிருப்பதைக் கண்ட அவர் பிதா பின்னும் கோபமே அடைந்து ''என்னடா? ஏதோ பெரிய கோட்டையைப் பிடிப்பவன்போல் யோசனை செய்தவாறு பதில் பேசாதிருக்கிறாய் இங்கு பேசுகிறவன் மனி தன் பேசுவதாக எண்ணுகிறாயா! கழுதை கத்துவதாக நினைத்தாயா? டேய் ! இந்த மவுனத்திற்கும் யோசனைக்கும் காரணம் எனக்குத் தெரியுமடா, தெரியும். (இவன் எப்படி யாவது உளறிக்கொண்டு போகட்டும். நாம் ரகஸியமாய் மாம னார் வீட்டிற்குப்போய்விடுவேசம்!' என்று சூழ்ச்சிசெய்கிறாயா?

டேய்! இந்த உயிர் இந்த உடலில் இருக்கும் வரையில் அந்த காரியம் நடக்காதடா! நடக்காது. அம்மாதிரி நீ செய்தா யானால் உனக்கும் என க்கும் இதோடு கண்டிப்பாக விட்டுப் போயிற்று என்று எண்ணி விடடா! இதற்கெல்லாம் பல் இளிக்கும் பேர்வழி இந்தப் பரமேச்வரன் இல்லையடா? அதை முதலில் தெரிந்து கொள்ளு. பெற்றே றாரை த்வேஷித்துக் கொண்டும், அல்லது தானே. அந்தப் பணத்தைக்கொடுத்து அவர்கள் சீர்செய் ததுபோலும் பணம் கொடுத்ததுபோலும், அல்லது திருட்டுத் தனமாக மாயியார் வீட்டிற்குச் சென்று உறவாடி தகப்பனாராகிவிடுவதும், இதுபோல் எத்தனையோ கதைகளில் படித்திருக்கிறேன். அம்மாதிரி ஏதாவது இங்கு

கையாண்டால் தெரியும் சேதி. ஆமாம்! கண்டிப்பாக நான் சொல்கிறேன். நாணயமாய் அந்த மனிதன் சொல்லியபடி பணத்துடன் பெண்ணையும் சீரும் சிறப்புமாகக் கொண்டுவிடட்டும். பிறகு ஆக்ஷேபனையே இல்லை. வீண் பூச்சிமிட்டல் மிறட்டாதே!'' என்று கடுங்கோபத்துடன் கூறினான்.

வைத்யநாதன் தன்னைத்தான் எத்தனைக்கட்டுப்படுத்திக் கொண்டும் அவன் உள்ளத்தில் பொங்கும் ஆத்திரமும் கோப மும் அடங்காது பீறிக்கொண்டு வந்த வேகத்தில் ''அப்பா! நல்லது. ஒரு மகனுடைய சந்தோஷ வளர்ச்சிக்கு ஒரு பிதா எத்தனை பாத்யப்பட்டவர், எத்தனை அக்கரையும் அன்பும் கொண்டவர் என்பதை நன்றாகப் பாடம்கற்றுக்கொண்டேன். குடும்ப ஐக்யத்திற்கும் பிறர் பார்த்து மகிழ்ந்து பின்பற்றி நடக்கவேண்டிய உத்தம மார்க்கத்தில் ஒழுகுவதற்கும் நான் கடமைப்பட்டவன். ஆகையால் உங்களுடைய, முக்யமாய் என்னருமைத் தாயின், மனங்கோணாது நடக்கக் கங்கணங் கட்டிக்கொண்டவன் நான் என்பதை மறக்கவேண்டாமப்பா! தாங்கள் இந்த அனாவச்யமான கல்யாணத்தையே செய்யாமல் இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். வீணான பாபம், பழி, பரிகாஸம், ஏச்சுப் பேச்சு, தலைகுனிவு முதலிய எத்தகைய அம்சத்திற்கும் இலக்காகாமல் ஒரே நிலையான சந்தோஷத்துடன் இருக்கலாம்... சரி நான் வருகிறேன். ரயி லுக்கு நேரமாகிவிட்டது'' று துடிதுடிக்கக் றீவிட்டுத் தந்தைக்கு நமஸ்காரம் செய்துப்பின் தாயாரின்காலைத் தொட்டு வணங்கி, ''அம்மா! நான் என்றும் உன் அன்பிற்கு கட்டுப்பட்டவன். அப்பாவை எதிர்த்து எதுவும் செய்துவிட மாட்டேன். குடும்ப கண்ணியத்தைச் சிதைத்துக்கொண்டு சந்தோஷமனுபவிப்பதானது நரகவேதனைக்கும் மேம்பட்டது என்பது எனக்குத் தெரியும். கதைகள் படிப்பதும், நாடகங்கள், சினிமாக்கள், பார்ப்பதும் மக்கள் புத்தி விசாலித்து நல்ல நீதி போதனையைக் கற்று வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டுச் சரியானமார்க்கத்தில் நடப்பதற்காகவே சிலசத்குண சீலர்கள், அனுபவஞானிகள் பக்திரஸம் இதயத்தில்தோய்ந்த உத்தமர்கள் எழுதுகிறார்களேயன்றி பிறர் கெட்டுப்போவ தற்காக எழுதவில்லை.

ஆனால் கலியின் கோரதாண்டவத்தில் காஸ்திகத்தைப் பரப்பி ஆஸ்திகத்தை யழித்துஜாதிமத மகிமைகளை ஒழித்து, நீதி நியாயம், பழக்கவழக்கம், தர்மம் முதலிய உயர்ந்த லக்ஷ யங்களைத் தாக்கியும் உதவாக்கரை விஷயங்களை ப்ரசாரம் செய்தும் மதத்வேஷங்களைக் கிளப்பியும் வீணான கலகப்புரட்சி களைப் போதித்தும் மக்களின் அறிவைக் கெடுத்துக் குட்டிச் சுவரடிக்கும் முறையில் ஒருசிலர் புத்தகங்கள் எழுதியும் அந்தக் கொள்கைகளைத் திரைப்படமாக்கியும் அதீத உணர்ச்சியில் நாட்டைநாசம்செய்யவும் முன்வந்திருக்கிறார்கள், ஆனால் அவை களுக்கு இதயத்தில் இடங்கொடுக்கும் கோழை, அறிவிலி உன் மகனல்ல, உன்னுடைய பவித்திரமான உதிரத்தில் ஊறிய தனால் என்னிடம் மேல்குறித்த பேய்கள் கிட்டஅணுகாது நீகவலைப் படாதே : நான் வீண் புரட்சி செய்யும் கலாட்டா மனித னில்லை. போய் வருகிறேன்... அப்பாஎன்னைஒருபண்டமாகமதித்துவிலைகூறிவிற்கத்துணிந்து5ஆயிரத்துக்குப்பேசி விற்றுவிட்டார். இந்த விலைவார்த்தை முன்பே தெரிந்திருந்தால் கல்யாணத்திற்கே இசைந்திருக்கமாட்டேன். விற்ற பண்டத்தின் பா திக்ரயந்தான் வந்தது. மிச்சக்ரயமும்

வந்த பிறகு அப்பாவின் இஷ்டப்படி நடக்கட்டும்! இந்த வாதகூி ணைப் பேய் நம் நாட்டைவிட்டு என்று ஒழியப்போகிறதோ! அன்றுதான் நம்முடைய புனிதமான சமூகத்தில் உண்மை யான சந்தோஷம் நிலவி மக்களின் இதயங்கள் இன்பக்கடலில் உல்லாஸ பவனி வரும்! இதையொழிக்க எந்தத் தீவிரவாதியும் சட்டம் கொண்டு வரத்துணியவில்லை ! ஏன் ! தன் மகனையும் பெண்வீட்டாரிடம் விலை கூவி வ்யாபாரம்செய்வதற்குப் பங்கம் உண்டாகிவிடுமல்லவா..

என்று தாயாருடன் ஆத்திரமாகப் பேசும் மகனைக்கண்டு பரமசிவ வனுக்கு உண்மையில் முக்கண்ணமூர்த்தியைப்போன்று கோவம் வந்துவிட்டதால் வாயில் வந்தபடி தாறுமாறாகத் திட்டி விட்டு ஒரே ஓட்டமாகச் சென்றுவிட்டார்! பாவம் தங்கம் மாவுக்கு அபாரமான பயம் உண்டாகி நடுக்கலே எடுத்துக் கொண்டது. 'அம்பீ ! ஏன் எத்தனை சொல்லியும் உன்னை அடக்கிக்கொள்ளாது பேசி விட்டாயே ! அப்பாவின்மூர்க்கத் தனமும் அசட்டுப் பிடிவா தமும் உனக்குத் தெரியாதா! நீயும் ஊருக்குப் போய்விடப் போகிறாய். உன் பிதாவின்முறைப்புக்கு என்னால் சமாளிக்கும் சக்தி ல்லையே ! என்னசெய்வேன். நீயாவது சற்று அடங்கிப்போகக் கூடாதா? என்று கண்ணீர் விடுவதைக் கண்ட வைத்தியநாதன் மனது உருகிவிட்டது,

அம்மா! ஏதோ அறியாத்தனமாய்ச் சொல்லிவிட்டேன். உன்னைப்போல் அந்தப் பெண்ணைப் பெற்ற தாயும், பெண்ணும் கலங்குவார்களல்லவா! என்று நினைத்தபோது நான் சற்று தவறிவிட்டேன். மன்னித்துவிடு. அப்பாவை நானே சமாதானம் செய்து அழைத்து வந்துவிட்டுவிட்டுப்போகிறேன். சரிதானாம்மா என்று பணிவுடன் கூறியவாறு சொன்னான்.முன் றிதெய்வங்களை மனம்நோகவைப்பது பாவமா? முன்பின்ன யாது என்னை மாலையிட்டு என்னால் எத்தனையோ சந்தோஷத் தையடைய இரவுபகல் எதிர்பார்த்து ஏங்கும் நந்தினியின்மனத் தைநோகவைத்து அதனால் அவள்பெற்றோர்களும்கலங்கித்தவி க்கச்செய்வது பாதகமா? என்னதர்மசங்கடமான நிலைமையில் என் பிழைப்பு வந்துவிட்டது! என்று அவன் உள்ளம் துடித்தது.

எனினும் முன்னறிதெய்வமாகிய தன் அன்னையின் மனஅமைதியைத் தான் முதலில் கவனிக்கவேண்டும் என்று தோன்றிய தால் உடனே தகப்பனார்சென்றுள்ளவிடத்திற்குஓடி அவரைச் சமாதானம் செய்துத் தேற்றி அழைத்துவந்து தன் தாயாரிடம் சேர்த்துவிட்டு அவன் ரயிலுக்குச் சென்றான். அவன் இதயத்தில் கவலை என்கிற மேகம் கப்பிக்கொண்டது.

ARANYANI

VIJENI

CHAPTER - 4

2016 A D, December, Kentucky

John Wilfer Keiser a Greco-American fondly took the cat Tiger and put him in his coat pocket. He felt the warmth of the animal. He loved its name Tiger and it had lines on his back. He fed him with the burger from his pocket. MurGosh a Tamil youth who had allowed John Keiser to share his room is worried about John Keiser's activities. Now Keiser feeds the cat with the burger and if the cat becomes obese then he may take the animal to a gym for a regular workout.

MurGosh and John Keiser had stories for their names. MurGosh an ardent devotee of Aravind Gosh changed his name from Murugesan to MurGosh. Keiser is called after the German name Keiser [King] which was borrowed from the Latin word Caeser [King]. John Keiser used to say that when he was born he had a lot of hair on his head like Caeser.

Keish means hair in some Indo-European languages and anything worn above the head represents the power of a ruler. Now Keiser believes he is a mighty king.

Months before, midnight, John Keiser rang Murgosh

'Why didn't you tell me that tiger is the symbol in the Chola's flag?

'You didn't ask me.'

John Keiser was silent. Perhaps he agreed.

The other day John Keiser asked MurGosh in an exciting voice,

'In the excavations of Indus valley civilization many bulls are seen. Do you know that? Are you not proud of that?'

MurGosh said, 'What's wrong with you'? Why are you excited?'

John Keiser didn't reply.

